# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

## துன்னாலை

# திருக் குடமுழுக்கு மலர்



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மகாசபை வெளியீடு

3 - 7 - 1977

உ

ஓம் நாராயணாய நம:

# துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

# திருக் குடமுழுக்கு மலர்

குலந்தரும்; செல்வந் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும்; நீள்விசும் பருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலந்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்;
நாராயணா என்னும் நாமம்.

— திருமங்கையாழ்வார்

வெளியீடு:

**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மகாசபை**

**3 – 7 – 1977**

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

உ

# நாமசங்கீர்த்தனம்

நவாலியூர், பிரதிஷ்டாசிரோமணி
**பிரமஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்கள்**

உலகத்தில் ஆன்மகோடிகளாகிய மக்கள், உயிருடன் இருந்து வாழ வைப்பது இறைவழிபாடு. இது, காணபத்தியம், சைவம், வைஷ்ணவம், கௌமாரம், சாக்தம், சௌரம் என ஆறு பிரிவுகளை உடையது. இதில் மக்கள் தாங்கள் ஒவ்வொருவரும் தமது சிந்தனைக்கேற்ப ஒவ்வொரு மத நூல்களின் வழியே வழிபாட்டை நடத்தி அருள்பெற்று வாழ்கிறார்கள்.

ஆகவே, பக்தியின் ஸ்வரூபத்தையும், அது எவ்வகைப்பட்டது என்பதையும் ஆராயுங்கால் பகவானுடைய நாமங்களில் ஏதாவதொன்றைப் பரிசுத்தமாக இருந்து ஜபிப்பதே சிறந்தது என்றும், இது யாவராலும் சுலபமாகச் செய்யக்கூடியதென்றும், இதனால்தான் நமது வாழ்வு கடைத்தேற முடியும் என்றும் சாஸ்திரங்கள் புகழ்ந்து கூறுகின்றன.

ஒவ்வொரு நாளும் காலையில் துயில் எழுந்து நித்திய கர்மானுஷ்டானத்தை முடித்துப் புனிதமான இடத்தில் அமர்ந்து, மனம், வாக்கு, காயம் என்பவற்றை ஒருவழிப்படுத்தி சிவனுடையதோ, அல்லது விஷ்ணுவினுடையதோ, தேவியினுடையதோ, ஒரு நாமத்தை குறைந்தது 108 தரமாவது ஜபிக்கவேண்டும். இது, ஆன்மார்த்த நாம சங்கீர்த்தன வழிபாடு ஆகும்.

இதைவிட, விசேஷ தினங்களில் காலையிலோ, அல்லது மாலையிலோ சமீபத்தில் உள்ள ஆலயத்தை அடைந்து, பக்தர்களுடன் சேர்ந்து பகவன் நாமாவை வெட்கப்படாது சிலநிமிஷநேரம் பாராயணம் செய்தல்வேண்டும். உற்சவ காலங்களில் சுவாமியின் பின், வீதிகள் தோறும் நாம் பாராயணம் செய்தல், எமக்கு நல்லனவாகிய பலன்களைப் பெறவும், நமது கிராமம் நாம பாராயணத்தின் மகிமையால் சுபிட்சமான நிலையைப்பெறவும் ஏதுவாக இருக்கும் என்பது சாஸ்திரங்களாலும் நாம சங்கீர்த்தனம் செய்து கடைத்தேறிய பெரியார் வாழ்க்கையாலும் நாம் அறியக்கிடக்கிறது காணலாம்.

நமப்பார்வதீபதயே. கோவிந்த நாம சங்கீர்த்தனம்.

சுபம்.

**சாமி விஸ்வநாதக் குருக்கள்**

வ

பேராதனை வளாகத் தமிழ்த்துறைத் தலைவர்

பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

## துன்னாலை வல்லிபுர ஆழ்வார் கோவிற் கும்பாபிஷேகம்

தமிழர் பல்லாண்டாக ஆட்சிசெய்து வந்த ஈழத்து வடபகுதியிலே வரலாற்றுப் புகழ் பெற்றது துன்னாலை வல்லிபுர ஆழ்வார் கோவில். யாழ்ப்பாண மக்களின் விஷ்ணு வழிபாட்டின் சின்னமாக இயங்கும் இக்கோவில், பக்தர் பலரின் முயற்சியாற் பல்லாண்டு பொலிவுற்று விளங்கி, இவ்வாண்டு கும்பாபிஷேகமும் காண்கிறது.

ஆகமங்கள் கூறும் கிரியைகளுள் முக்கியமானவையாகவும் அருளுக்கே அடிப் படையானவையாகவும் கும்பாபிஷேகக் கிரியைகள் விளங்குகின்றன. மேலும் திருக் கோவில்களில் இடம்பெறும் நித்திய நைமித்திக வழிபாடுகளைப் போலன்றி, ஒவ் வொரு கோவிலிலும் பல்லாண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்த்தப்பெறுவதாகவும், தரிசனத்துக்கு அருமையுடையதாகவும் கும்பாபிஷேகம் அமைந்துள்ளது.

கும்பாபிஷேகக் கிரியை முழுவதும், எங்கும் பரந்துள்ள இறைவனைத் திருக் கோவிலிலும் திருவுருவத்திலும் வெளிப்பட்டு நின்று திருவருள் செய்யுமாறு வேண்டிக் கொள்ளும் பான்மையில் அமைந்துள்ளது. உயர்ந்த தத்துவ அடிப்படைகள் பலவற்றைக் கொண்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது, எல்லா உயிர்களுக்கும் இறைவன் திருவருள் எளிதிற் கிட்டுமாறு செய்ய வழிவகுப்பதாகும்.

வல்லிபுர ஆழ்வார் கோவிற் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மலர் ஒன்று வெளிவருவது வரவேற்கவேண்டியது. கோவிற் பரிபாலனத்தில் முக்கிய பங்கு கொண்ட யாவருக்கும் மலர்க்குழுத் தலைவர், திரு. த. கெங்காதரன் அவர்களுக்கும், செயலாளர் திரு. ச. தேவதாசன் அவர்களுக்கும், ஏனைய தொண்டர்களுக்கும், நல்ல மனமும், நல்ல நோக்கும், நல்ல வாழ்வும் உண்டாகத் துன்னாலை வல்லிபுர ஆழ்வாரை வேண்டி நல்லாசி கூறுகின்றோம்.

சு. வித்தியானந்தன்

பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறும்

# பிரார்த்தனை உரை

இறைவன் உயிர்க்குயிர்; 'அவனன்றி அணுவும் அசையாது'. அவனே நம்மை நடத்துபவன்; அவன் கருத்தறிதற்குச் செய்யும் அபிஷேகமே உண்மை அபிஷேகம்; அஃது, இருதயமாகிய கும்பத்தில் அன்பு என்கின்ற நீரைப் பூரித்துச் செய்வது; 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவது'.

இது சித்தித்தற் பொருட்டே கோயிலிற் கும்பாபிஷேகம் நடத்துகின்றோம்.

மகாவிஷ்ணு காவற் கடவுள்; விஷ்ணுவாய் அருள்பலரும் அந்த இறைவனே.

மகாவிஷ்ணுவாகிய வல்லிபுரநாதர் நமக்கு நல்வழி காட்டுவாராக என்று இக்கும்பாபிஷேக தினத்திற் பிரார்த்திப்போமாக.

சி. கணபதிப்பிள்ளை

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறைத் தலைவர்
**கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் வழங்கிய**

# ஆசியுரை

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு இவ்வாசியுரையை வழங்கு வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஈழத்துத் தமிழ்மக்களின் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஆலயங்களுள் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் ஒன்று. யாழ்ப்பாண மக்களின் வரலாறு, பண்பாடு ஆகியனவற்றைத் துலக்கும் பல சான்றாதாரங்கள் இக் கோயிலைச் சூழ்ந்துள்ள இடங்களிலே பெரிதும் கிடைத்துள்ளன. பல்லவ, சோழ மன்னர்கள் தமிழ்நாட்டை ஆண்ட காலத்திலே தமிழ் மக்களுடன் நெருங்கிய தொடர்புடையதாகக் கோயில் திகழ்ந்தது. இன்றும் தமிழ் மக்களின் பண்பாட்டுடன் தொடர்புடைய தாகக் கோயில் திகழ்கின்றது. வரலாற்றுப் பெருமையையும், அமைதி, அழகுள்ள சூழல் ஆகியனவற்றையுங்கொண்ட பிரதேசத்திலே வீற்றிருக்கும் ஆலயத்தைப் புனரமைத்து, குடமுழுக்கிட்டு, அதனை நினைவுகூர மலர் ஒன்றினையும் வெளியிடுதல் பாராட்டுக்குரிய விடயமாகும். தமிழ்மக்களின் பண்பாட்டுடன் தொடர்புடைய இம்முயற்சி வெற்றியடைய என் மன மூவந்த ஆசிகள்.

**அ. சண்முகதாஸ்**

ஓம்

ஸ்ரீமந் நாராயணாய நம:

# சமர்ப்பணம்

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே!

ஈழத் தமிழகத்திலே விளங்கும் தொல்பெருமைக்குரிய பல்லோர் புகழும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம், புராதன ஈழத்தின் வடபால் இருந்த யாழ்ப்பாணப் பேரரசர்களான சிங்கை யாரியச் சக்கரவர்த்திகளின் காலத்துக்கும் முற்பட்ட காலத்தில் உருவானது. சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளின் இராசதானியாகிய சிங்கபுரம் என்பது ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பாங்கிலே உருவானுந் திருவானு முயர்ந்து விளங்கிய தென்பது சரித்திர வரலாற்றுண்மை.

இப்புராதன விஷ்ணு ஆலயம், விசேஷமாக வடமராட்சிப் பகுதியிலுள்ளாராலும், பொதுவாக ஈழத்துத் தமிழ் மக்கள் பலராலும் வழிவழியாக வழிபாட்டுத் தலமாகப் போற்றப் பட்டு வருகின்றது.

இவ்வாலயம் யாழ்ப்பாணம் தன்னரசிழந்து அன்னியஅரசுக் கடிமையானதினுலும், ஆலயத்தின் நிலதல உரிமையாளர்களென்போரின் தன்னுதிக்க பரிபாலன நிருவாகத்தினுலும், வழிபடுவோர் சகலரினதும் உள்ளான ஆதரவுக்குமுள்ளாகாது, நலிந்து நலங்குன்றி மந்த கதியான வளர்ச்சியுடனேயே பன்னெடுங் காலம் தன்னுருக்காட்டி நின்றது.

இதன் நிருவாகத்தில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் பல. அவையெல்லாம் சொல்லவும் எழுதவும் முடியாத எல்லையிகந்தன. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமியின் நல்லருட் பேற்றினுல், சில பொதுநலத் தொண்டர்கள் எடுத்த இடையீடற்ற ஊக்கத்தால் நிருவாக பரிபாலனம் பொதுமக்களின் கைப்புகுவதாயிற்று. இந்நிருவாகத்தினரின் அயரா முயற்சியினுலே ஆலய நித்திய நைமித்திய நியமங்கள் நாடுபுகழும் நீடு சிறப்புடன் நிகழ்வதோடு, ஆலயக் கட்டிடங்கள், கோபுரங்கள், மதில்கள், வீடுகள் யாவும் புனர்நிர்மாணஞ் செய்யப்பட்டுப் புத்துணர்வும் புத்தொளியும் பெற்றுத் திகழ்கின்றன.

புதிய நிருவாகத்தினர் தாம் கையேற்ற குறுகிய காலத்துக்குள்ளேயே திருப்பணி வேலைகளை யெல்லாம் சிறப்புறச் செய்ததோடு, கோவிந்தனும் மாயோனுக்குக் குடமுழுக்காட்டு விழாவைக் குறைவறச் செய்து வைத்தனர்.

குடமுழுக்காட்டு விழாவின் பின், இதன் ஞாபகமாக விழாமலர் ஒன்று வெளியிட்டு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மான்மியம், வரலாறு ஆகியவற்றை யெல்லாம் இந்து வைஷ்ணவ மக்களின் சிந்தை குளிர, அறிய வைக்கவேண்டுமென்று விரும்பிய மகாசபையார் அதற்கெனச் சிறியேன் தலைமையில் ஒரு குழுவைத் தெரிந்து இவ்வரும் பணியைச் செய்து முடிக்கும்படி விதித்தனர். இக்கைங்கரியத்தில் எனது பங்கு சிறிதே. ஆயினும், ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் பேரருளினுலும், மலர்குழுச் செயலாளர், பல்கலைக்கழக மாணவர், அன்பர் திரு. சரவணமுத்து தேவதாசனது சலிப்புறுப் பேருழைப்பினுலும், நாம் உதவி நாடிய போதெல்லாம், வேண்டிய உதவியை விழைந்து வழங்கிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், அன்பர்கள், அபிமானிகள் ஆதரவினுலும், மண்டலாபிஷேக விழா நாளிலே இன்று இதனை வெளியிட முடிந்தமை குறித்துப் பேருவகை கொள்கிறேன். காலம் போதாமை காரணமாய், இம்மலரிலே பல குறைகள் நேர்ந்திருக்கலாம். அவைகளை எல்லாம் ''குற்றங் களைந்து குணமளந்து கொள்ளுதல் கற்றறிந்த மாந்தர் கடன்'', என்றவாறு பெருமனது கொண்டு மன்னித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, பணிந்து வேண்டி இப்புனித மலரை ஸ்ரீ வல்விபுர ஆழ்வார் கோவில் தவநாயகராகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தி திருவடிகளுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

கொண்டல் வண்ணனை, கோவல னுய்வெண்ணெய்
உண்ட வாயன்என் உள்ளங் கவர்ந்தானை,
அண்டர் கோனணி அரங்கன்என் அமுதினைக்,
கண்ட கண்கள்மற் றென்றினைக் காணுவே.

நாலியவத்தை,
துன்னுலை

த. கெங்காதரன்
(மலர்க்குழுவின் சார்பில்)

உ

ஓம் நமோ நாராயணு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் துணை

# தலைவர் உரை

திரு. வ. செல்லத்தம்பி அவர்கள்
சட்டத்தரணி
பருத்தித்துறை

**அடியார்களே, அன்பர்களே,**

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் மிகப் பழமை வாய்ந்தது. மனமுவந்து தன் அடியார்களுக்குத் திருக்காட்சி கொடுத்தருளவும் திருவருள் புரிந்தருளவும் இங்கு மீனமாய் வந்தருளினுன் ஸ்ரீமந் நாராயணன்; இன்றும் சக்கரமாய் மறைந்து நிலைத்து நிற்கின்றுன் எம் பெருமான்.

கடல் கோளாலோ, உக்கிரமான காற்றுலோ, அந்நியர் ஆட்சியாலோ, மற்றும் பிற சமயத்தவர் தலையீட்டாலோ பண்டைய ஆலயம் சேதமுற்றிருக்கலாம்; சகல பிரபஞ்சங்களையும் காக்கும் கடவுளாகிய மாயவன், தான் உவந்து வந்து நிலைத்து நிற்கும் இத் திருத்தலத்தைச் சேதமுறவும், சீர்குலையவும் விடச் சம்மதிப்பானே; ஒருகாலும் அவன் அவ்வாறு திருவுளம் கொள்ளான்.

இவ்வாலயம், சில காலமாக நல்ல பரிபாலனத்தில் இருக்கவில்லை என்பது எம்பெருமான் திருவுளம் போலும்; இதனுற்றுன், இன்று இவ்வாலய பரிபாலனம் ஒரு சபையின் கண்காணிப்பிலேயே இருத்தல் வேண்டும் என்று நீதிமன்றம் உரிமை வழங்கியிருக்கின்றது.

அடியார்கள் அன்பர்கள் திருவுள்ளங்களில் தோன்றுத் துணையாய் அவ்வாழ்வார் நின்று ஊக்க, இவ்வாலயப் புனரமைப்பில் இப்பொழுதுள்ள பரிபாலன சபை முதல் அடி எடுத்து வைக்கின்றது. இவ்வாலயத்துக் கர்ப்பக்கிருகத்தை உயர்த்தியும், சிற்ப ஓவியங்களைப் புதியனவாக அமைத்தும், மற்றும், விநாயகர், நாகதம்பிரான், நவக்கிரகம், ஆஞ்சநேயர் இருப்பிடங்களுக்குப் புதுக் கோபுரங்களை ஆக்கியும், இப்போது திருப்பணிகள் சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. இவை யாவற்றையும், பல இடையூறுகளுக்கிடையில், மிகக் குறுகிய காலத்தில் முற்றுவித்து, இன்று திருக் குடமுழுக்கு வைபவத்தை நிகழ்த்துகின்றேம். எல்லாம் அவன் திருவுள்ளப்படியே நடக்கின்றது. தொடர்ந்தும் பல திருப்பணிகள் மேற்கொள்வதற்கு அவன் அருள் கிடைக்கும் என்பது இச் சபையாரின் அசையாத நம்பிக்கை.

இவ்வாலயப் புனரமைப்பின் பொருட்டாகத் திருப்பணிச் சிற்ப ஓவியங்களை மிகக் குறுகிய காலத்துள், தமது சிரமத்தைப் பொருட்படுத்தாமல், சிறப்புடன் அமைத்துத் தந்த சிற்பாசிரியர்களுக்கு வல்லிபுர ஆழ்வார் பேரிலும், நிர்வாகசபை மகாசபை பேரிலும் இம் மலர் வாயிலாக நன்றி கூறுகின்றேம்.

இனி, இன்று நிகழும் குடமுழுக்கு விழாவை ஆகம விதிகளில் அணுவளவும் வழுவாது முன்னின்று நடத்தி அருளிய பிரதம குருக்களாகிய பிரமஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களுக்கும், அவரது கூட்டத்தாருக்கும், இவ்வாலய நித்திய பூசைகளைக் கிரமமாகவும் அன்போடும் நடத்திவரும் குருக்களாகிய பிரம்மஸ்ரீ க. இராமச்சந்திரக் குருக்கள் அவர்களுக்கும் நன்றி செலுத்துகின்றேம்.

இறுதியாக, ஆலயப் புனரமைப்புக்கு நாம் கேட்டபோது மனமுவந்து நிதியுதவி, பொருளுதவி, சரீரஉதவி அளித்த அன்பர்களுக்கும், குறிப்பாக, சிரமதானமூலம் தொண்டு செய்து உதவிய இளைஞர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இத் திருக் குடமுழுக்கு மலர் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருவடிகளில் அன்புடன் அர்ச்சிக்கப்பட்ட மலராதலால், அடியார் ஒவ்வொருவரது கையிலும் இஃது இருத்தல் அவன் திருவருள் கிடைத்தலாகும்.

இவ்வாலய பரிபாலன சபை, மேலும் பல திருப்பணிகளை மேற்கொள்வதற்கு அடியார்களதும் அன்பர்களதும் நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவி, மதியுதவி ஆகியவற்றை மிக்க தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றது.


வணக்கம்.

**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்து மகாசபைத் தலைவரும் செயலாளரும்.**




இடமிருந்து வலம்: *திருவாளர்கள் : வ. செல்லத்தம்பி, J. P. சட்டத்தரணி (மகாசபைத் தலைவர்), த. கெங்காதரன் (மகாசபைச் செயலாளர்).*

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்துத் தர்மகர்த்தா சபை



இடமிருந்து வலம் : திருவாளர்கள் : சி. வல்லிபுரம், சி. வே. சிவ சுப்பிரமணியம், க. கணபதிப்பிள்ளை, J. P. (முகாமைத் தர்மகர்த்தா, பொருளாளர்), ச. மா. கந்தசாமி, ப. இராமலிங்கம் (செயலாளர்)

ஓம் நமோ நாராயணா

# முகாமைத் தர்மகர்த்தா, பொருளாளர் உரை

**திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள், J. P.,**
*தர்மகர்த்தா சபைத் தலைவர்,*
*புலோலி*

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய விசேடங்கள் மூன்றும் ஒருங்கமையப் பெற்ற புகழ் மிக்க தொன்மையுடையது ஸ்ரீ வல்லிபுரசுவாமி ஆலயம். ஆயினும், இது சந்தர்ப்ப சூழ்நிலை நன்கமையாத காரணத்தாற் பல்லாண்டுகளாகப் புதுக்க அமைக்கும் வேலைகளெவையும் மேற்கொள்ளா நிலையிலேயே இயங்கி வந்தது. 2–8–76இல் இவ்வாலய நிர்வாகம், நீதிஸ்தலம் மூலமாகத் தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைக்கப்பட்டபோது, ஆலயத்திலிருக்கும் குறைபாடுகளெவற்றையும் யாம் அறிந்திலோம். பொறுப்பேற்றதும் ஏற்காததுமான தருணத்தில், குருக்கள் கூறிய முதல் முறைப்பாடு ''மூலஸ்தானம் ஒழுகுகிறது; நின்று பூசைசெய்ய முடியவில்லை'' என்பதாகும். இவ்வார்த்தைகளைக் கேட்டு, தர்மகர்த்தா சபையினரும், மகாசபைத் தலைவர் திரு. வ. செல்லத்தம்பி அவர்களும், காரியதரிசி திரு. த. கெங்காதரன் அவர்களும், யானும் மிகவும் அதிர்ச்சியடைந்தோம். ஆலயத்தைப் பொறுப்பேற்றபோது, பணமெதுவும் ஆலயக் கணக்கில் இருக்கவில்லை. ஊழியர்களும், பூசகர்களும் வேதனம் போதியதில்லை என முறையிட்டுக்கொண்டார்கள். இந்நிலையில் புனருத்தாரண வேலையையும் மேற்கொள்வதென்றால், இலகுவான காரியமல்லவே. என்றாலும், 'திருவருள் துணையுண்டு' என்ற துணிவோடு கருமங்களை மேற்கொண்டோம்.

சேவையாளர்களின் வேதனத்தை ஓரளவு அதிகரித்தல், பக்தர்களுக்குச் சௌகரியமான முறையில் உரிய முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்ட நேரங்களிற் றவறாது பூசை செய்தல் ஆகிய கருமங்களில் முதலில் ஈடுபட்டோம்; பின்பு, திருவிழா நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபட நிகழ்த்தி முடித்தோம்; அதன்பின், புனருத்தாரண வேலையை ஆரம்பித்தோம்; பலர் தாமாகவே முன்வந்து பணமுதவி ஊக்கப்படுத்தினர். நாங்கள் சென்ற இடங்களிலும் வரவேற்று மனமுவந்துதவியோர் பலர்; அறிந்தறிந்து தாமே கொண்டுவந்து உதவியவர்கள் இன்னும் பலர். இவர்களுக்கெல்லாம் நாம் நன்றி கூறுகிறோம்.

நாங்கள் கேட்டுக்கொண்டபடி, இந்தியாவைச் சேர்ந்த திரு. வீ. நாகலிங்கம் ஆச்சாரியும், உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு. ப. தங்கத்துரை அவர்களும் உற்சாகமாக உழைத்து, தமது முழுத் திறமையையும் உபயோகித்து, குறித்த கால எல்லையிற் றிட்டப்படி மிக அழகுறக் குடமுழுக்குக் கருமத்தை நிறைவேற்றியதற்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தர்மகர்த்தா சபையினரும் தமக்குரிய பல பல தொல்லைகளையும் பொருட்படுத்தாது ஒருங்குகூடி அயராதுழைத்தமைக்கு, தர்மகர்த்தா சபைத் தலைவன் என்ற முறையில் நன்றி கூற, யான் கடமைப்பட்டுள்ளேன்.

திருவாளர் நா. கிருஷ்ணகுமார் தமது தந்தை திரு. வீ. ப. நாகலிங்கம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட உன்னத பணியின் தொடர்ச்சி என்ற முறையில், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அயராதுழைத்த சிறப்பை நாம் வியக்கவேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

இத் தேவஸ்தானத்துப் பிரதமகுரு திரு. க. இராமச்சந்திரக் குருக்கள் மனம் கோணாது மிகவும் உற்சாகத்தோடு வேண்டிய வேண்டிய முக்கியபணிகளையெல்லாம் எமக்குக் கூறி, இப்பணி சிறப்புறச் செய்தமை பாராட்டற்குரியது. அவரும், நவாலியூர் பிரதிஷ்டா சிரோமணி, சாமி விஸ்வநாதக்குருக்கள் அவர்களும், இன்னும் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளிற் பங்குபற்றிய குருக்கள்மார் அனைவரும் ஒருங்குபட்டுழைத்து இக் கும்பாபிஷேக விழாவைச் சிறப்புற முடித்தமைக்காக என் சார்பிலும், மற்றும் தர்மகர்த்தாசபை அங்கத்தவர்கள் சார்பிலும், மகாசபையினர் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் நன்றி கூறுகிறேன்.

''நலம்தரும் சொல்லைநான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்'' எனக் கூறிய அடியார் வாக்கை, நான் மீண்டும் மீண்டும் நினைவு கூருகிறேன்: நலந்தரும் சொல் என்னும் நாதன் நாமமாகிய ''ஓம் நமோ நாராயணா'' என்ற மந்திரத்தை ஆலயத்திற் பதித்து, அதையே சதா உச்சரித்துக்கொண்டு கருமமாற்றியமையினாலேயே இப்பணி நலம் பெற முடிந்ததென்பதே எனது திடமான நம்பிக்கை.

ஓம் நமோ நாராயணா

வணக்கம்.

ஹரிஓம் நாராயணாய நம:

# மலர்க்குழுச் செயலாளர் செப்புகின்றார்

திரு. ச. தேவதாசன் அவர்கள், Dip. Hons. (W. C. E.)
(நுண்தொழில் வல்லுநர் - வைத்தியபீடம்
கலைப்பட்டதாரி மாணவன் 3ஆம் வருடம்
பேராதனை வளாகம்)

செங்கமலக் கண்ணன் திருமா றுறைமார்பன்
பைந்துளப னெங்கள் பதி.

புராதனத் தமிழ் மக்கள் தேடிவைத்த ஆத்மீகச் செல்வங்கள் சைவம் வைஷ்ணவம் என்ற வைதீக சமயங்களே; இவை இரண்டும் இறை நாம பேதமல்லாத தத்துவங்கள், கொள்கைகளிலெல்லாம் மிகுதியும் அபேதமானவை; சைவர்கள் சிவத்தையும், வைஷ்ணவர்கள் விஷ்ணுவையும் வழிபடுவதும், ஒன்றுகாண்பதும் நீண்ட பெருவழக்காய் நிலைத்து விட்டன. இதனையே இந்து சமரசமென்பர்.

தமிழ்ப்பெருங் குடிகளாகிய நாம் எல்லாம் "கோவில் இல்லா ஊரிற் குடி இருக்க வேண்டாம்" என்ற முதுமொழியால் எச்சரித்து அறிவூட்டப்பட்ட உறுதியான பாரம்பரியம் உள்ளவர்கள்; நாம் வாழக் கூடியிருக்கும் ஊர்களிலெல்லாம் கோவில்கள் சூழக் கூடியிருப்பது, நாளிலும் பொழுதிலும் காணும் நேத்திரானந்தக் காட்சிதானே! எத்திசை நோக்கினும் பக்திக் கனல் எழுப்பும் பராபர சந்நிதான, வளங்காணும் உளங்கொண்ட இனம்தான் தமிழ் இனம்.

வளங்காட்டும் இக் கோவில்களுள் ஒருசில, புராதனச் சிறப்பும், புதுமைப் பொலிவும், அற்புத ஆட்சியும் அமையப்பெற்றனவாய்ச் சகப்பிரசித்தி பெற்றுள்ளன. இவற்றுள் ஒன்றாகவும் மற்றொன்று ஈடின்றாகவும் ஈழத்திருநாடு பெறக் கிடைத்த வைஷ்ணவத் திருக்கோவில்தான் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருக்கோவில்.

இக்கோவில் ஈழத்தமிழகம் நீணாளாகத் தன்னரசிழந்து அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததனாலும், இதன் பரிபாலனம் வழிபடுவோர்க்கெல்லாம் பொதுவான சமத்துவ பரிபாலனத்திலமையாது பிரபுக்கள் உரிமையாக இருந்ததினாலும் உருவாலும், திருவாலும், வரவாலும் விரிமலராகப் பொலிவுறாது குவிமலராகவே பன்னாட் பொலிவுற்று நின்றது. இது நாம் யாவரும் அறிந்த உண்மை. இந்நிலை நீங்கிச் சமீப காலத்தில் சர்வ சமத்துவ, சமத்துவ நிர்வாக பரிபாலனத்தின் கீழ்—அதாவது மக்கள் மகாசபைப் பரிபாலனத்தின் கீழ்—பரிபாலன மாற்றம் பெறலாயிற்று. இதற்காக முன்னின்று உழைத்த பெரியார்கள், அமரர்களான முன்னாட் கோவில் அதிகாரி துன்னாலை, திரு. வ. செல்லத்துரை அவர்களும், "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனத் தம் உடல், பொருள், ஆவி மூன்றினையும் அர்ப்பணம் செய்து மகாசபையின் வருகைக்கு முதல்வராக இருந்தவர் என மதிக்கப்படும் புலோலி திரு. ப. நாகலிங்கம் அவர்களுமே. மேலும், இவர்களுடன் இணைந்து செயலாற்றிய நெல்லியடி, திரு. சி. வல்லிபுரம், வல்வெட்டித்துறை, திரு. வே. சிவசுப்பிரமணியம், கற்கோவளம், திரு. மு. சதானந்தன், சி. வல்லிபுரம், திரு. ப. இராமலிங்கம், துன்னாலை, திரு. வ. செல்லத்தம்பி, J. P. U. M, திரு. த. கெங்காதரன், திரு. ச. மா. கந்தசாமி, புலோலி, திரு. வ. துரைசிங்கம், தந்தையின் நோக்கை இறுதிவரை முன்னின்று செயலாற்றிவரும் செம்மல் திரு. நா. கிருஷ்ணகுமார் என்போரும் இந் நல்வருகையின் சார்பிற் குறிப்பிடப்பட வேண்டியவர்களாவர்.

நன்னோக்குடையாரின் நன்முயற்சியால் ஏற்பட்ட நல்விளைவு எனப் பலராலும் போற்றப்படும் மகாசபை, தர்மகர்த்தாசபை, திருப்பணிச்சபை என்பன குடமுழுக்கு நிகழுமுன் செய்து முடித்த வேலைகள், செய்து காட்டிய சேவைகள் செப்பற்கரியன; அவைகளை நீட்டிக்காட்டிக்

கழிக்கும் விழைவிலேனுயினும், காலவெள்ளத்தாற் கோலமழிந்து, நிதியிலார் வதிவிடம் போல ஒளிமழுங்கிப் பழுதடைந்திருந்த கோவிற் கட்டிடங்களை ஒழித்துவிட்டு, புத்துருவங் காணப் புதுமைபெற அமைத்து வாலஸ்தாபனஞ் செய்து, எவர்களும் கற்பனைசெய்யமுடியாத குறுகிய காலத்தில் குடமுழுக்குச் செய்துமுடித்தமையைக் குறிப்பிடாதிருத்தல் இயலாது. இவர்கள் நோக்கிய நோக்கமும் ஆக்கிய செயல்களும் நன்கு நிறைவேற, பெருநிதியும், பணமும் வழங்கிய வண்மைச் செம்மல்களுக்கெல்லாம் கண்ணன் பேரருள் பாலிப்பாராக.

நிதிச் செல்வ வளங்களுடனே அறிவுச் செல்வமும் ஓங்கி வளரவேண்டுமென்று உணர்ந்த மகாசபை உறுப்பினர்கள், குடமுழுக்கைத் தொடர்ந்து நிகழவிருக்கும் மண்டலாபிடேகத் தன்று, திருக்குடமுழுக்கு மலர் ஒன்று வெளியிட எடுத்த முயற்சி போற்றற்குரியது மாத்திர மன்றி நன்றி கூறற்குரியதுமாகும்.

மேற்காட்டிய சேவைகளுடன் அமையாது, வல்லிபுர ஆழ்வார் கோவில் வரலாற்றினைப் புராண, கர்ணபரம்பரைக் கதைகளுடன், வரலாற்று அறிஞர்களும் ஏற்கும் ஆதாரபூர்வமாக அமைந்த கதையாக ஆக்கிவைக்கும் ஆராய்ச்சிகளில் ஈடுபடல் அத்தியாவசியமானதாகும். இப் பணிக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளர்கள் கலாநிதி சி. பத்மநாதன், கலாநிதி செ. குணசிங்கம் என்பவர்களிடம் பெற்றுக்கொள்வதற்கு அவர் களே சம்மதங் கொடுத்துள்ளார்கள். இதனோடு இக்கோவிலிலே ஒரு நூலகம் நிறுவப்படுத லும் பெரும்பயன் தரக்கூடியதாகும் என்பதும் நினைவு கூர்தற்குரியது.

இம்மலர் சார்பாக எமக்கு வேண்டிய ஆசியுரைகள், கட்டுரைகள், கவிதைகள், சரித் திரக் குறிப்புக்கள் தந்துதவிய யாவர்க்கும், கட்டுரை கவிதைகளின் தெரிவிலே சிரமத்தை நோக்காது உதவியளித்த அரும் கலா வல்லுநர்கள் பேராதனைத் தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, தமிழ்த்துறை விரிவுரையாளர் கலையரசி சின்னையா அவர் களுக்கும், பிரதிகளை ஒப்பு நோக்கிப் பிழைகளைத் திருத்தஞ் செய்து உதவிய வித்துவான் பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கும், அவ்வப்போது எம்மை ஊக்கி வேண்டிய உதவி களை உவந்து வழங்கி நெறிப்படுத்திய முகாமைத் தர்மகத்தா திரு. க. கணபதிப்பிள்ளை, J. P. அவர்களுக்கும், பேரொலிப் புன்னகையுடன் என்செயல்களில் எல்லாம் தேகச் சோர்வகற்றிப் புத்துணர்வு ஊட்டிய தலைவர் ஆசிரியர் த. கெங்காதரன் அவர்களுக்கும், வேண்டிய நல் ஆலோசனைகளை அவ்வப்போது உதவிய Dr. க. அருளானந்தம், இளைப்பாறிய எழுதுவினைஞர் திரு. இ. க. திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களுக்கும், மலரை அழகுறச் செய்யும் ஆலோசனை கள் தந்துதவிய யாழ் வளாகம் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களுக் கும், மலர்க்கென விளம்பரங்கள் தந்து உதவியவர்களுக்கும், குறிப்பாக, சிவதரும வள்ளல் திரு. க. கனகராசா, J. P., வல்வெட்டித்துறை, சி. வே. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், மாண்புயர் மகாசபைத் தலைவர் சட்டத்தரணி வ. செல்லத்தம்பி அவர்களுக்கும், நிழற் படங்களை அன்பளிப்பாக உதவிய உரிமையாளர் அவர்களுக்கும், குறுகிய காலத்தில் இம்மலரை அழகுற அமைத்து உதவிய சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தாருக்கும் மலர்க்குழுவின் சார்பில் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக, இதன்கண் நிதியுதவி, மதியுதவி, சரீர உதவிகள் புரிந்து எம்மை ஊக்கு வித்த அடியார்கள், அன்பர்கள் யாவர்க்கும் எம்பெருமான் பெயரால் இத் திருக்குடமுழுக்கு மலர் மூலம் எமது நன்றியைச் செலுத்தி ஸ்ரீவல்லிபுரத்துச் சக்கரஆழ்வார் திருவடிகளில் இம் மலரைத் துளபமலர்போல் உவந்து ஏற்றருளுமாறு அர்ப்பணிக்கின்றோம்.

❋

**குறிப்பு:** எமக்கு அனுப்பப்பட்ட கவிதைகள், கட்டுரைகள் யாவற்றையும் இம் மலரில் வெளியிட இயலாமைக்கு வருந்துகின்றோம்.

— மலர்க்குழுச் செயலாளர்.

ஓம்

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத் துதிப் பாடல்கள்

### விநாயகர் துதி

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

— சிவஞானபோதம்

### வல்லிபுர ஆழ்வார் துதி

படமேறும் ஆயிரம்வாய்ப் பாம்பாம பள்ளிப்
பாயலொடு பதுமத்தாள் காற்பிடிப்பும், பாலின்
கடலான தும்விட்டுக், கருணை கூர்ந்து,
காப்பதற்காய்க், கண்களாலே யாரும் காண,
நடமாடும் மீனுருவாய் நங்கை கையில்
நாராய ணச்சிசுவாய், ஆழியாய். ஈழ
வடகீழ்பாற் கடல்வழியே எமக்காய் வந்த
வல்லிபுர ஆழ்வாரை வழுத்து வோமே.

### திருமகள் துதி

பாற்கடலிற் பாம்பணையிற் பள்ளி கொள்ளும்
பரந்தாமன் பாரியாகிப் பாங்கி ருந்தே
காற்பிடிக்கும் பேறுபெற்றாய்; கால மெல்லாம்
கண்ணன்மார் பறுதிகொண்டிங் குறுதி கண்டாய்;
சாற்றரிய செல்வங்களுக் குரிய தாயே!
தளர்ந்துவந்தோம்; தஞ்சம்வே றில்லை அம்மா!
சீற்றமின்றிக் கிள்ளியெங்கள் மடியி லிட்டால்,
சிறியேங்கள் வாழ்வுபெற்றோம்; திருக்கண் பாரே.

### அனந்தாழ்வான் துதி
(நாகதம்பிரான்)

தூயவேதன் சொல்லாற்ப்ர பஞ்சம் தாங்கி,
சுடர்ச்சிறகின் கருடாழ்வான் நட்பும் பூண்டு,
ஆயனென அகிலமெலாம் காத்த ளிப்பான்
அரும்பரம பதத்தினிலா சனமும் ஆகி,
பாயலாகி, பாற்கடலிற் குடையும் ஆகி,
பலராம இலக்குமணர் பாங்கும் காட்டி,
ஆயிரமாம் தலைபடைத்த ஆதி சேடா!
அனந்தாழ்வார்! அருள்சொரிவாய் அடியோம் பாலே.

## கருடாழ்வான் துதி

வெண்ணெயுடன் உறித்தயிரும் வாரி உண்டு,
        வேய்ங்குழலாற் பசுநிரைகள் காத்துக் கொண்டு,
மண்ணுடனே விண்ணளந்து மாயம் செய்யும்
        வாமனற்கு வாகனமாய்க் கொடியும் ஆகி
உன்னியுயர் பெரும்பேறு யாரே பெற்றார்;
        உதுபோதா தென்றுவேண்டிக் கரங்கள் கூப்பி,
கண்ணனவன் சேவைக்கே காத்து நிற்கும்
        கருடாழ்வான் கழலிணைகை தொழுவோம் யாமே.

## அனுமார் துதி

தெளிவான முத்திமார்க்கம் செகத்தோர் காண,
        சேவையே எனக்காட்டி, தீங்கே செய்யும்
வழியான பொறியைந்தும் மடங்க எல்லாம்
        வல்லவொரு சித்தனாகி, பத்தன் ஆகி,
எழிலாரும் இராமபிரான் நாமம் எண்ணி
        எப்பொழுதும் அவனடித் தொழும்பே பூண்டு,
அழியாத வரம்பெற்ற ஆஞ்ச னேயா,
        அனுமானே! அடிக்கமலம் சரணம் ஐயா!

— வித்துவான், பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை

உ

ஸ்ரீராம ஜெயம்

## ஸ்ரீஸ்காந்த புராணத்திலுள்ள தக்ஷிணகைலாச மான்மியத்தில்

# வல்லிபுர வைபவ அத்தியாயம்

### தமிழ்ப் பொழிப்புரை

1. ..........................................................................

ஸ்ரீ சூதமகாமுனிவர் சொல்லினர். (எவ்வாறெனில்) இலக்குமி விலாசமுள்ள வல்லிபுரம் என்னும் தலத்தின் மகிமை இப்போது சொல்லப்படுகின்றது: 1

2. ..........................................................................

முற்காலத்திலே பிரத்தியக்ஷமான கடவுளும் இலக்குமிக்கு நாயகருமாகிய விஷ்ணு மூர்த்தியானவர் இரணியனென்னும் பெயருடைய துட்டனுலே வருந்திய தேவர்களது பாதுகாப்புக்காகத் தரிக்கப்பட்ட கங்கணக் கூட்டங்களானவை அசுர தூதர்களாலே கடலின்கண் எறியப்பட்டன. 2

3. ..........................................................................

ஆதலால் விரைவில் அவைகளை எடுத்தற்பொருட்டு பரசிவனுடைய கட்டளையினுல் உடனே அன்பரைக் காக்கும் பெருவிருப்பமுடையவரும்,

4. ..........................................................................

வசுதேவகுமாரரும் உலகநாதருமாகிய அக்கடவுள் மீன் வடிவைத் தரித்து, எறியப்பட்ட கங்கணங்களைக் கடலினின்றும் எடுத்து, இங்கே, 4

5. ..........................................................................

கடற்கரையிலிட்டு, பின்னர் அவர் திருவிளையாட்டிலும் அக்கடலில் மறைந்தார். பின்னொருநாள் அக்கடவுள் வல்லிபுரத்துக்கணிமையாக, 5

6. ..........................................................................

வலைத் தொடரிற் பிரவேசித்து மிக்க கோலாகலத் தொனி செய்தார். இதனை வலைஞர் பார்த்து, கோபம் மிக்கவர்களானுர்கள். 6

7. ..........................................................................

அவ்வலைஞர் யாவரும் அக்கடவுளாகிய மீனைப் பிடிக்க விரும்பியவராயினுர். இந் நிகழ்ச்சியை ஆனந்தத்தோடு பார்க்கும்படி சனங்கள் வந்தபோது — 7

8. ..........................................................................

முனிசிரேஷ்டர்களே! அந்த மீன் குதித்துக் குதித்து உலாவி லவல்லி யென்னும் பிரசித்தப் பெயரையுடைய ஒரு கன்னிகையின் மடித்தலத்தில் மகிழ்வுடன் விழுந்தது. 8

9. ..........................................................................

பின்பு அவ்வேளையிலே பேரொளியையுடைய மீனுருவைத் தரித்த விஷ்ணு மூர்த்தியானவர் மனுடப் பிள்ளைபோலத் தோற்றினுர். 9

10. ..........................................................................

அவளும் சந்தோஷத்தோடு கூடியவளாகிப் பிரியத்தோடு அப்பிள்ளையை ஏந்திக்கொண்டு வெய்யிலினுல் மிக வாடியவளாதலால் ஒரு மரத்தினடியிற் சென்று, 10

11. ..........................................................................

முனிசிரேஷ்டர்களே, மகிழ்ச்சியோடு விரைவிலே தன் சேலையினுலே தொட்டிலைச் செய்து அத்தொட்டிலின்கண் அக் குழந்தையைச் சயனிக்கச் செய்து — 11

12. ..........................................................................

அக்கன்னிகை தொட்டிலாட்டற்குரிய பாட்டுக்களைப் பாடி அப் பிள்ளையை நித்திரை செய்வித்தாள். இந் நிகழ்ச்சியைக் காணவந்தவர்கள் எல்லாரும் நல்ல ஆச்சரியமடைந்தவர் களாகி அக் குழந்தையைத் தரிசித்தார்கள். 12

13. ..........................................................................

அறுகின் முளைபோலும் பச்சை நிறமுடையவரும் பீதாம்பரத்தை யுடுத்தவரும் துளசிமாலையைத் தரித்தவரும் ஸ்ரீவத்ஸமென்னும் திருமறுமேவும் மார்பையுடையவரும் 13

14. ..........................................................................

நான்கு புயங்களோடு கூடியவரும் இடக்கரத்தில் சக்கரத்தையும் வலக்கரத்தில் சங்கையும் தரித்துச் சேஷபரியங்கத்தில் சயனிப்பவரும், 14

15. ..........................................................................

வரத அபயங்களைப் பொருந்தியவரும், ஊர்த்துவ புண்டரத்தினுல் அலங்கார முடையவரும் என்று சொல்லப்படும் இவ்விதமான இலக்குமி வாச திவ்விய சுவயரூபத்தை அக் கன்னிகை தரித்து மோகமாகிய ஆகுலமுற்றவளாயினுள். 15

16. ..........................................................................

அறிவிற் சிறந்த முனிவர்களே! இந்த அற்புத நிகழ்ச்சியை, முறைமுறையே ஒவ்வொருவர் வழியாகக் கேள்வியுற்று, உவப்போடுகூடி, அவ்வூரில் வாழ்கின்றவர்கள் எல்லோரும் அவ்விடத்திலே வந்தனர். 16

17. ..........................................................................

அவர்கள் எல்லோரும் மகிமையுடைய தேவரும் வாசுதேவரும் உலகநாதரும் ஆகிய அக்கடவுளைத் தரிசித்தனர். உவகையாகிய கடலுள் அழுந்தினர், ஒருவர்க்கொருவர் சொல்லுகின்றனராயினர். 17

18. ..........................................................................

"நாங்கள் தனவந்தராயினம்; நாங்கள் தனவந்தராயினம், எங்களுக்கு இரட்சிப்பு உண்டாகும் பொருட்டாகவே சங்கு சக்கரங்களைத் தரித்தவரும், தேவரும், பகவானும், உயிர்களைக் காப்பவருமாகிய ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி பிரசன்னமாயினர்" என்று அன்புகூர்ந்து, உவப்போடு துதிக்கத் தொடங்கினுர்கள். 18

19. ..........................................................................

"மற்சரூபியாகிய தேவரீருக்கு வணக்கம்; ஆமையுருவான தேவரீருக்கு வணக்கம்; பன்றியுருவான தேவரீருக்குவணக்கம்." 19

20. ..........................................................................

தேவர்களுக்குச் சுகத்தை உதவுகின்ற தேவரீருக்கு வணக்கம்; பிரமசாரியாகிய வாமனரூபத்தையுடைய தேவரீருக்கு வணக்கம்; சூரிய வம்சத்து அரசர்களை அழித்த பரசுராம அவதாரமான தேவரீருக்கு வணக்கம்; 20

21. ..........................................................................

கலப்பைப்படையை ஏந்திய பலராம ரூபமான தேவரீருக்கு வணக்கம்; ஸ்ரீகிருஷ்ண அவதாரமான தேவரீருக்கு வணக்கம்; நரசிங்கரூபமான தேவரீருக்கு வணக்கம்; கற்கி ரூபமான தேவரீருக்கு வணக்கம். 21

22. ..........................................................................

இவ்வண்ணம் பத்துருபத்தை யுடையவரும் வல்லிபுரத்திலே எழுந்தருளுகிறவருமாகிய தேவரீருக்கு வணக்கம்; வணக்கம். 22

23. ..........................................................................

எக்கடவுள் எல்லா உயிருள்ளும் சூக்கும ரூபத்துடன் கலந்திருக்கிறுரோ, அப்படிப்பட்ட தேவரீருக்கு வணக்கம்; வணக்கம்; வணக்கம். 23

24. ....................................................................

எக் கடவுள் எல்லா உயிருள்ளும் பத்தி ரூபத்துடன் கலந்திருக்கிறரோ, அப்படிப்பட்ட தேவரீருக்கு வணக்கம்; வணக்கம்; வணக்கம். 24

25. ....................................................................

அன்பர்களைக் காப்பாற்றும் அருட்கடலாய் உள்ளவரே, வணக்கம்; வணக்கம். தேவரீருக்கு வணக்கம்; வணக்கம்; வணக்கம். 25

26. ....................................................................

தண்டத்தையும், சங்கையும், தரித்தவரே, தேவரீருக்கு வணக்கம்; வணக்கம் எப்போதும் (இஷ்டமானவர்களை) விரும்பியவைகளைக் கொடுத்தருளுகின்றவரே, தேவரீருக்கு வணக்கம்; வணக்கம்; மகானே! எம்மாற் செய்யப்பட்ட எல்லாப் பிழைகளையும் பொறுத் தருளுக. 26

27. ....................................................................

பாற்கடலிற் றுயிலுகின்றவரும். அகன்ற தாமரைக்கண்ணை யுடையவரும், பெயர் மாத்திரம் எஞ்சியிருக்கும்படி மகாபலிச் சக்கரவத்தியின் வைபவங்களை யடக்கியவரும், பற்பல சராசரங்களைப் படைக்கும் பிரமதேவர் உதித்த உந்திக்கமலத்தை உடையவரும், பரம புருஷரும் ஆகிய தேவரீருக்கு வணக்கம். 27

28. ....................................................................

முனிசிரேட்டர்களே! அச்சனங்கள் யாவரும், மகாத்மாவும் பகவானும் இஷ்டசித்தி பெற வேண்டப்படுகின்றவரும் ஆகிய விஷ்ணுமூர்த்தியை இவ்வாறே துதித்துப் பெருமகிழ்ச்சி கூருமுள்ளத்தை யுடையவர்களாயிருந்தார்கள். 28

29. ....................................................................

பின்னர், இவ்வண்ணமிருக்கும்போதே பகவானும் இலக்குமிக்கு நாயகருமாகிய விஷ்ணுமூர்த்தியானவர் எல்லா உலகத்தாரும் காண மறைந்தவராகி, முன்போல் மற்சரூப முடையவராகி. 29

30. ....................................................................

கடலினுள் மறைந்தனர்; அங்கு நின்ற அவர்கள் எல்லாரும் மயக்கமாகிய வியாகுல மடைந்தவர்களாய் அருமையான தவத்தைச் செய்தார்கள். 30

31. ....................................................................

இந் நிகழ்ச்சியை உத்தம தேவராகிய விஷ்ணுமூர்த்தி திருவுள்ளத்துட் கொண்டு ஒரு பிராமண வடிவத்தோடு அங்கே எழுந்தருளி அத்தவர்த்தர்களை நோக்கி, இவ்வாக்கை அருள் செய்வாராயினர். 31

32. ....................................................................

தவச்செயலான் மகிமை பெற்ற அன்பர்களே, அஞ்சவேண்டாம்; இது உங்களுக்குக் கொடுக்கப்படுகிறது; எல்லாப் படைத்தலங்களுள்ளும் சிறந்தோங்கும் இச் சக்கராயுதத்தை மிக்க பிரீதியுடன், 32

33. ....................................................................

நல்ல சுபமுகூர்த்தத்தில் நல்ல இலக்கினத்தில் விதிப்படி பிரதிஷ்டை செய்து பேரன் போடு நித்திய நைமித்திக காமிய பூசைகளை நடத்தி வழிபடக் கடவீர்கள். 33

34. ....................................................................

"முனிவர்களே! இச் சக்கராயுதத்தைப் பூசித்தால் விரும்பிய எல்லாவற்றையும் நீங்கள் அடைவீர்கள்" என்று கூறி அந்தப் பிராமணோத்தமர் மறைந்தனர். 34

35. ....................................................................

அவர்கள் யாவரும் பேராசையுடையவர்களாய், அடிக்கடி விஷ்ணுமூர்த்தியைத் துதித்துத் துதித்துச் சக்கராயுதத்தை வாங்கிக்கொண்டு விரைவிலே மகிழ்வோடு நகரை யடைந்து, 35

36. ..........................................................................

ஒரு ஆலயத்தை அமைத்து விதிப்படி சக்கராயுதத்தைப் பிரதிஷ்டை செய்து, முறை தவறுது பூசை நடத்தி புத்திர களத்திரங்களோடும் திரவிய சம்பத்துக்களோடும், 36

37. ..........................................................................

மிக்க பக்தியுடையவர்களாய் எல்லாரும் அந்நகரிலே வாழ்ந்திருந்தனர் . அறிஞர்களே!

(முனிவர் வினவுகின்றனர்) சூதமகா முனிவரே! சகல சாத்திரங்களின் பொருளுண்மை உணர்ந்தவரே ! பகவானுகிய விஷ்ணுமூர்த்தியானவர். 37

38. ..........................................................................

யாது காரணத்தால் மற்சரூபமாகி, கன்னிகையின் மடித்தலத்திற் சென்று தங்கினுர். அவளுடைய மடித்தலத்திலே திருமகள் நாயகராகிய விஷ்ணுமூர்த்தி குழந்தை உருவமாகியும் தங்கினுரல்லவா? 38

39. ..........................................................................

அக்காரணம் முழுவதையும் அவள் வைபவத்தையும் சாதுவே! முனிசிரேஷ்டரே! விரிவாக எங்களுக்குச் சொல்லி அருளுக; 39

40. ..........................................................................

என்று முனிவர்களாற் பிரார்த்திக்கப்பட்டவராகிய சூதமுனிவர் அவர்களை நோக்கிச் சொல்வாராயினுர்: முனிவர்களே! முன்னொரு காலத்திலே லவல்லியென்னும் பெயருடைய சிறந்த ஒரு கன்னிகையானவள், 40

41. ..........................................................................

வைசியகுலத்திற் பிறந்தவள், பேரழகமைந்த யௌவனப் பருவத்தையுடையவள், நெடுங் காலமாகப் புத்திரப்பேறில்லாது மலடியாகியிருந்ததால் மிகவும் மனக்கவலை யுடையவளாகி, 41

42. ..........................................................................

அக்காரணத்தை அறியாதவளாகி தபோநிதியாகிய பிருகு முனிவரைச் சென்றடைந் தாள்; அக்கன்னிகை முனிவரை நோக்கிப் பகவானே, அனேக சாத்திரங்கள் நுண்மை யுணர்ந்த அறிஞர்களில் சிறந்தவரே, 42

43. ..........................................................................

ஐயா! எக்காரணத்தால் யான் புத்திரப்பேறு அற்றேன்? என்ன பாவத்தைச் செய் தேன்? நற்புத்தியுடையவரே! எனக்கு மகிழ்ச்சியை வளர்க்கும் குருவே! அக்காரண மெவற் றையும் எனக்குச் சொல்லியருளுக, 43

44. ..........................................................................

என்று அக்கன்னிகையினுற் பிரார்த்திக்கப்பட்டவராய், பிருகு முனிவர் அவளை நோக்கிப் பிரீதியுடன் பிரதிவசனம் கூறினுர். முனிசிரேட்டர்களே! 44

45. ..........................................................................

பிருகுமுனிவர் அக்கன்னிகையை நோக்கி அழகிய புருவத்தையுடையவளே! அக்காரணத்தை யுணர்த்தும் என் வசனத்தைக் கேள்; நீ முற்பிறப்பில் மயக்கத்தினுல் ஒரு பாம்பைக் கொன்ருய்; 45

46. ..........................................................................

அந்தப் பாம்பின் சாபத்தினுல் உனக்கு இம்மையிலே மலட்டுத் தன்மை வந்தது. மங்களகரமுள்ள பெண்ணே! அந்நாகசாபத்தினுல் நீ எல்லாப் பிறப்பிலும் இப்படி மலடாகவே யிருப்பாய்; 46

47. ..........................................................................

அந்நாகசாப தோஷம் தீரும் பொருட்டுப் பரமசிவனைச் சிந்தித்துத் தவஞ்செய்யக் கட வாய்; இக்குற்றத்தைத் தீர்க்கவல்லவர் பரமசிவனேயன்றி வேறொருவரும் இல்லை. 47

48. ..........................................................................

மிக்க கடூரமாகிய தவம் செய்தால் சிவபெருமான் பிரசன்னமாவார். அவருடைய தரிசனங் கிடைத்தபோதே அவர் உன்னை அச்சாபத்தினின்று நீக்கி அருளுவார். இது நிச்சயம். 48

49. ..........................................................................

முனிசிரேஷ்டர்களே! பிருகு முனிவர் இவ்வாறு உபதேசித்து மௌனியானார். கன்னிகை பேருவகையுற்றவளாகி, நல்ல மங்களகரமான தவச்சாலையை — 49

50. ..........................................................................

மிக வேகத்தோடு சென்றடைந்து சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்தாள்; அவளுடைய கடுந்தவத்தினாலே சிவபெருமான் இனிது பிரசன்னராயினார். 50

51. ..........................................................................

சிவபிரான் கன்னிகையை நோக்கி, பெண்ணே! உனக்கு விருப்பமான வரம் யாது? அதனை நீ சொல்லு; எம்மினின்று பெற்றுக்கொள்; என்றதும், இதனைக்கேட்ட மாத்திரத்தே அக்கன்னிகை பிரீதியடைந்தவளாய், — 51

52. ..........................................................................

தோத்திரம், பிரதக்ஷிணம், நமஸ்காரம் என்னுமிவைகளை அவள் அன்புடன் செய்து பரம சிவனை நோக்கி, பகவானே! முற்காலத்தும் எதிர்காலத்தும் ஆளும் தகைமையுடையவரே, அன்பர்களைக் காத்தருளும் பற்றுடையவரே, 52

53. ..........................................................................

பிரபுவே! கொடிதாகிய நாகசாபத்தினாலே நான் புத்திரப்பேறற்றவளாயினேன்; அச்சாபந் தீரும் பொருட்டுத் தேவரீரே அடியேனுக்குப் புகலிடம். 53

54. ..........................................................................

இதுவே எனக்கு விருப்பமான வரம்; ஆதலால், எவ்வுயிர்க்குஞ் சுகத்தையுதவும் பெருமானே! அவ்வரத்தை அடியேனுக்குத் தந்தருளுக; இவ்வாறு கன்னிகை புத்திரசோகத்தினாற் சிவபிரானைப் பிரார்த்தித்தாள்; 54

55. ..........................................................................

பகவானும் அன்புடையார்மேற் பட்சமுடையவரும் கருணாசமுத்திரமும் ஆகிய சிவபிரான், அவள் வசனத்தைக் கேட்டு, அக்கன்னிகையைப் பார்த்து அருள்செய்தார் முனிவர்களே! 55

56. ..........................................................................

சிறுமியே! தனியே புத்திரப்பேறேதுவாக நீ வருந்தவேண்டாம்; வல்லிபுரம் என்னும் பெயருடைய தேசத்திலே லவல்லியென்னும் பிரசித்த நாமமுடையவளாய். 56

57. ..........................................................................

பிறந்திருக்கக் கடவாய்; பெரும் பாக்கியவதியே! நீயும் உலகத்துள்ள அறிஞர்கள் எல்லாராலும் மதிக்கப்படுவாய்; அப்போது பகவானாகிய விஷ்ணு மூர்த்தியானவர், தேவ காரியத்தை முடிப்பது காரணமாக. 57

58. ..........................................................................

வாசுதேவரும் தேவ உத்தமருமாகிய விஷ்ணுமூர்த்தி மற்சவடிவத்தைத் தாங்குவார்; அவர் மற்சவடிவத்தோடு வேகமாய் உன் மடித்தலத்துப் பாய்ந்திருப்பர்; 58

59. ..........................................................................

விஷ்ணு மூர்த்தி பின்னர் உன்மடியிலே குழந்தை வடிவமுடையவராவர்; அவருடைய வடிவத்தைத் தீண்டியபோதே நாகசாபம் தீரும்; 59

60. .............................................................................

பின்னர் நீ வேறிடத்து இம்மையிலே வெகு புத்திரர்களோடும் தனதானிய முதலிய சம்பத்துக்களோடும் வாழ்ந்திருப்பாய், இதிற் சந்தேகமில்லை; 60

61. .............................................................................

என்று தேவ தேவராகிய சிவபிரான் திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர்; சூத முனிவர் பின்னுமவர்களை நோக்கி முனிசிரேட்டர்களே! அக் காரணத்தினாலே விஷ்ணு மூர்த்தி மற்சவடிவத்தைத் தாங்கினர்; 61

62. .............................................................................

அம்மற்சம் லவல்லி யென்னும் பெயருடைய கன்னிகையின் மடித்தலத்திற் பாய்ந்திருந்தது; பின்னர் முனி சிரேட்டர்களே! அவளும் புத்திர பௌத்திராதி பாக்கியங்களுடன் பொருந்தியவளாய், 62

63. .............................................................................

இவ்வுலகத்திலே இம்மைச் சுகங்களையு மனுபவித்துத் தேக முடிவிலே முத்தியை அடைந்தாள்; **வல்லிபுரமாகிய மகா ஸ்தலம் விஷ்ணு மூர்த்திக்கு உவப்பைக் கொடுக்கின்ற சிறந்த ஸ்தலமாகும்; அன்றியும் வைகுண்டபதத்தில் அனுபவிக்கும் முத்தியின்பத்தைக்கொடுப்பதுமாகும;** 63

64. .............................................................................

வல்லிபுர மென்னும் மகாக்ஷேத்திரத்தை எந்த மனிதன் இப்பிறப்பிலே தரிசிக்கிறானோ, அல்லது வாசம்பண்ணுகிறானோ, அல்லது ஸ்தலத்தின் வைபவங்களை வாயாற் சொல்லுகின்றானோ, 64

65. .............................................................................

முனிசிரேட்டர்களே! பஞ்சபருவ காலங்களிலும், ஜயந்தியிலும், மற்றும் விசேட காலங்களிலும் பரிசுத்த மனமுடையவனாகி, அன்புடன் அங்கே வீற்றிருக்குங் கடவுளைத் தரிசிக்கிறானோ, (பஞ்சபருவங்களாவன ; அமாவாசை, பௌர்ணிமை, கிருஷ்ணாட்டமி, கிருஷ்ண சதுர்த்தசி, சங்கிராந்தி என்பனவாம். ஜயந்தியாவது : விஷ்ணுவின் சதாவதார தினங்களாம்.) 65

66. .............................................................................

அவனுக்கு எப்போதும் மரணபயமில்லை ; சரீராரோக்கியமுண்டாகும் ; இது நிச்சயம். அவன் இவ்வுலகிலே சுகமனுபவித்து தேகாந்தத்திலே விஷ்ணுபதத்தை அடைவான். 66

ஸ்காந்தபுராணத்துள்ள தக்ஷிண கைலாச மான்மியத்து, வல்லிபுர வைபவ அத்தியாயப் பொழிப்புரை முற்றிற்று.


(அரிதிற் கிடைக்கப்பெற்றதும் அறுபத்தாறு வடமொழிச் சுலோகங்களையும், அவற்றின் தமிழ்ப் பொழிப்புரையையும் கொண்டதுமான அச்சுப்பிரதி, இத் தேவஸ்தானத்துப் பிரதம குருக்களாக விளங்கும் பிரம்மஸ்ரீ க. இராமச்சந்திரக் குருக்கள் அவர்களால், இம் மலர் வெளியீட்டின் பொருட்டு உதவப் பெற்றது. வடமொழிக் கிரந்த எழுத்துக்கள் இங்கு அழுத்தகங்களில் கிடைக்கப் பெறுமையால், அச்சுலோகங்களை அவ்வெழுத்து வடிவங்களுடன் இங்கு தராமைக்கு வருந்துகின்றேன். இதன்கண் உள்ள எண்கள் வடமொழிச் சுலோகங்களில் உள்ள எண்களைச் சுட்டுகின்றன. வடமொழிச் சுலோகத்துடன் கூடிய அப் பிரதியின் தமிழ்ப் பொழிப்புரை, வித்துவான், பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை அவர்களாலும், ஆசிரியர் மு. சதானந்தன் அவர்களாலும் ஒப்புநோக்கப்பட்டுள்ளது. வடமொழிச் சுலோகத்துடன் கூடிய அச்சுப்பிரதி ஷ குருக்கள் அவர்களிடம் இன்றும் உண்டு. ...... இவ் வடையாளம் போடப்பட்ட இடங்கள் வடமொழிச் சுலோகங்கள் உள்ள இடத்தைக் குறிப்பன.)

**க. தேவதாசன்**
மலர்க்குழுச் செயலாளர்


கற்கோவளம்

# உள்ளே......



1. அரி கோவிந்த நாம சங்கீர்த்தனம் — கோவிந்தா கோவிந்தா — ஆசிரியர் திரு. மு. சதானந்தன்
2. வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய வழிபாடு — இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. ப. இராமலிங்கம்
3. வல்லிபுரத்துப் பொன்னேட்டின் வரலாற்று முக்கியத்துவம் — ஒரு மதிப்பீடு — கலாநிதி செ. குணசிங்கம்
4. மாயவன் வந்துருக்காட்டுகின்றான் — பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை
5. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி நித்தியாஞ்சலிப் பதிகம் — இளைப்பாறிய தலைமையாசிரியர், கவிஞர் கற்கை சரவணனார்
6. வைஷ்ணவ சமயமும் வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் — வித்துவான் பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை
7. பாரதி கண்ட கண்ணன் — விரிவுரையாளர் திரு. சி. தில்லைநாதன்
8. வல்லிபுர அந்தாதிப் பதிகம் — பண்டிதர் பொன். சின்னத்துரை ஆசிரியர்
9. திருமால் வழிபாடும், வல்லிபுர மாயவன் கோயிலும் — பண்டிதர் சங்கரவைத்திலிங்கன்
10. முகுந்தன் நாமம் — இளம்பிறையாளன்
11. வேணுகோபாலன் — திரு. வ. குகசர்மா
12. மட்டக்களப்புத் தமிழகத்தில் விஷ்ணு வழிபாடு — பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்
13. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சரணப் பதிகம் — கவிஞர் திரு. சி. செல்லமுத்து ஆசிரியர்
14. ஆழ்வார்களின் பாவனைத் திறன் — கலாநிதி திரு. அ. சண்முகதாஸ்
15. இருக்கு வேதத்தில் விஷ்ணு சூக்தம் ஒன்று — நூலகர், திரு. சி. முருகவேள்
16. திருமால் — விரிவுரையாளர், செல்வி சிவகாமி கணபதிப்பிள்ளை
17. சூடிக் கொடுத்தவள் பாடிக் கொடுத்தாள் — நூலகர், திரு. ஆ. சிவநேசச்செல்வன்
18. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருப்புகழ் — கவிஞர், சி. செல்லமுத்து ஆசிரியர்
19. சைவமும் வைஷ்ணவமும் — பேராசிரியர், திரு. க. கைலாசநாதக் குருக்கள்
20. ஆலயமும் ஆன்மீகமும் — பிரம்மஸ்ரீ ச. க. இராமச்சந்திரக் குருக்கள்
21. நாச்சிமார் திருமொழி நயம் — ஆசிரியர் சீ. சிவப்பிரகாசம்
22. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பரிபாலன சபை
23. மகா சபை அங்கத்தவர்கள்
24. மண்டலாபிஷேக உபயகாரர்
25. மகாகும்பாபிஷேக கிரியாகால நிகழ்ச்சிகள்
26. விரிஞ்சனே விடைவல்லானே — ச. கேசவானந்தன்




ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்
நாகதம்பிரான்




ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்
நவக்கிரகக் கோபுரம்



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்து
திருக்குடமுழுக்குச் *(3—7—77)*
சுபமுகூர்த்த நிகழ்ச்சி




ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்
பஞ்சமுக ஆஞ்சநேயர் கோபுரம்



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்
விநாயகர் கோபுரம்

# அட்டநாகபந்தம்


அனுமார்.
8.
1.
குருக்கட்டு விநாயகர்.
நவக்கிரகம்.
இலக்குமி.
7.
௨.
௬.
நாச்சிமார்.
3.
திருமால்.
நாகதம்பிரான்.
௫.
௪.
சக்கரம்.

திருமால் மயம்

# வல்லிபுர ஆலய தெய்வ வணக்கம்

[ அட்ட நாக பந்தம் ]

(ஒவ்வொரு நாகத்தின் தலை தொடங்கி ஒவ்வொரு வெண்பா அமைக்கப்பட்டுள்ளது)

1. நாம மருநனிசெந் தாமரைபூ நீரும்
தாமருவி மூழ்கி யணியார்ந்து — காமமில்லா
நெல்லார் குருக்கட்டுள் நீளெலி யையூர்தி
வெல்கரி தாளபோற் றி.

2. திருமகளே செல்வந் தருமனையே தேவீ
மருவடியார் வான மருவார் — பெருவினைகா
செல்வ மலர்கின்ற செம்பாத தாமரைதா
சில்நாத காதலவ ராள்.

3. அருமருந்தே வல்லிபுரா மாயவனே யன்று
வருலவல்லி சாபந்த விர்த்த — திருமாலே
தேன்போ லினிப்பாக வைகுபதா காணுருஅ
வான்போக காக்கவே வா.

4. போற்று சிவன்சய போகி வளமடியா
தாற்றுநீ மால்மலர் கைபோந்த கூற்றேள
வாகாரு மான்யூகி பல்விட்டு நாட்டினவர்
வேகாமல் சக்கரநம் பு.


5. பெற்றுவள ரின்பாசை யுள்மனைமார் சேயுறவே
வற்றுசா பந்த விரநாளு — முற்றுஅர்
வள்ளற்கு வாதேவ தாள்வணங்கு பானுஉ
நள்நாகர் தம்பிரா னே.

6. தேவீ முதல்வியே நீமா வலிபூனி
மாவீய கூறத்தில் புய்க்காகும் — சாவீண்டாள்
செல்வம்காத் தவ்வென்பா வந்தீர் வதேற்கா
நல்லாரே தாயேபோற் றி.


7. பானு முதலாக பாட்டார்கோ ளல்மூடி
வீணுரைநோ மாறு தருங்கவலை — காணுதலால்
நல்தா ளுரைப்போர் ரிசைநெறிய வீணிலா
மல்லாளல் செய்கவரம் தா.

8. வாராம ராமவென வைகுறுமா மாருதியே
சேராரை நோயே செயுந்தாளா — போர்கூர்ந்தாய்
சின்தாத பானுவலி செந்தாளில் புக்குளஞ்செ
யென்தனை காக்கவே யீ.

— தென்புலோலியூர், பண்டிதன் பொன், சின்னத்துரை



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்து
(3–7–1977) திருக்குடமுழுக்குச் செய்தருளிய
பிரதிஷ்டாகுரு, சிரோமணி, சாமி. விஸ்வநாதக் குருக்கள்



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்துப்
பிரதம குருக்கள்
பிரம்மஸ்ரீ ச. க. இராமச்சந்திரக் குருக்கள்



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்து
முன்னைநாட் பிரதம குருக்கள்
பிரம்மஸ்ரீ ச. கணபதிசாமிக் குருக்கள்

ஓம்

ஸ்ரீ ராம ஜெயம்

# அரி கோவிந்த நாமசங்கீர்த்தனம்

...................... கோவிந்தா கோவிந்தா ......................

**திரு. மு. சதானந்தன் அவர்கள், ஆசிரியர்**

**பி**ங்கள வருடம் ஆனி மாதம் 19ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (1977-7-3) திருவோண நட்சத்திரம் சேர்ந்த சுபவேளையில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மங்களகரமாக நிறைவேறிய புனராவர்த்தன கும்பாபிஷேக விழாவைக் கண்டோர் கண்பெற்றவரானுர்கள். பிராமணுேத்தமர்கள் முழக்கிய மறைமொழிகளைக் கேட்டோர் செவி பெற்றவரானுர்கள். புனித நீரில் மூழ்கினேர் பிறவிப் பெருங் கடலேயே நீத்தவரானுர்கள். அரி கோவிந்த நாம சங்கீர்த்தனம் என வேத பாராயணத்தைப் பிரதிஷ்டாகுரு பிரதிஷ்டா சிரோமணி சாமி விஸ்வநாதக் குருக்கள் முன்மொழிய அதைத் தொடர்ந்து குருமணிகள் அரி கோவிந்தா! கோவிந்தா! என்று பின் மொழிந்த மந்திர இசையும், நாதஸ்வர தவில் வித்துவான்கள் எழுப்பிய மங்கள ஓசையும், பரவச நிலேயடைந்த பக்தர்கள் மாதவா, கேசவா, யாதவா, ஸ்ரீலோலா, ராகவா, வைகுந்தா, பிருந்தாவனப் பிரபோ என்று ஆடிப்பாடிய பிரார்த்தனைக் கோஷமும் ஒன்று கலந்து செவி வழி, அமுதச் சுவை ஊட்டி மெய்புளகிக்கச் செய்தன. விசுவகன்மாவின் கைபட்டாற் போலப் புது அழகுடன் மிளிர்ந்த ஸ்தூபிகளையும், குடமுழுக்கு வைபவக் கிரியைகளில் கலந்து தேவர்போல் பொலிவுடன் தோன்றிய மறையவரையும், கற்பக மலரோ என ஐயுறும் வண்ணம் மேலிருந்து சொரிந்த பொன் மலரையும் கண்கள் களிக்க நோக்கி ஆழ்வார் பக்தர்கள் பேரானந்த வெள்ளத்துள் மூழ்கினர். கண்கள் கண்ட காட்சி இன்பம் பெரிதா; செவியினுல் கேட்ட கேள்வியின்பம் விஞ்சியதா; புது நீர் தெளித்துப் புளகித்து மெய்பெற்ற இன்பம் மேலானதா? யாராலேதான் கூறமுடியும்! அரி கோவிந்தா! கோவிந்தா!

ஈழத் திருநாட்டின் வடபால் புராதனச் சிறப்பும் புதுமைக் கவர்ச்சியும் நிறைந்த திருக்கோயில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம். இக் கோயிலின் உற்பத்திபற்றிய வரலாறென்று பரம்பரை பரம்பரையாகக் கூறப்பட்டு வருகின்றது. பன்னூறு ஆண்டுகட்கு முன் புரட்டாதிப் பூரணை நாளில் பாற்கடலென அறிஞரால் போற்றப்படும் வங்கக் கடல் பொங்கியது. மலைபோல் அலைகள் எழுந்து கரையில் மோதின. மீன்பிடி வலைகள் தாறு மாருக அறுபட்டன. வள்ளங்களை அலைகள் விழுங்கின. பெரிய மச்சம் ஒன்றே இப்பயங்கரச் செயலைச் செய்து வந்தது. இந்த வன்செயல் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தது. மக்கள் எல்லோரும் கூட்டம் கூட்டமாக வந்து மாயச் செயலைக் கண்டு ஆச்சரியப்பட்டனர்.

அந் நாளில் வராத்துப்பளைக் கிராமத்தில் வல்லிநாச்சியார் என்ற விஷ்ணு பக்தை ஒருவர் இருந்தார். அவர் புத்திரப் பேற்றிற்காக ஸ்ரீமந் நாராயணனை நாள்தோறும் சிந்தித்து வந்தித்து வந்தார். எம்பெருமான், கடல் கலக்கிய மூன்ரும் நாள் இரவு வல்லிநாச்சியார் கனவில் அவரைக் கற்கோவளம் கடற்கரைக்கு வரும்படி பணித்திருந்தான். துயிலுணர்ந்த அம்மையார் கண்ணன் கட்டளையை நினைத்து இறும்பூதெய்திக் கடற்கரைக்கு ஆவலோடு சென்ருர், கரையில் இருந்து நாராயண ஜெபம் செய்துகொண்டிருந்தார். என்னே அற்புதம்! மகரமாகக் கடல் கலக்கிய மாயவன் நிகரில் பேரழகுடன் அந்தப் பக்தையின் மடியில் வீழ்ந்து விளையாடினுன். கண்ணனைப் பெற்ற தேவகி போல அந்தப் பக்தையும் அளவிடற்கரிய ஆனந்தம் பெற்ருர். மோகன முறுவலுடன் வல்லிநாச்சி அம்மையின் மடியில் வீற்றிருந்த பாலகோபாலனைக் கண்ட மக்களில் ஒருசாரார் 'கண்டோம், கண்டோம், அமுது உண்டோம்' என்று பாடினர். மற்றையோர், ''பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச் செங்கண் அச்சுதா ... ...'' என்று பாடி ஆடினர். பெண்பாலார் ''பாலகோபாலனைப் பாடுவோமே; எங்கள் பாவ வினைகளைச் சாடுவோமே'' என்று கும்மி கொட்டினர். இப்படிப் பேரின்ப வெள்ளத்துள் அமிழ்ந்து இன்ப மயக்கத்தில் இருந்த நேரத்தில் ஆயர் சிறுவன் மீண்டும் மாயம் ஒன்றை நிகழ்த்தினுன். குழந்தையாகத் தவழ்ந்தவன் சக்கர வடிவில்

தன்னை மாற்றிக்கொண்டான். உருவத் திருமேனியன் அருவுருவத் திருமேனியன் ஆகிவிட்டான். அங்குக் கூடிநின்ற பெருமக்கள் சக்கரதாரியைப் போற்றி, அச் சக்கரத்தைப் பிரசித்தி பெற்ற ஸ்தலமொன்றுக்கு எடுத்துச் செல்வதென்று தீர்மானித்தனர். சக்கரத்தை அழகான பல்லக்கொன்றினுள் வைத்துக் கற்கோவளம் விஷ்ணு அடியார் பல்லக்கைக் காவிச் சென்றனர். அரி கோவிந்தா! கோபாலா! என்று பஜனையுடன் எல்லோரும் பின்னே சென்றனர்கள்.

துன்னாலை, புலோலி, வராத்துப்பளை, கற்கோவளம் என்ற கிராமங்கட்கு மத்தியாக இருக்கும் வல்லிபுரக்கிராமத்துக்கு அண்மையில் பல்லக்கில் வந்துகொண்டிருந்தநேரத்தில் பல்லக்கைக் காவி வந்தவர்கட்கும், மற்றையோர்க்கும் திடீரென்று நீர்வேட்கை உண்டாயது. இதனால் பல்லக்கை இறக்கிவைத்துவிட்டு நீர் அருந்தச் சென்றனர். நீர் அருந்தி வந்துபார்த்தபோது சக்கரம் பிரதிஷ்டை செய்தாற்போல நிலத்திற் பதிந்து இருந்தது. அதை எடுக்க முயன்றபோதும் முடியவில்லை. இறைவன் சித்தம் இதுவே என்று தீர்மானித்து அந்த இடத்திலேயே ஒரு கொட்டிலை அமைத்து வழிபாடாற்றி வந்தனர். இப்படிச் சக்கரதாரியின் வழிபாடு நடந்து கொண்டு வரும்நேரத்தில் அவ்விடத்திற்கு விஷ்ணு பக்தனான பிராமணோத்தமர் ஒருவர் வந்தார். அவர் நற்பண்புகளை அறிந்த மக்கள் பூசகராக அவரையே நியமித்தனர். சில நாட்களின் பின் அயற்கிராம மக்கள் அப் பிராமணோத்தமனுக்குக் கன்னிப்பெண்ணொருத்தியைத் தானமாகக் கொடுத்தார்கள். இருவரும் கருத்தொருமித்து மனையறம் புரிந்து ஆலயச் சரியை கிரியைத் தொண்டுகளைச் செய்துவந்தனர். மச்ச அவதாரம் செய்த புரட்டாதிப் பூரணையன்று வருடம்தோறும், தீர்த்த உற்சவம் கற்கோவளம்மக்களாற் சிறப்பாக நடாத்தப்பெற்று வருகின்றது. அன்று சாதாரண நாட்களிலும் பார்க்கக் கடல் அலைகள் மேலெழுந்து பொங்குவதைக் கண்டு மக்கள் பெருமானின் பேரருளை வியந்து போற்றுவர்.

இலங்கையின் வடபகுதியைக் கனகசிங்கன் என்ற மன்னன் சிங்கை நகரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தானென்றும், ஸ்ரீ வல்லிபுராலயம் அமைந்திருக்கும் இடமே சிங்கைநகர் என்றும் சரித்திர ஆய்வாளர் கருதுகின்றனர். அவ்வரசன் குறுகிய காலப் பகுதியே ஆட்சி செய்தமையால் தேவஸ்தானத் திருப்பணிகள் செய்ய அவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. அதன்பின்பே நல்லூர் இராசதானியாக்கப்பட்டது.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய நிர்வாகத்தில் அண்மையில் உள்ள கிராம மக்கள் பலர் காலத்துக்குக் காலம் பங்குபற்றி வந்துள்ளனர். நாம் அறிந்தகாலப்பகுதியில் துன்னாலை, திரு. தாமோதரம்பிள்ளை, அதன்பின் புலோலி, திரு. இராசா என்போர் நிர்வகித்து வந்தனர். 1938இல் பொதுக்கோயில் என்று அப்பீல் கோட்டில் தீர்ப்பளிக்கப்பட்டபின் திரு. மாணிக்கவாசகர் (தலைவர்), திரு. செல்லத்துரை (காரியதரிசி) என்போர் உட்படப் பதினைந்து அங்கத்தவரைக் கொண்டசபையினர் நிர்வகித்துவந்தனர். சபையோரின் அக்கறையின்மை காரணமாகக் காரியதரிசியாக இருந்த திரு.செல்லத்துரை என்பாரே முழுவதையும் பொறுப்பேற்று நடத்திவந்தார்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் பக்தனான புலோலி திரு. பசுபதி நாகலிங்கம் என்னும் பெரியார் ஆலய முன்னேற்றம் கருதித் தர்மகர்த்தா சபையைத் தெரிவுசெய்யும் எண்ணத்துடனும் திரு.செல்லத்துரையவர்கள் ஒத்துழைப்புடனும் வழக்கொன்றை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். நீதிமன்றத்தார் வழக்கையேற்று தர்மகத்தா சபையைத் தெரிவுசெய்யும்வரை கோயிலை நடத்த ஏழுபேர் கொண்ட சபையினருக்கு அதிகாரம் வழங்கினர். ஏழு பேர்களில் ஒருவரான திரு. மா. காசிநாதர் நீதிபதியால் தற்காலிகமாகத் தெரிவுசெய்யப்பட்ட தர்மகர்த்தா சபையினருடன் மாறுபட்டுப் பூட்டுக்களைப் போட்டு முழு அதிகாரத்தையும் தனக்காக்கிக் கொண்டார். இதன்பின்பு திரு. ப. நாகலிங்கம் அவர்களும், அவர்பின் அவரின் புதல்வர்களும் செய்துகொண்ட பெருமுயற்சியினால் நாற்பத்தொரு அங்கத்தவர்களைக் கொண்ட பொதுச்சபை தெரிவுசெய்யப்பட, அச் சபையினர் 1976–8–2இல் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தைப் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். பொறுப்பேற்ற ஒரு ஆண்டு முடிவதற்கிடையிலேயே ஆழ்வார் அடியார்கள் உதவியுடன் இலட்சக்கணக்கான ரூபாக்களைச் செலவுசெய்து, கண்டோர் கண் களிப்படையப் புனராவர்த்தன கும்பாபிடேக விழாவை நிறைவேற்றியுள்ளனர். இனி மேலும் இராசகோபுரம் கட்டல் முதலிய திருப்பணிகளைச் செய்யும் பேரார்வத்துடன் இயங்கிவருகின்றனர். ஸ்ரீ வல்லிபுரேசன் அருள் பரவட்டும்.

அரிஓம் நமோ நாராயணா!
ரங்கா ரங்கா பாண்டுரங்கா!
ராமா ராமா சீதாராமா!

உ

# வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய வரலாறு

**திரு. ப. இராமலிங்கம் அவர்கள்,** இளைப்பாறிய தலைமை ஆசிரியர்

இலங்கை மாதாவின் சிரமெனத் திகழ்வது யாழ்ப்பாணக் குடாநாடு. அதன் இரு கண்கள் போலத் துலங்குவன துன்னாலை, பொன்னாலை என்னுமிடங்களிலுள்ள விஷ்ணு தலங்களாகும் என்று தட்சண கைலாய மான்மியம் கூறுகிறது. அலைகடலின் தென்றல், அழகிய வெண்மணற்பரப்பு, அதைச்சுற்றி விரிந்த குடைபோல் படர்ந்து நிழல்தரும் பல்வேறு விருட்சங்கள். இவற்றின் மத்தியிலே பார்ப்பவர் மனத்திலே பக்திப் பரவசம் தோன்றச் செய்து ஓங்கி உயர்ந்து, இன்று புதுப்பொலிவுடன் கம்பீரமாகக் காட்சிதருகிறது வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில். வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வாலயம் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கமைந்த பிரசித்திபெற்ற புராதன திருத்தலமாகும்.

இவ்வாலயம் அமைந்த வரலாறே அதி அற்புதமானது. முன்னொருபோது அலைபொங்கி யெழும் வங்கக் கடலிலே, இன்று தீர்த்த உற்சவம் நடைபெறும் பகுதியிலே, அதிசய மச்ச மொன்று துள்ளிக்குதித்து ஆரவாரம் செய்து மக்களைத் திகைக்க வைத்தது. கற்கோவளப் பகுதியில் வாழ்ந்த கடலோடிகள் பலரும் செய்த முயற்சிகள் எவையுமே பலிக்கவில்லை. வலை களைக் கிழித்துக்கொண்டு மிக்க உயரத்தில் பாய்ந்து குதித்தும், கட்டுமரங்களை எட்டியுதைத்தும் வேடிக்கையாக விளையாடிக்கொண்டிருந்தது. இரண்டொரு தினங்களாக நடைபெற்ற இச் செய்தி கேட்டு மக்கள் கூட்டம் திரண்டது. வராத்துப்பளையைச் சேர்ந்த லவல்லி என்னும் வல்லிநாச்சி நாகசாபம் தீர்ப்பதற்காக மிக்க பயபக்தியுடன் நெடுங்காலம் தவமிருந்துவந்தார். அன்றிரவு பகவான் அவருக்குக் கனவில் தோன்றி, சில சம்பவங்களையும் சொல்லி குறித்த இடத்துக்கு மறுநாள் வருமாறும் பணித்தார். மறுநாட்காலை லவல்லி அவ்விடம் வந்தார். கரையில் உட்கார்ந்து கைகளை நீட்டியவண்ணம் பகவானின் திருநாமங்களைத் தியானித்து இருந்தார். அம்மீன் அம்மையாரின் மடியிற் குதித்ததும் அழகான குழந்தையாக மாறியது. கண்ணன் உதித்தான் என்று அடியார்கள் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். லவல்லியின் ஆலோசனைப்படி அப்புனிதக் குழந்தையை ஓர் பல்லக்கில் வைத்து அன்பர்களும் அடியார் களும் அவ்வூர், அயலூர்ப் பிரமுகர்களும் புடைசூழச் செடிகளுக்கும் மண்மேடுகளுக்கும் ஊடாகத் தூக்கி வந்தனர். அன்று குழந்தைக் கண்ணனைத் தூக்கிவந்த கற்கோவள மக்களுக்குக் கோவிலில் திருவிழாக் காலங்களில் சுவாமி தூக்குதல், சமுத்திர தீர்த்தத்தில் பங்குபற்றி நடத்துதல், கண்ணனை நம்பிக் கடற்றொழில் செய்தல், இன்னும் பெண்மணிகள் கோவிலின் விசேட தினங்களில் பக்தியுடன் கும்மிபாடுதல் போன்றவை, இன்றும் வழிவழி வந்த செயல்களாக இருக்கின்றன. நெடுந்தூரம் தூக்கிவந்தமையாற் களைப்புற்ற மக்கள் மரநிழலிற் பல்லக்கை இறக்கி வைத்துவிட்டுத் தாகசாந்தி செய்தபின் மீண்டும் தூக்க முயன்ற போது அசைக்கவும் முடியவில்லை. குழந்தையும் மறைந்துவிட்டது. அச்சமயம் அந்தணர் ஒருவர் தோன்றி அங்குள்ள பக்தர் ஒருவரிடம் சக்கரம் ஒன்றைக் கொடுத்து அதையே வைத்துப் பூசிக்கும்படி கூறிச் சென்றார். அவ்வழக்கப்படியே மூலஸ்தானத்தில் சக்கரம் வைத்தே இன்றும் பூசிக்கப்படுகிறது. சக்கரத்தைக் கையேற்ற அப்பக்தர் அதைத் தாபித்து முழுமண்டலம் அதாவது தொண்ணூறு நாள் பூசைகள் அபிஷேகங்கள் செய்துவந்தார்.

அதன்பின் அப்பத்தர், அக்காணிச் சொந்தக்காரர்களும் அண்மையில் வசித்தவர் களும் அப்பிரதிட்டையைப் பயபக்தியாய் நடத்தியவர்களும் விஷ்ணுபக்தர்களுமான அவ்வூர், அயலூர் மக்களிடம் ஒப்படைத்துச் சென்றார். அவர்கள் பூசாகாரியங்களை நடத்தியும் பரிபாலித்தும் வந்தனர். வைஷ்ணவ ஆலயங்களிலும் அக்காலத்தில் விநாயகருக்கே முதலிடம்

கொடுக்கப்பட்டது. எனவே, அவர்கள் ஆலும் குளமும் அதனருகே நெல்வயலும் சூழ எழுந்தருளி இருக்கும் குருக்கட்டுச் சித்திவிநாயகருக்குப் பூசையை முடித்துக்கொண்டுதான் வல்லிபுர சுவாமிக்குப் பூசை செய்வது வழக்கமாயிற்று. அவர்களால் ஆக்கப்பட்ட அன்றைய பாரம்பரியங்களிற் சில இன்றும் திருவிழாக் காலங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி விநாயகராலயத்தின் மேற்குத் திசையில் இரு திருக்குளங்கள் உண்டு. அவற்றில் ஒன்றிலிருந்துதான் திருநாமம் எடுக்கப்பட்டுவந்தது. சமுத்திர தீர்த்தத்துக்கு அடுத்தநாள் நடைபெறும் கேணித் தீர்த்தத்தை மற்றைய குளத்தில் நடத்திவந்தார்கள்.

பூசகர்களுக்கிடையே பாகப்பிரிவினை காரணமாக ஏற்பட்ட பிணக்கினுல், தற்காலம் புலோலி தெற்கில் (அக்காலம் புலோலி கிழக்கு), 'மணியம்வீடு' என வழங்கப்படும் வீட்டில் வசித்தவரும், காலஞ்சென்ற பிரசித்த நொத்தாரிஸ் வி. சேனுதிராசசேகரத்தின் பீட்டனுமான விஞசித்தம்பி என்பவரிடம் அக்காலத்துப் பஞ்சாயத்துச் சபையார் பரிபாலனத்தை ஒப்படைத்து உரிமையாளரின் பிரதிநிதி ஒருவரையும் கௌரவ ஆலோசகராக நியமித்தனர். பரிபாலனத்தில் மாற்றம் ஏற்பட்டமையினுல் இக்காலப்பகுதியில் பிள்ளையார், நாகதம்பிரான், நாச்சிமார் தெய்வங்கள் புதியனவாக உட்பிரகாரத்தில் அமைக்கப்பட்டன. அவர்களே கோவிலைப் பயபக்தியாய்ப் பரிபாலித்து வந்தனர்.

சிலகாலஞ் சென்றபின் புலோலி தெற்கைச் சேர்ந்த புலோலித் தம்பி என்பவரின் கைக்குப் பரிபாலனம் மாறியது. தருமசீலராகிய அவரும் கோவில் முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு உழைத்தார். இன்றைய கேணி குளமாக அமைக்கப்பட்டுக் கேணித் தீர்த்தமும் நடைபெற்றது.

அதன்பின் துன்னலை தெற்கைச் சேர்ந்த மயில்வாகனம் உடையார் முகாமையாளரானுர். அவரின் சிரேஷ்ட புதல்வன் ம. தாமோதரம்பிள்ளை அவர்களின் காலத்தில் திருப்பணி வேலைகள் பலவும் நடைபெற்றன. கேணி திருப்பணியாகக் கட்டப்பட்டது. வெளிமண்டபம் அமைக்கப்பட்டது. அவரின் சகோதரன் ம. செல்லத்துரை அவர்களும் கோவில் முன்னேற்றத்துக்கு முன்னின்று உழைத்தார். இவர்களிடமிருந்து கி. பி. 1932இல் முன்னர் கூறிய புலோலித்தம்பியின் மரபிலுதித்தவரும் பிரசித்திபெற்றவருமான திரு. நா. இராசா அவர்கள் நிர்வாகத்தைக் கைப்பற்றி நடத்திவந்தார். ஷெ கோவிலில் இன்று நடைபெற்றுவரும் ஆறுநேரப் பூசையை ஆக்கியவர் அவரே. கோவில் வீதிகளை ஒப்பமாக்குவித்தபோதுதான் சிங்கள மன்னனுன வசபன்காலச் சாசனங்கள் சில அகப்பட்டன. வசபன் காலத்திலேயே விஷ்ணுதேவாலயம் இங்கு இருந்தது என்பதை இச் சாசனம் உறுதிப்படுத்துவதாக உள்ளது. மேலும் பல தர்மகர்த்தாக்கள் மாறிமாறி ஆலயத்தைப் பரிபாலித்து வந்தனர்.

அதன்பின் இவ்வாலயத் தேரை அமைத்தற்கண், இரவும் பகலும் அயராது மிக்க சிரமத்தோடு முன்னின்று உழைத்து நிறைவேற்றியவரும், இரதோற்சவத்தைச் சிறப்புற நடத்தியவரும் ஆகிய அமரர் ப. நாகலிங்கம் அவர்களின் மாபெரும் முயற்சியாலும் அமரர் ம. செல்வத்துரை அவர்களின் ஒத்துழைப்பாலும் முறையான தர்மகர்த்தாசபை மூலம் 2—8—76இல் இருந்து செயலாற்றி வருகிறது.

※

பொறாமை என்னும் விஷப்பூண்டு சிலசமயங்களில் பண்பட்ட உள்ளத் தரையிலேகூட முளைத்து விடுகிறது. அது வேரூன்றி வளர்ந்துவிட்டால் அதைப் பிடுங்கி எறிவது மிகக் கடினம்.

— துரோணர்

# வல்லிபுரத்துப் பொன்னேட்டின் வரலாற்று முக்கியத்துவம்

## ஒரு மறு மதிப்பீடு

**கலாநிதி செல்லத்துரை குணசிங்கம் அவர்கள், M. A., Ph. D. (Cey.)**
விரிவுரையாளர், பேராதனை வளாகம்

இலங்கையின் ஆதிகால வரலாற்றை, குறிப்பாக வட இலங்கையின் வரலாற்றை ஒழுங்கான முறையிலே அமைத்துக்கூறக் கிடைக்கின்ற ஆதாரங்கள் மிகக் குறைவாகும். இந்நிலையில், கிடைக்கின்ற இலக்கிய ஆதாரங்களையும் சாசன ஆதாரங்களையும் பிற தொல்பொருள் ஆதாரங்களையும் தனித்தனியாகவும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தியும் ஆராய்வதன்மூலமே ஓரளவிற்காவது உண்மை வரலாற்றைக் கண்டுகொள்ளமுடியும். ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி யாராய்வதற்கு இவ்விரு வகைப்பட்ட ஆதாரங்களும் ஒரு கால வரலாற்றுக்குரியனவாக இல்லாதபோது, தனித்தனியே அவற்றைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில், எந்த அளவிற்கு அவற்றிலிருந்து தகவல்களை — வரலாற்றுத் தகவல்களை — பிழிந்தெடுக்க முடியுமோ அந்த அளவிற்குப் பிழிந்தெடுத்துவிடுகின்றோம். இவ்வாறு இயன்ற அளவிற்கு வரலாற்றுத் தகவல்களை நாம் பெற முயலும்போது, ஆதாரங்களைக் கையாளுவதனைப் பொறுத்து அவதானமாக இருக்கவேண்டியவர்களாயுள்ளோம். இதிலும் சாசன ஆதாரங்களைக் காட்டிலும் இலக்கிய ஆதாரங்களைப் பொறுத்தே இக்கவனம் — எச்சரிக்கை — கூடுதலாக வேண்டப்படுகின்றது. இலக்கிய ஆதாரங்கள் காலத்தால் திரிபடையக் கூடியவை. நம்பவியலாத தகவல்களைக் கொண்டிருக்கக்கூடியன. இத்தன்மையான இலக்கிய ஆதாரங்களை விளங்கி அவை தரும் தகவல்களின் அடிப்படை உண்மை கண்டு வரலாற்றுக்கு ஆதாரமாகப் பயன்படுத்தும்போது அதிக கவனம் வேண்டும். ஆனால், சாசன ஆதாரங்கள் பெரும்பாலும் சமகால நடவடிக்கைகளை எடுத்துக் கூறுகின்றனவாதலால் கூடிய அளவிற்கு நம்பத்தக்கவை; காலத்தால் திரிபடையாதவை. இவற்றைக் கையாளுவது இலகுவானதாகும். ஆயினும் பிற ஆதாரங்கள் இல்லாதபோது, அல்லது போதிய தகவல்கள் சாசனங்களிலிருந்து கிடைக்காதபோது கிடைக்கின்ற ஒரு சில சாசனங்களிலிருந்து போதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைக் கொள்ளும்போது, தெரிந்தோ தெரியாமலோ, அச்சாசனங்களின் வரலாற்று முக்கியத்துவம் மிகைப்படுத்தப்படுவதும் உண்டு. வல்லிபுரத்துப் பொன்னேடும் இத்தகைய மிகைப்படுத்தப்பட்ட முக்கியத்துவம் பெற்றதொன்றாகவே தோன்றுகின்றது. அதாவது, இப்பொன்னேடு கொண்டுள்ள தகவல்களையும் அத்தகவல்கள் வரலாற்றுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள முறையையும் கொண்டு பார்க்கும்போது, அப்பொன்னேட்டின் வரலாற்று முக்கியத்துவம் மிகைப்படுத்தப்பட்டுள்ளதாகக் காணலாம்.

வல்லிபுரத்துப் பொன்னேடு, 1936ஆம் ஆண்டளவில், தற்போது வட இலங்கையில் பிரசித்திபெற்று விளங்கும் வல்லிபுர ஆழ்வார் எனப்பட்ட விஷ்ணு கோவிலுக்குரிய நிலத்திலுள்ள பழைய கட்டிட அத்திவாரத்தின் அழிபாடுகளிடையே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இச்சாசனம் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றைத் திருப்திகரமாக அறிந்துகொள்வதற்குத் தெளிவான தகவல்கள் கிடைக்கவில்லை. நான்கு வரிகளைக் கொண்ட இச்சாசனம், பொன்னேட்டின் ஒரு பக்கத்தில் மாத்திரமே பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்து வளர்ச்சியின் அடிப்படையிலும் அச்சாசனத்தில் குறிப்பிடப்படும் மன்னனை அடையாளங்காண முயன்றும், அது கிறித்துவுக்குப் பிற்பட்ட முதலாம் நூற்றுண்டின் பிற்பகுதிக்குரியதாக, அல்லது இரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதிக்குரியதாகக் கொள்ளலாம். பிராமியில் எழுதப்பட்ட இச்சாசனத்தின் மொழி ஆதிச் சிங்கள மொழியாகும்.

இச் சாசனம் பொறிக்கப்பட்டதன் நோக்கம், பேரரசன் 'வசபனின்' ஆட்சியில், நாகதீபத்தை இளிகிரிய என்ற மந்திரி நிருவகித்தபோது, பியகுகதிஸ்ஸ என்பவன் படகர அதன என்ற இடத்தில் ஒரு விகாரையைக் கட்டினுன் என்ற செய்தியைப் பதிவு செய்வதற்காகவாகும். இவ்வாறு இச்சாசனத்திற் கூறப்படுகின்ற செய்தியைக்கொண்டு, ஏற்கெனவே பிறராற் பெறப்பட்டது போலச் சில வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

1. இச்சாசனத்தில் இடம்பெறுகின்ற அரசனை, கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த வசபனுடன் அடையாளங் காண்பது ஏற்றுக் கொள்ளப்பட்டால், நாகதீபம் என அழைக்கப்பட்ட பகுதி, அநுராதபுர இராச்சியத்து அரசனுல் நியமிக்கப்பட்ட தேசாதிபதியினுல் நிருவகிக்கப்பட்டது என்றும், அதனுல் இக்காலமளவில் அநுராதபுர மன்னனின் ஆதிக்கத்திற்கு நாகதீபம் உட்பட்டிருந்த தென்றும் கொள்ளலாம்.
2. இச்சாசனத்தில் வருகின்ற பியகுக என்ற இடம், தற்காலத்திலுள்ள புங்குடுதீவுடன் அடையாளங் காணப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட்டால் புங்குடுதீவு என்ற இடப்பெயர் பற்றிய முதற்குறிப்பினைத் தரும் சாசனத் தகவல் இதுவாகும்.

இவற்றைவிட, இன்னும் சில வரலாற்றுச் செய்திகளை இச்சாசனத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடிகின்றது எனச் சிலர் எடுத்துக்காட்டியுள்ளார்கள். அவற்றை எந்த அளவிற்கு ஏற்க முடியும் என்பதுபற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இச்சாசனத்தைப் பதிப்பித்த காலஞ்சென்ற பேராசிரியர் ஸெனரத் பரணவிதான அவர்கள், இச்சாசனத்தில் இடம் பெறும் படகர — அதன (BADAKARA—ATANA) என்பதனை இடப்பெயராகக் கொண்டு, "தற்போதுள்ள வல்லிபுரம் என்ற இடம், ஆதியில் படகர அதன என்ற பெயர் பெற்றிருந்ததனை அறியலாம்" எனக் கூறியுள்ளார். இதனை ஏற்றுக்கொள்வதில் சில கஷ்டங்கள் உள்ளன. அதாவது, இவ்விடத்தில் தோன்றும் கேள்விகள், பரணவிதானவின் கருத்தை ஏற்பதற்குத் தடையாகவுள்ளன. "1936ஆம் ஆண்டு இச் சாசனம் கண்டறியப்பட்டபோது எங்கிருந்ததோ, அதே இடத்தில் தான் இச்சாசனம் பொறிக்கப்பட்ட காலமான கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவிலும் இருந்திருக்கமுடியுமா? பிறிதோர் இடத்தில் பொறிக்கப்பட்ட இப்பொன்னேடு இலகுவாக எடுத்துச் செல்லக்கூடியதான தொன்றாதலால், காலப்போக்கில் இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாமா? பியகுக என்ற இன்னோர் இடப்பெயர் இச்சாசனத்திற் குறிப்பிடப்பட்டிருத்தலால் அதையண்டிய பகுதியாக இந்தப் படகர அதன என்ற இடம் இருந்திருக்க முடியாதா?" இத்தகைய வினாக்களுக்குத் தீர்வு கண்ட பின்னரே, இடப் பெயரை அடையாளங் காணும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். பரணவிதான அவர்களின் கருத்து, இவ்வேடு கண்டுபிடிக்கப்பட்டுள்ள சூழ்நிலை, எங்கு ஆரம்பத்தில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவில் இச் சாசனம் பொறிக்கப்பட்டதோ, அங்கேயே அது கண்டுபிடிக்கப்பட்டது என்பதாகும். ஏற்கெனவே குறிப்பிடப்பட்டதுபோல, இச்சாசனங் கண்டு பிடிக்கப்பட்ட வரலாற்றை, (அதாவது, இச்சாசனம் யாரால் கண்டு பிடிக்கப்பட்டது. எச் சந்தர்ப்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டது, சரியாக எப்போது கண்டுபிடிக்கப்பட்டது போன்ற விபரங்களை) பெற்றுக்கொள்வதற்குத் தகவல்கள் கிடைக்கவில்லை. இதுபற்றிய விபரங்களைப் பரணவிதான அவர்களும் அறிந்திருக்கவில்லை என்பதனை, அவர் தமது பதிப்பின் ஆரம்பத்திற் கூறியவற்றைக் கொண்டு காணலாம். இப்பிரச்சினைகள் மாத்திரமன்றி, இந்தப் படகர—அதன என்ற இடத்தை அடையாளங் காணக் கூடிய விதத்தில் சமகால இலக்கியங்களிலோ பிற்பட்ட கால இலக்கியங்களிலோ அல்லது பிற சாசனங்களிலோ தகவல்கள் கிடைக்கவில்லை. இப்பிரச்சினைகளைத் தீர்க்காது, படகர அதன என்பதனைத் தற்கால வல்லிபுரம் என்ற இடத்துடன் அடையாளங் கண்டு அதன் மீது விவாதங்களைக் கட்டியெழுப்புதல் வரலாற்று ஆய்வு முறைக்குப் புறம்பான தொன்றாகும்.

மேலும், இச்சாசனம் ஆதிச் சிங்கள மொழியில் பொறிக்கப்பட்டுள்ளமையால் அப்போது அங்கு ஆதிக்கத்திலிருந்த மொழி சிங்களமொழி எனப் பரணவிதான அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார். இவ்வாறு கூறுதல் எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது என்பது கவனிக்கப்படத்தக்கது.

ஏதாவது ஒரு செய்தி பற்றி மக்கள் அறியச் செய்வதற்கு, எந்த மக்கள் அச்செய்தியை அறிய வேண்டுமோ, அம்மக்கள் விளங்கக்கூடிய மொழியிலே சாசனங்கள் பொறிக்கப்படுவதும் உண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக, சிங்கள வர்த்தகர்கள் தென்னிந்தியாவுடன் வணிக முயற்சியை மேற்கொண்ட காலங்களில், தென்னிந்தியப் பகுதியில் ஒரு சில கல்வெட்டுக்களைத் தமிழில் பொறித்திருந்தனர். இதே போன்று தென்னிந்தியத் தமிழ்நாட்டு வர்த்தகர்கள், ஈழத்துடன் வியாபார முயற்சிகளை மேற்கொண்டிருந்த போது ஒரு கல்வெட்டைச் சிங்கள மொழியில் பொறித்தனர். ஆனால் இந்த ஒரு சில உதாரணங்களைக் கொண்டு, எந்தப்பகுதியில் எந்த மொழி பேசும் மக்கள் கூடுதலாக இருந்தனரோ, அவர்கள் விளங்கக்கூடிய மொழியிலேயே எப்போதும் சாசனங்களைப் பொறித்தனர் எனக் கூறுவது கடினமாகும். இத்தகைய ஒரு மரபு வழக்கில் இருந்தது என்று கொள்வதற்கு எத்தன்மையான சான்றும் கிடைக்கவில்லை. இத்தகைய ஒரு மரபு வழக்கில் இருந்திருந்தால், இலங்கையில் சோழர் ஆட்சி நடைபெற்ற போது, சிங்களவர் பெரும்பான்மையாக வாழ்ந்த பகுதிகளில், சோழர் சிங்கள மொழியில் சாசனங்களைப் பொறித்திருக்கலாம். ஆனால், அவ்வாறு பொறிக்கப்படாமைக்குச் சான்றில்லை. ஆகவே, மக்கள் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொள்ளாது, என்ன விடயத்தை எந்த மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென விரும்பினார்களோ, அந்த மக்கள் விளங்கும் மொழியிலேயே சாசனங்களைப் பொறித்தனர் எனக் கொள்ளுவதே பொருத்தமானதாகத் தோன்றுகின்றது. எல்லா மக்களுக்கும் பொதுவான அரச ஆணைபற்றி மக்களுக்குத் தெரிவிக்கையில், நாட்டில், அல்லது நாட்டின் ஒரு பகுதியில் எந்த இனமக்கள் கூடுதலாக வாழ்ந்தனரோ, அந்த மக்களுக்குரிய மொழியில் சாசனத்தைப் பொறித்திருப்பர். ஆனால், நாம் இங்கே கவனிக்கின்ற வல்லிபுரத்துப் பொன்னேடு, பௌத்த விஹாரை ஒன்று கட்டப்பட்டமையைப் பதிவு செய்கின்றது. பௌத்த விஹாரை ஒன்று கட்டப்பட்ட செய்தியைப் பௌத்த மக்களுக்கு அறிவிக்க வேண்டுமேயன்றி, இந்துக்களுக்கு அறிவிக்கவேண்டிய தேவையில்லை என வேண்டும். ஆதலால், இச்சாசனம் ஆதிச் சிங்களமொழியில் பொறிக்கப்பட்டிருப்பதனைக் கொண்டு, அங்கு சிங்கள மொழியே ஆதிக்கம் பெற்ற மொழியாக இருந்தது எனக் கூற முற்படுதல் பொருத்தமற்றதாகும்.

மேற்கூறிய விளக்கத்தை வலுப்படுத்துவதற்கு, இன்னும் சிலவற்றை இங்கு எடுத்துக் காட்டலாம். இச்சாசனம், ஏற்கெனவே கூறியது போன்று, விஹாரை ஒன்று கட்டப்பட்டமை பற்றிக் குறிப்பிடுவதால், இந்தப் பொன்னேடு ஆரம்பத்தில் விஹாரையொன்றில் வைத்துக் கட்டப்பட்டிருக்கலாம். அல்லது விஹாரையில் வைத்துப் பேணப்பட்டிருக்கலாம். முற்பட்ட காலங்களில் அரசர் ஆணையையோ, அரச நடவடிக்கைகளையோ, அரசைச் சேர்ந்தோரின் நடவடிக்கைகளையோ, அனேகமாக எல்லோரும் அறியவேண்டுமென்பதற்காகக் கற்றூண்களிலும் கற்பாறைகளிலும் அவைபற்றிய செய்திகள் பொறிக்கப்பட்டன. இலங்கையில் மாத்திரமன்றி அதற்கண்மையிலுள்ள தமிழ்

நாட்டுப் பகுதிகளிலும், கற்றூண்களிலும் பாறைகளிலுமே கூடுதலான சாசனங்கள் பொறிக்கப்பட்டன. இவ்வாறிருக்கும்போது பொன்னேட்டில் பொறிக்கப்பட்ட ஒரு சிறிய சாசனம் விஹாரை ஒன்றில் வைத்துப் பேணப்பட்டதாக அறிய முடிவதால், நாட்டுமக்கள் அல்லது நாட்டின் ஒருபகுதி மக்கள் எல்லோரும் அறிவதனையே பெருநோக்காகக் கொண்டு பொறிக்கப்பட்டதாக இப் பொன்னேட்டைக் கொள்ளல்முடியாது. ஆனால் மத்திய காலத்தில், குறிப்பாக எட்டாம் ஒன்பதாம் நூற்றுண்டுகளிலிருந்து தமிழ்நாட்டில், அரச ஆணைகள் பற்றியனவாகவோ, அரச நடவடிக்கைகள் பற்றியனவாகவோ, அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் நடவடிக்கைகள் பற்றியனவாகவோ காணப்பட்ட சாசனங்கள் எல்லாம் பெரும்பாலும் கோயிற் சுவர்களிலேயே நீளமாகப் பொறிக்கப்பட்டமையை அறிகிறோம். ஆகவே, மத்தியகாலத் தமிழ்நாட்டு இந்துக்கோயிற் சுவர்களில், சாசனங்கள் பொதுமக்களின் கவனத்திற்காகப் பொறிக்கப்பட்டதுபோன்று, கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட இரண்டாம் நூற்றுண்டு ஈழத்து விஹாரைகளிலும் பொதுமக்கள் எல்லோரதும் கவனத்திற்காகச் சாசனங்கள் பேணப்பட்டிருக்க முடியாதா என்ற கேள்வி இந்த இடத்தில் எழுகின்றது. இருந்தும், மத்தியகால இந்துக்கோயில்களின் நடவடிககைகளையும், கிறிஸ்து சகாப்த ஆரம்பத்துப் பௌத்த விஹாரைகளின் நடவடிக்கைகளையும் வேறுபடுத்துவதன்மூலம் இக்கேள்விக்கு விளக்கம் கொடுக்கமுடியும்.

பல்லவர் காலத்தின் முழுப்பகுதியிலும் நடைபெற்றுக் கொண்டிருந்த பக்தியியக்கத்தின் உண்மையான தாக்கத்தினை, அடுத்துவந்த சோழர் காலத்திலேயே தெளிவாக உணர்தல் முடிகின்றது. பக்தியியக்கம் கொடுத்த சமயவுணர்வின் விளைவாகத் தமிழ்நாட்டில் முன்னர் என்றுமில்லாத விதத்திற் பெருங் கோயில்கள் கட்டப்பட்டமை மாத்திரமன்றி அப்பெருங்கோயில்களே மக்களின் வாழ்க்கை முறையினையும், பண்பாட்டினையும் செம்மைப்படுத்துவனவாகவும் விளங்கின. அதாவது இக் காலப் பகுதியில் கோயில் நிறுவனங்களே பண்பாட்டு வளர்ச்சியின் மத்திய ஸ்தானங்களாக விளங்கின. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் இந்நிறுவனங்கள், மன்னர் தொடக்கம் சாதாரண மக்கள் வரையுள்ள பல தரப்பட்ட மக்களினதும் கவனத்தை ஈர்க்கக்கூடிய சமய நிறுவனங்களாகக் காணப்பட்டமையால், மன்னரதும் பிறரதும் பிரச்சார இடங்களாக மாறலாயின. மன்னரும் பிறரும் தங்கள் நடவடிக்கைகளைப் பலரும் அறிய வேண்டுமாயின், பொதுமக்கள் வாழ்வோடு நெருங்கி இணைவுற்ற கோயில்களிலேயே தம் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளைப் பொறிக்க வேண்டுமென உணர்ந்து, அவற்றைத் தம் பிரச்சார மேடைகளாக்கிக் கொண்டனர். இவ்வாறு மத்திய காலத்துத் தமிழ்நாட்டு இந்துக்கோயில்கள் பெற்றிருந்த ஒரு மேம்பட்ட நிலையை, கிறிஸ்து சகாப்த ஆரம்ப காலத்துப் பௌத்த விஹாரைகள் பெற்றிருக்கவில்லை. பொதுமக்கள் வாழ்வோடு பெருமளவிற்குத் தொடர்பற்று விளங்கிய விஹாரை, மத்தியகால இந்துக் கோயில்கள் பெற்றிருந்தது போன்ற "பிரச்சார நிலையங்கள்" என்ற நிலையினை அடைந்திருத்தல் முடியாது. ஆகவே, ஒரு சிறிய பொன்னேட்டில் நான்கு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ள சாசனம், ஆதிச் சிங்கள மொழியிற் பொறிக்கப்பட்டிருப்பதனைக் கொண்டு, அக்காலப் பகுதியில் நாகதீபத்திலோ அல்லது நாகதீபத்தைச் சேர்ந்த ஒரு பிரிவிலோ, சிங்களமொழிதான் ஆட்சி மொழியாக அல்லது ஆதிக்கம்மிக்க மொழியாக இருந்ததென்று கொள்வது இப்பொன்னேட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை மிகைப்படுத்துவதாக அமைகின்றது.

எப்பொழுதும் எல்லாக் கருமங்களையும் செய்த போதிலும் என்னைச் சரணடைகின்றவன் எனதருளால் சாசுவதமானதும் அழியாததுமாகிய பதமடைவான். — கீதை

* * *

விவேகத்தால் கர்மங்களையெல்லாம் என்பால் ஒப்படைத்து, என்னைக் குறியாகக் கொண்டு புத்தியோகத்தைச் சார்ந்திருந்து யாண்டும் சித்தத்தை என்பால் வைப்பாயாக. — கீதை

* * *

கீதா தியானம் செய்கிறவனை, பாபங்களுள் மகாபயமும் தீண்டுவதில்லை. தாமரையிலை தண்ணீரில் தோய்வுறுதிருப்பதுபோன்று அவன் இருக்கிறான். — கீதை

* * *

நெருப்புக்கெனத் தனியாக நிச்சயமான உருவம் இல்லை. ஆனால் ஜ்வலிக்கின்ற தணற் கட்டிகளாக இருக்கும்போது நெருப்பானது பல்வேறு உருவங்களை ஏற்கத்தான் செய்கின்றது. இவ்வாறு உருவமொன்று அற்ற நெருப்பு, உருவங்கள் கொண்டதாகக் காணப்படுகின்றது. அதே போன்று உருவமில்லாத பகவான், சில வேளைகளில் நிச்சயமான உருவங்களைத் தம்மீது ஏற்று அணிகின்றார். — ஸ்ரீ இராமகிருஷ்ணர்

# மாயவன் வந்துருக்காட்டுகின்றான்.......

கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்கள், B. A. (Hons.), Ph. D. (Cey.), D. Phil (oxon)
துணைப்பேராசிரியர், தமிழ்த் துறை, பேராதனை வளாகம்

ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியிலே மேற்காட்டிய தொடர் காணப்படுகின்றது. பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பரமனுக்குத் தமிழ்நாட்டில் வழங்கி வந்த மிகப்பழைய பெயர்கள் மால், மாயவன் என்பனவாகும். முல்லைப்பாட்டின் முற்பகுதியில் 'மால்' என்ற சொல்லும். மதுரைக்காஞ்சியின் பிற்பகுதியில் 'மாயவன்' என்ற சொல்லும், வருகின்றன. மாயோன், மாயவன் என்பன மாற்று வடிவங்கள். தொல்காப்பியம் 'மாயோன் மேய காடுறை உலகமும்' என மாயவன் முல்லை நிலத் தெய்வம் என்று கூறுகிறது. மாயவன் என்ற பெயரை மாயையோடு தொடர்புபடுத்தி விளக்குவதே பொருத்தம்போலத் தெரியவருகிறது. உலகத்தைப் பற்றிய அறிவு, கால அளவாலும் பரப்பு அளவாலும் விரிந்து விரிந்து செல்ல, உலகத்தில் நடப்பன யாவும் பொய்ம்மைத் தோற்றம், கானல் நீர், புலன்களால் ஏற்பட்ட மயக்கம், அறியாமையால் ஏற்பட்ட இருள் என்று சிந்திக்கும் நோக்கு இந்தியாவிலே தோன்றியது. இந்தவகை நோக்கில், உலகமே மாயமயமாகக் காட்சியளிக்கிறது. உயிர்களுக்கு அகங்காரம், மமகாரம் ஏற்படுவதற்குக் காரணமான மாயை, சக்தியாக உருவகிக்கப்படுகின்றது. மாயாசக்தி மாயவனுடைய விருப்பப்படி இயங்குகிறது. வல்லிபுரக் கோவிலிலே மக்கள் இறைவனைக் கூறி அழைப்பதற்கு 'மாயவா' என்னும் விளியையே மிகவும் அதிகமாகப் பயன்படுத்துவது இங்கு நோக்கத்தக்கது.

வடஇந்திய விஷ்ணு வணக்கமும் தமிழ்நாட்டுத் திருமால் வணக்கமும் ஆராய்ச்சியாளரிடையே ஒரு பிரச்சினையைக் கிளப்பிவிட்டுள்ளன. வட இந்தியத் தெய்வமும் தென்னிந்தியத் தெய்வமும் ஆதிகாலத்தில் வெவ்வேறாக இருந்து பிற்காலத்திலே பிணைந்திருக்கக் கூடுமா என்பதே அது. கண்ணன் திராவிடத்தெய்வம் என்ற முடிவுக்கும் சிலர் வந்துள்ளனர், ஆராய்ச்சியாளர்களுடைய கூற்றுக்களை நுணுகி நோக்கும்பொழுது சங்க காலத்திலேயே வடநாட்டு வைணவ சமயக் கருத்துக்கள் தமிழ்நாட்டுக்குட் புகுந்து கலந்துவிட்டன என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது. கண்ணனைப் பற்றிய கதைகள் சில, தமிழ்நாட்டிலே மட்டும்தான் காணப்படுகின்றன. நப்பின்னைப்பிராட்டியார், குருந்தொசித்தது, குடக்கூத்து முதலிய ஆடல்கள், தந்பாண்டனுக்கும் தாழிக்கும் வீடளித்தது முதலிய குறிப்புக்கள் தமிழ் இலக்கியத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. விஷ்ணுவைக் குறிப்பிடும் வேதமும் புராணங்களும் வடஇந்தியாவிலே தோன்றித் தென்னிந்தியாவை நோக்கிப் பரவிவந்தபோதிலும், தமிழ்நாட்டு முல்லை நிலத்தெய்வம் பற்றிய சில கூறுகளும் வைணவத்துட் கலந்துள்ளன என்றே கூறவேண்டியுள்ளது.

வேதத்தை உலகுக்கு அருளியவர் திருமாலே என்ற நம்பிக்கையுடைய வைணவர், உலகைஉய்விப்பதற்காகக் கருணைக்கடலான இறைவன், உருக்கள் பல கொண்டதை எடுத்துக்காட்டுவர். வேதத்தைப் புணையாகக்கொண்டு உயிர்கள் கடைத்தேறுமையைக் கண்ட திருமால் உலகத்தை உய்விப்பதற்காகவும் தருமத்தை நிலைநாட்டுவதற்காகவும் தீமையை ஒழிப்பதற்காவும் பத்து அவதாரங்கள் எடுத்தார். மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராகாவதாரம், நரசிம்மாவதாரம், வாமனாவதாரம், இராமாவதாரம் மூன்று, கண்ணனவதாரம், கல்கியவதாரம் என்பனவே அப் பத்து அவதாரங்கள் என்பன பொதுவான நம்பிக்கையாகும். கல்கியவதாரம் இன்னும் நிகழவில்லை. இனிமேல் நிகழும் என்று நம்பப்படுகிறது. கண்ணன் அவதாரமே திருமாலுடைய அவதாரங்களுள்ளே மிகவும் பூரணமான அவதாரமெனப்படுகின்றது. மகாபாரதத்தின் முக்கியமான கதாபாத்திரங்களில் ஒருவரான கண்ணன் போர்க்களத்திலே அருச்சுனனுக்குச் செய்த உபதேசம் பகவத்கீதை என்ற பெயரிலே தனிநூலாக விளங்குகின்றது. பகவத்கீதை வைணவமக்களுக்குப் பாராயண நூலாகவும் வாழ்க்கை வழிகாட்டியாகவும் விளங்குகின்றது. மீன், ஆமை, பன்றி, சிங்கம் என்ற உருவங்களிலே திருமால் தோன்றி மக்களுக்கு நன்மையயக்கும் காரியங்களை ஆற்றியமையை முதல் நான்கு அவதாரங்கள் சுட்டுகின்றன.

அவதாரங்கள் மூலமும் உலகை உய்விக்கமுடியவில்லை என்பதைக் கண்ட பகவான், எடுத்த அடுத்த முயற்சியே ஆழ்வார்கள் அவதாரமெனப்படுகின்றது. திருமாலின் அணிகள், ஆயுதம், வாகனம் முதலியன ஆழ்வார்கள் பன்னிருவராகத் தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் அவதரித்து வேதத்தைத் தமிழ் செய்தன — சைவ மறுமலர்ச்சிக்காக நாயன்மார் தோன்றியது போல, வைணவ மறுமலர்ச்சிக்காக ஆழ்வார்கள் தோன்றினர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் முதலியோர் தொண்டை நாட்டிலும், திருமங்கையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார் சோழநாட்டிலும், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் பாண்டியநாட்டிலும், குலசேகராழ்வார் சேரநாட்டிலும் தோன்றிப் பாசுரங்களை அருளிச்செய்து வைணவ பக்தியியக்கத்தை ஆரம்பித்துவைத்தனர். ஆழ்வார்களும், நாயன்மாராதியோரும் செய்த பணியால், தமிழைப் போலப் பக்திப் பாடல்கள் மிகுந்துள்ள மொழி பிறிதில்லை என்ற பெருமை தமிழுக்குக் கிடைத்தது. வடஇந்திய வைணவர்கள், ஆழ்வார்கள் அவதரித்த நாடு என்று தமிழ்

நாட்டை மரியாதையோடு குறிப்பிடும் நிலை தோன்றியது எனவே, ஆழ்வார்களும், மாயவன் காட்டும் உருவங்கள் சில என்றே கொள்ளலாம்.

ஆழ்வார்களுடைய பாசுரங்களில் இலங்கையைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. அவை யாவும் இராமாயணக் கதைத்தொடர்பானவை. தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கத்தானைப் பாடிய திருமாலை யில் வரும் ஒரு பாட்டு மேற்படி கருத்துக்கு விலக்குப் போல அமைந்திருக்கிறது.

" குடதிசை முடியை வைத்துக் குணதிசைப் பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை யிலங்கை நோக்கி
கடல்நிறக் கடவு ளெந்தை யரவணைத் துயிலு மாகண்டு
உடலெனக் குருகு மாலோ என்செய்கே னுலகத் தீரே!"

வைணவக் கோயில்களிலே மிகச்சிறந்தது திருவரங்க மாகும். சைவர்களுக்குச் சிதம்பரம் எப்படிப்பட்டதோ வைணவர்களுக்குத் திருவரங்கம் அப்படிப்பட்டதாகும். தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கத் தொண் டுக்கே தம்மை அர்ப்பணித்து, 'இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்று பாடியவர். கோயில், பெரிய கோயில், பூலோக வைகுண்டம் என்றெல்லாம் பல வாறுகச் சிறப்பித்துக் கூறப்படும் திருவரங்கத்துத் திரு மால், சயனக்கோலத்திலிருக்குமாற்றைப் பாடும்போது 'தென்திசை இலங்கை நோக்கி' என்று பாடுவதற்கான காரணம் பலர் அறியாததாக இருக்கக்கூடும். இராமா யணத் தொடர்பான கதை இங்கும் காணப்படுகின்றது. இலங்கையில் எழுந்தருளியிருக்க வேண்டிய திருமாலே திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் என்று ஒருகதை வழங்கிவருகிறது. அரங்கநாதன் பிரமனுலே பூசிக்கப்பட்ட மூர்த்தியென்றும், பிரமா, இக்ஷ்வாகுவின் தவத்துக்கிரங்கி அவனுக்கு அம்மூர்த்தியைக் கொடுத் தாரென்றும், இக்ஷ்வாகு முதல் இராமர் வரையிலே அம் மூர்த்தியைப் பூசித்துவந்தனரென்றும், இராமர் அம் மூர்த்தியை விபீஷணனுக்குக் கொடுத்தாரென்றும், அவன் அயோத்தியிலிருந்து இலங்கைக்கு வரும்வழியில் அரங்கநாதன் திருவரங்கத்திலிருந்து புடைபெயராது தங்கிவிட்டாரென்றும் கூறப்படுகின்றது.

ஈழநாட்டிலே, திருமாலே முழுமுதற் றெய்வம் என்று கொண்டாடும் வைணவம் தனிச்சமயப் பிரிவாக இடம் பெறுதபோதிலும், திருமால் கோவில்கள் பல உள. சிங்கள பௌத்த மக்கள் புத்தர்பிரான் திருமாலை இலங்கைக்கு ஒரு காவற்றெய்வமாக வைத்துள்ளா ரென்று நம்புகின்றனர். அவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளிலே, மகாவிஷ்ணு தேவாலயங்கள் சில உண்டு. தமிழ் இந்துக்கள் பெரும்பான்மையாராக உள்ள பகுதிகளிலே உள்ள, மிகப் பிரபலமான கோவில் களாக வல்லிபுரம் ஆழ்வார் கோவில், பொன்னாலை வரதராசப்பெருமான் கோவில், வண்ணார்பண்ணை வேங்க டேசப்பெருமான் கோவில் என்னும் யாழ்ப்பாண மா வட்டத்திலுள்ள கோவில்களைக் கூறலாம். மட்டக் களப்புப் பிரதேசத்திலே மந்தாறுமுலே, களுவாஞ்சிக் குடி, காரைதீவு, பெரியபோரதீவு, கிரான் முதலிய இடங்களிலும் மலையகத்திலே மாத்தளையிலும் திருமால் கோயில்கள் காணப்படுகின்றன.

சுவாமிக்கும் தலத்துக்கும் வழங்கும் பெயர்கொண்டு ஆராயும்போது வல்லிபுரம் ஆழ்வார் கோயில், தனிச் சிறப்புடன் விளங்குவதைக் காணமுடிகின்றது. வரத ராசப் பெருமாள் என்னும் பெயர் காஞ்சிபுரத்திலிருந் தும், வேங்கடப்பெருமாள் என்னும் பெயர் வேங்கட மலையிலிருந்தும் தருவிக்கப்பட்டுள்ளன. ஆழ்வார் என்னும் பெயர் பொதுவாகத் திருமாலடியாருக்கே வழங்குவது. அப்பெயர் திருமாலைக் குறிக்க வழங்குவ தற்குச் சான்று, சோழப் பெருமன்னர் காலத் தமிழ்ச் சாசனமொன்றிலே 'ஆழ்வார் திருவரங்கதேவர்' என்று வருகின்றது. ஆழ்வான் என்ற சொல்லுக்குச் சூரியன் என்ற பொருள் உண்டு. வேதகாலத்திலே சூரியனோடு தொடர்புடைய தெய்வமாகவே விஷ்ணு கூறப்படுகிறார். சூரியகுலத்து மன்னர்களாலே பூசிக்கப்பட்டு வந்தமை யால் அரங்கநாதர் ஆழ்வார் எனப்பட்டிருக்கலாம். வல்லிபுரநாதர் ஆழ்வாரெனப்பட்டமைக்கான காரணம் ஆராயப்படவேண்டும். இலங்கையின் வடபகுதியும், இந்தியாவின் சில பகுதிகளும் மிகப்பழைய காலத்திலே நாகர் என்ற இனத்தாரின் குடியிருப்புக்களைக் கொண் டிருந்தன. யாழ்ப்பாணத்தின் மிகப்பழைய பெயர்களி லொன்று நாகத்தீவு என்பதாகும். நாகர்கள் நாகங் களைப் போற்றுவதோடு சூரியனையும் வழிபட்டனர். வல்லிபுர ஆழ்வாரின் மிகப்பழைய உரு சூரியக்கடவு ளாக இருந்திருக்கலாம்.

ஈழநாட்டிலே பௌத்த சமயம் பரவியபோது வல்லி புரத்திலே கி. பி. இரண்டாம் நூற்றுண்டளவிலே பௌத்த விகாரையொன்று கட்டப்பட்டதை வல்லிபுரம் பொன்னேட்டுச் சாசனம் எடுத்துக்கூறுகின்றது. நாக வழிபாடு பௌத்த சமயத்துடனும் நெருங்கிய தொடர் புள்ளது. பௌத்தர்கள் நாகபாம்பைக் கொல்ல மறுப் பதை இன்றும் காணலாம். பௌத்த விகாரைகளுக்குத் துவாரபாலகர்களாக நாகபாம்புகள் செதுக்கப்பட்டுள் ளன. இந்தியாவிலும் இலங்கையிலும் பௌத்தம் செல் வாக்கோடு விளங்கிய காலத்திலே, யாழ்ப்பாணமாகிய நாகதீபத்திலே பௌத்த விகாரை தோன்றியதில் வியப் பில்லை. இந்த நேரத்திலே, வல்லிபுரம் என்றால், என்ன என்று நோக்குவதும் பொருத்தமே. வல்லியம் என்றால், ஆய்ப்பாடியைக் குறிக்கும் என்பது பிங்கலந்தை நிகண்டி லிருந்து தெரியவருகின்றது. வல்லி என்ற சொல்லுக்கு ஆய்ப்பாடி (அதாவது கோகுலம்) என்ற கருத்து ஆனந்த விகடன் அகராதியிலே காணப்படுகின்றது. புரம் என்ற பலபொருளொருசொல்லுக்குக் கோவில் என்ற பொருளும் உண்டு. எனவே, வல்லிபுரக்கோவில் என்பது ஆய்ப்பாடிக் கோவில் என்ற பொருள்தரும். கண்ணன் வளர்ந்த இடம் ஆய்ப்பாடியாகும். இன்றைய வல்லி புரத்தலம் ஆய்ப்பாடிக் கோவிலான வரலாறு நுணுகி ஆராயப்படவேண்டும்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் பழைய இராசதானி யாகிய சிங்கைநகர், வல்லிபுரப் பகுதியே என்ற கருத்தை அறிஞர் பலர் வெளியிட்டுள்ளனர். முதலியார் இராச நாயகம், சுவாமி ஞானப்பிரகாசர், பேராசிரியர் கண பதிப்பிள்ளை முதலியோர் அவர்களுட் சிலர். வல்லிபுரப் பகுதியிற் பல இடங்களிலே குவிந்துகிடக்கின்ற பூர்வ காலக் கல்லோடுகள், கீச்சுக்கிட்டம் ஆகியனவும் அங் கிருந்து கரைமார்க்கமாகப் போன பெரும்வீதியின் அடையாளங்களும் அவ்வூர் ஒருகாலத்திலே பெருநக

ராக விளங்கியிருக்கவேண்டுமென்பதைக் காட்டும். ஆரியச்சக்கரவர்த்திகள் பெருங் கடற்படையுடையோராய்ப் பிரசித்திபெற்றிருந்தமையினால், மரக்கலத்திரள் ஆழியிற் சுலபமாய்ச் சென்று திரும்பக்கூடிய துறைமுகம் இருந்திருக்கவேண்டும். வல்லிபுரத்துறை இப்பொழுதும் கப்பற்றுறையென்றே வழங்கப்படுகின்றது. இவ்வூருக்குச் சிங்கைநகர் என்ற பெயர் எப்படிவந்திருக்கலாம் என நோக்கவேண்டும்.

சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்துப்படி கி. பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து, கலிங்கநாட்டு உக்கிரசிங்கனும் அவன் பரம்பரையினரும் சிங்கை நகரை அரசதானியாகக்கொண்டு அரசியற்றிவந்தனர். கலிங்க நாட்டின் பழைய தலைநகரமொன்றின் பெயர் சிங்கபுரமாகும். மேலும், கலிங்கநாட்டிலே சிங்காசலம் அல்லது சிங்கவேள் குன்றம் என்ற பிரசித்திபெற்ற வைணவத் திருப்பதி உண்டு. திருமால் நரசிங்காவதாரம் கொண்ட இடம் அதுவென்று நம்பப்படுகிறது. பல்லவர்காலத் தொடக்கத்திலே தமிழ்நாட்டின் வடபகுதியிலே நரசிங்காவதாரம் சிறப்பாகப் போற்றப்பட்டதாகத் தெரியவருகின்றது. காஞ்சீபுரம் வரதராசப்பெருமாள் கோவிலிற்கூட, ஆழ்வார்களாற் பாடப்பெற்றது அத்திகிரியின் அடிவாரத்திலுள்ள அழகிய சிங்கப்பெருமாளே என்று அறிஞர்கள் சிலர் கூறுகின்றனர். தொண்டைமண்டலத்திலுள்ள இன்னொரு பெரிய வைணவத்தலம் சோழசிங்கபுரம் என்றிருந்து இன்று மருவிச் சோளங்கிபுரம் என்று வழங்குகின்றது. சீர்காழியிலிருந்த திருவாலித்தலத்தில் நரசிம்மன் சந்நிதி மிகப்பழையது. இவை இந்தியத் தமிழ்நாட்டிலே தோன்றிய பல்லவர் காலத்திலே, இலங்கையிலே சிங்கைநகர் குறிப்பிடப்படுவதால், அக்காலத்தில் வல்லிபுரப் பகுதியிலே நரசிங்கமூர்த்தி தாபிக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் அம்மூர்த்தியின் பெயராலேயே ஊர்ப்பெயர் சிங்கைநகரென்று மாறிற்றென்றும் கொள்ளக்கிடக்கின்றது.

நாகர்கள் சூரியனுக்கு அமைத்த கோயிலே காலத்தின் கோலத்தால் பௌத்த விகாரையாக மாறிப் பின்பு நரசிங்கப்பெருமாள் கோவிலாக மாறியிருக்கவேண்டும். மயிலை, சீனி. வேங்கடசாமி தம்முடைய 'சமணமும் தமிழும்' என்னும் ஆராய்ச்சி நூலுள், வெளியிட்ட கருத்தொன்று இவ்விடத்திலே விளக்கம் தருகின்றது. ''சமணக் கோயில்களையும் பௌத்தக் கோயில்களையும் வைணவர் கைப்பற்றும்போது முதலில் நரசிங்கமூர்த்தியை அமைப்பது வழக்கம்''. சமணத்தலமொன்று வைணவத் தலமாக மாறியமையை, அவர் எடுத்துக் காட்டியுள்ளார். பாண்டிய நாட்டிலே, மதுரையை அடுத்த யானைமலை, முன்பு சமணர்களின் இருப்பிடமாக விளங்கியது. 'யானைமலையாதியாய இடங்களிலே' சமணர் வாழ்ந்ததைத் திருஞானசம்பந்தர் தம்முடைய திருவாலவாய்ப் பதிகத்திலே குறிப்பிட்டுள்ளார். கி. பி. 770இல் மாரன்காரி என்னும் பாண்டிய நாட்டு அமைச்சர், யானைமலைக் குகையிலே நரசிங்கமூர்த்தியை அமைப்பதற்குச் சைவர்களும் உடன்பட்டு நின்றார்கள், இந்நிகழ்ச்சி திருவிளையாடற் புராணத்திலே உருவகிக்கப்பட்டு, சமணருடைய யானையைச் சோமசுந்தரப் பெருமான் நரசிங்க அம்பு எய்து கொன்றார் என்று யானை எய்த படலத்திற் கூறப்படுகின்றது. கி. பி. எட்டாம் நூற்றாண்டிலே உக்கிரசிங்கன் காலத்திலே, இன்றைய வல்லிபுரப் பகுதியிலே, சிங்கை நகர் மேற்கூறிய முறையிலேயே தோன்றியிருக்கவேண்டும் என்று கொள்ளலாம்.

வல்லிபுரக்கோவில் வரலாற்றில் ஏற்பட்டு வந்த மாற்றங்களால், எச்சாராருக்கும் தீங்கு இழைக்கப்பட்டுவிட்டதாகக் கொள்ளல் முடியாது. பௌத்தத்தை வைணவம் அழித்துவிட்டது என்று கூறுவதிலே முழு உண்மையில்லை. கௌதம புத்தருக்கும் புத்தருடைய போதனைகளுக்கும் வைணவம் மிக உயர்ந்த கௌரவம் அளித்துப் பௌத்தத்தைத் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டதென்பதே பொருத்தம். தமிழ்நாட்டு மாமல்லபுரத்திலே ஆதிவராகர் குகைக் கல்வெட்டு கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே கௌதம புத்தரை விஷ்ணுவின் பத்து அவதாரங்களிலே ஒன்றாகக் கூறுவதை இங்கே கவனிக்கவேண்டும். பத்து அவதாரங்களின் வரிசையிலே கிருஷ்ணாவதாரம் விடுபட்டுப் புத்தரவதாரம் சேர்க்கப்பட்டுள்ளது. திருமாலே கௌதம புத்தராக அவதரித்தார் என்ற நம்பிக்கை அங்கே காணப்படுகின்றது. பௌத்தர்கள் வைணவர்களாக மாறுவதற்கும் பௌத்த விகாரை திருமால் கோயிலாக மாறுவதற்கும் இந்த நம்பிக்கை வழிவகுத்திருக்கிறது. சூரிய வழிபாட்டிலே, சூரிய வழிபாட்டுச் சின்னமாகச் சக்கரம் இடம்பெறுவது இயல்பு. அதே சக்கரம், பௌத்தர் செல்வாக்குற்றிருந்த காலத்திலே, பௌத்த மதத்திலே சிறப்பாகப் பேசப்படும் தருமச்சக்கரமாக மாறியிருக்கும். அதே சக்கரம் திருமால் கோவிலிலே திருமாலின் சக்திவாய்ந்த ஆயுதமான சக்கரமாகப் போற்றப்படும் நிலை ஏற்பட்டிருக்கவேண்டும். வல்லிபுரக் கோவிலின் வரலாறு இந்த நெறியிலேயே சென்றிருக்கவேண்டும்.

கி. பி. பதினைன்காம் நூற்றாண்டிலே சபுமால் குமரையா யாழ்ப்பாண அரசனை வென்று, சிங்கை நகரை அழித்துத் தரைமட்டமாக்கி, நல்லூரிலே புதிய இராசதானியை ஏற்படுத்தினான். அதன் பின்பு சிங்கை நகர் புனரமைப்புப் பெறவில்லை. சிங்கை நகரிலிருந்த கோவிலுக்கு என்ன நடந்ததென்பதைத் துணியுமாறு இல்லை. இன்றைய வல்லிபுரக் கோவிலிலே, நரசிம்ம மூர்த்தி முக்கியத்துவம் பெறவில்லை. இன்றைய வல்லிபுரக் கோவிற் கட்டிடம் மிகப் பழைய காலத்துக்கு உரியதும் அன்று. எனவே, சிங்கைநகர் அழிபாடுகளிடையே வல்லிபுரக் கோவிலே புனரமைப்புச் செய்யப்பட்டிருக்க வேண்டுமெனலாம். சிங்கைநகர் வரலாறு பழங்கதையாகப் போய்விட்ட பின்பு ஆய்ப்பாடி இராசதானி என்று பொருள்படும் வல்லிபுரம் என்ற பெயர் வழக்குக்கு வந்திருக்க வேண்டும். புரம் என்ற சொல்லுக்கு இராசதானி என்ற பெயருண்மையைத் திவாகர நிகண்டு எடுத்துக்கூறுகிறது. புவிமன்னர் அரசோச்சிக் கால வெள்ளத்திலே மறைந்துவிட, ஆய்ப்பாடி இராசதானியிலே இன்று மாயவன் தனிக்காட்டு இராசாவாகக் காட்சியருளுகிறான்.

ஆய்ப்பாடி என்ற பெயருக்கேற்க, வல்லிபுரக் கோவில் இறைவனுக்கும் சக்திக்குமான உருவத்திருமேனிகள் — கண்ணன் வளர்ந்த வடமதுரை ஆய்ப்பாடி அல்லது கோகுலத்தில் இருப்பதைப் போல — நவமோகனக் கிருஷ்ணன், ருக்மணிப்பிராட்டி, சத்தியபாமாப் பிராட்டி என்பனவாம். வைணவர் சிறப்பாகக் கொண்டாடும் ஏகாதசி தோறும் வல்லிபுரக் கோவிலிலே உற்சவம் நடைபெறுகிறது. ஆவணி மாதம் கிருஷ்ண ஜயந்தி கொண்டாடப்பெற்று, உறியடி உற்சவத்திலே, கண்ணனாக மாயவன் தோன்றுகிறான். வல்லிபுரக் கோவிலிலே, திருவுலாக் காலத்திலே, கிருஷ்ணாவதாரத்திற் சிறப்பிடம் பெறும் வெண்ணெய் திருடல், மகா கம்சன் போர் என்பன நடித்துக்காட்டப்படுகின்றன. நாராயணன் நடத்திய நரகாசுரசங்காரம் தீபாவலியின் போது இடம்பெறுகின்றது. மார்கழி மாதம் முழுவதும் உதயநேரத்தில் விசேட பூசை நடைபெறுகின்றது. ஞாயிற்றுக்கிழமையே வல்லிபுர ஆழ்வாருக்கு மிகச் சிறப்பான நாளாகக் கொள்ளப்படுகின்றது. சூரியனுக்குரிய ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு சிறப்பிடம் பெறுவது ஆதியிலே சூரிய வணக்கத்தோடு இருந்த தொடர்பினால் ஏற்பட்டு இருக்கக்கூடும்.

அரி ஓம் நம

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி

## நித்தியாஞ்சலிப் பதிகம்

கவிஞர் கற்கை சரவணனுர் அவர்கள்
இளைப்பாறிய தலைமை ஆசிரியர்

### காப்பு வெண்பா

பாலாழி கொண்டபணிப் பாயறுயில் கொண்டகர
மேலாழி கொண்டமுகின் மேனியனே — மாலான
மாயவனே, மாதவனே, மன்னுதச பேதவுரு
ஆயவனே, அச்சுதனே ஆள்.

### பாசுரம் (அந்தாதி வரிசை)

ஆதியே! மூல மே!யென் ருனையொன் றள்ளற் பள்ள
மீதிலே கராவாய்ப் பட்டு மிடலழிந் தழைத்த வோலம்
காதிலே விழலும், காத்தல் கடனெனக் கருட னூர்ந்தப்
போதிலே புகலாய் நின்ற பொற்பதம் போற்றி! போற்றி! (1)

*(அள்ளற்பள்ளம் — சேறுடைய நீர்நிலைப் பள்ளம்,
கரா — முதலை, மிடல் — வலிமை, புகல் — தஞ்சம்)*

போற்றிநீ புவியிற் றீயோர் புன்மையோர் பெருகித் தீமை
ஆற்றிவாழ் பொழுதிற் காத்தற் காமவ தார மொன்றில்
தோற்றிவந் தருள்வாய்; அல்லார் தொடக்கறுத் திடுவாய்; நின்சீர்
சாற்றிடற் கெளிதோ; நோன்ருள் சரணமே சரணம் ஐயா! (2)

*(அல்லார் — தீயோர், தொடக்கு — பாவம்,
நோன்ருள் — வலிய பாதம், சரண் — அடைக்கலம்)*

சரணமுன் துணைத்தா ளென்று சார்பவர்க் கபய மீவாய்;
மரணமே யுறினு நின்னை மனமொழி மெய்க ளென்ற
கரணமூன் றினுங்கொண் டாரைக் கைவிடாய்; இதனைக் காட்ட
இரணியன் மகனுக் காக வீருருக் கொண்டாய்; எந்தாய்! (3)

*(துணைத்தாள் — இரு பாதங்கள், ஈருரு — நரசிங்கவுருவம்,
கரணம் மூன்று — மனம், வாக்கு, காயம்)*

எந்தையே! "பிரக லாத னெம்பிரா னிதோமுன் நிற்கும்
மைந்துசேர் தூணின் மற்றைத் துரும்பிலு முள்ளான்" என்று
தந்தையா மவன்முன் சொல்லத் தறியுதைத் திடலுஞ், சீறி
வந்தவீ ருருவக் கோலம் வையகம் மறக்கப் போமோ. (4)

*(மைந்து — வலிமை, தறி — தூண், வையகம் — உலகம்,
ஈருருவக் கோலம் — நரசிங்க உருவம்)*

மறக்குமோ வுலகுன் றன்னை; மாயப்பேய் முலையின் பாலை
யிறக்குமா றுயிரோ டுண்டோய்! ஏழுல குண்டு கொண்டோய்!
சிறக்குஞ்சக் கரம்வில் தண்டு செய்யவாள் சங்கொ டேவிண்
பறக்கும்புண் மீதி லூர்ந்த பைந்துழாய் மாலை யோனே! (5)

(விண் பறக்கும் புள் — கருடன்,
பஞ்சாயுதம் — சக்கரம், வில், தண்டு, வாள், சங்கு)

பைந்துழாய் மலரின் மாலைப் பரவிய சிரமும், மார்பில்
கந்தநாண் மலராஞ் செய்ய கமலவா சனப்பொன் மாதும்,
சந்தமார் கதிர்கொள் ரத்னக் கவுத்துவ மணியுஞ் சாரும்
நந்தகோ பாலன் சேயாய் நவிலுநா ரணனே! போற்றி. (6)

(சிரம் — தலை, பொன்மாது — இலக்குமி, சந்தம் — அழகு,
கவுத்துவமணி — திருமாலின் மார்பணி)

நாரணா! நிலநீ ரங்கி வளிவெளிப் பஞ்ச பூதக்
காரணா! கமலக் கண்ணா! கருமுகிற் கோல வண்ணா!
பூரணா! புவனத் தோற்றப் போக்கிலா வநாதி யான
ஆரணா! ஐவாய்ச் சென்னி யராவணை யச்சு தாவே! (7)

(புவனம் — உலகம், ஆரணம் — வேதம்,
ஐவாய்ச் சென்னி அரா — ஐந்துதலை நாகம்)

அச்சுதா! அமலா! ஆதி! யடியவர் வினைக ளீர்க்கும்
நச்சுமா மருந்தே! தேனே! நறுஞ்சுவைக் கனியே! பாலே!
மச்சமாய், விலங்கு, புள்ளாய், மற்றுமற் றுயிராய்த் தோன்றி
உச்சமா யுலகைக் காக்க வுதித்தவேய்ங் குழலோய்! போற்றி! (8)

(நச்சுதல் — விரும்புதல், வேய்ங்குழல் — புல்லாங்குழல்)

குழலிலே யமுத கானங் குழைத்தகோ பாலா! உன்ருள்
நிழலிலே யடைந்தார் நித்ய நிம்மதி நிலைக்கு ணிற்பர்;
விழலிலே வாழ்வுத் தோணி வேட்கைவெம் புயற்குள் விட்டோர்
அழலிலே ஆழ்வர், வீழ்வர் அடியறு தாலம் போலே. (9)

(தாள் — பாதம், தாலம் — பனை,
நித்ய நிம்மதி நிலை — நித்திய சாந்த நிலை (வைகுந்த வாழ்வு)

தாலங்கள் மாக்கள் புன்குத் தக்கடேம் வருக்கை தெங்கின்
சாலங்கள் மணற்குன் றங்கள் தமமெழில் தழைக்குஞ் சூழ்வில்
நீலங்கொள் இந்து நேமி நீள்கரைக் கணித்தாய்ச் செந்நெல்
மூலங்கொள் மூதூர் வல்லி புரத்திருப் பதியுள் ளோனே! (10)

(இந்துநேமி — இந்துசமுத்திரம், சூழ்வில் — சூழலில்)

திருப்பதி யாகும் வல்லி புரத்திலே, ஆழ்வார் கோவில்
விருப்புட னமர்ந்த மாலே! விஷ்ணுவே! வேத வித்தே!
கருப்பொலி பிறப்பை நீக்குங் கண்ணனே! பின்னைகேள்வா!
உருப்பொலி காம வேளை யுதவிய வுலப்பி லோனே! (11)

(பின்னை கேள்வன் — நப்பின்னையின் மணவாளன்,
காமவேள் — மன்மதன், இவன் திருமாலின் புத்திரன்,
உலப்பிலோன் — அழியாது நிலைத்துவாழும் நித்தியன்)

உ

ஓம் நாராயணாய நம:

# வைஷ்ணவ சமயமும், வல்லிபுர ஆழ்வார் ஆலயமும்

வித்துவான், பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை அவர்கள்

சேய பங்கயச் சிறுவிரல் அங்கையில் திரட்டிய நறுவெண்ணெய்
ஆயர் மங்கையர் இடஇட, அமுதுசெய் தாடிய திருக்கூத்தும்,
நேயமும் குறுமுறு வலும்,புரிந்து பார்த் தருளிய நெடுங்கண்ணும்,
மாயவன் திருவடி வமும், அழகும் என் மனத்தைவிட் டகலாவே.

(வில்லிபுத்தூராழ்வார் பாரதம்)

1. உடம்பை இயக்குவது உயிர்; உயிர் இல்லாமல் உடம்பு தானே தனித்து இயங்காது; அவ்வாறே உலகங்களையும், அவற்றிலுள்ள பொருள்கள் அனைத்தையும் இயக்குவது ஒரு பொருள்; ஒரு சக்தி; அந்தச் சக்தி இறைவன் என்னும் பொருளின் பெருங்கருணை; அவனது அருள், திருவருள்; அவனின்றி, எவ்வுயிரும், எவ்வுலகும், உலகங்களிலுள்ள எப்பொருளும் அசையா.

2. இறைவன், அந்தத் திருவருட் சக்தியால் உலகில் உள்ள எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் ஒன்றாய்க் கலந்து நிற்கின்றான்; அவ்வாறு கலந்தும், அவற்றின் வயப்படாமல், எல்லாம் தன்வயப்பட, வேறாய்ச் சுதந்திரமாய் நிற்கின்றான்; உயிர்கள் அவனுடைய அடிமைகள்; உலகங்களும், அவற்றில் உள்ள எல்லாப் பொருள்களும் அவனுடைய உடைமைகள்; உயிர்கள் செய்யும் கன்மத்திற் கேற்ப, இறைவன் அவ்வுயிர்களின் இடமாக **உடன் நின்று**, அவற்றைச் செலுத்திக்கொண்டிருக்கிறான்; சுருங்கச் சொல்லின், இறைவன், ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கின்றான்; இது சித்தாந்தம்.

3. உலகம், உயிர், இறைவன் என்னும் மூன்றும், உள்பொருள்கள்; ஆகாயத்தாமரைப்பூ போன்ற இல்பொருள்கள் அல்ல; இந்த மூன்று பொருள்களும் சம்பந்தம் உடையன. இம்மூன்றற்கும் உள்ள சம்பந்தம் மிக்க பண்டைக் காலத்திலேயே மெய்ஞ்ஞானிகளால் ஆராயப்பட்டு, முடிபுகள் காணப்பட்டுள்ளது. அம்முடிபுகளை ஈண்டுக் கூறுதல் அத்தியாவசியகம் ஆகும்.

4. "இறைவன், உயிர் இரண்டும் வெவ்வேறான தனிப்பொருள்கள்; ஒளியும் இருளும் போல அவை உள்ளன; அவை தம்முட் பெரிதும் பேதம் உள்ளன." என்பர் ஒரு சாரார்; பேதங் கூறுவதனால், இவ்வாறு கூறுவார் '**பேதவாதிகள்**' எனப்படுவர். இரண்டு பொருள்களாகக் கூறுவதனால், இவர்கள் 'துவைதிகள்' எனவும் அழைக்கப்படுவர்; (துவைதம் : இரண்டாக உள்ளவை.) இக்கொள்கை மிக்க பண்டைக்காலந் தொட்டே இருந்து வந்ததேனும், மாத்துவாச்சாரியார் முதலிய ஆன்றோராலேயே நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

5. "இறைவன், உயிர்கள் என இரு பொருள்கள் இல்லை; இறைவனே ஒரு பொருள்; வேறு பொருள் இல்லை; அவனே உயிர்களாகவும் இருக்கின்றான். உலகங்களாகவும், உலகத்தில் உள்ள பொருள்களாகவும் காட்சி அளிப்பவன் அவனே. பொருள் எனப்படுவது அந்த ஒன்றே; மூன்றன்று; இரண்டுமன்று. பொன்னும், பொன்னாற் செய்யப்பட்ட பொருள்களும் வெவ்வேறான பொருள்கள் அல்லவே. எல்லாம் ஒன்றுதானே. அதுபோலவே இறைவன் எனப்படும் ஒரே பொருளே உயிர்களாகவும், உலகங்களாகவும், உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களாகவும் உள்ளன" என்பர் மற்றொரு சாரார். இவர்கள் அபேதங் கூறுபவர்களாதலின் "அபேத வாதிகள்" எனப்படுவர். இந்தக் கொள்கை 'மாயாவாதம்' என்று சொல்லப்படும். இக் கொள்கை உடையவர்களே இன்றைக்குத் தமக்குத் தாமே 'வேதாந்திகள்' என்று பெயரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'ஒரே பொருள் மாத்திரம் உண்டு' என்பதனால் இக் கொள்கை உடையவர்கள் 'கேவலாத்துவிதிகள்' என்றும் சொல்லப்படுவர். ஆதிசங்கராச்சாரியார் முதலிய சான்றோர்களால் இது பரவலாயிற்று.

6. "இறைவன் உயிர்களையும், உலகங்களையும், உலகத்துப் பொருள்களையும் உடலாக்கித், தான் உயிராக நின்று அவற்றை இயக்கிக் கொண்டிருக்கின்றான். இறைவனைத் தவிர உயிர் வேறன்றாயினும் உயிர், கடவுள் என்பவை ஒன்றேயாயினும், உயிர், பாசம் என்பவற்றாலும், தன் குணங்களாகிய சக்தி, சங்கற்பங்களாலும், இறைவன் உயிர்கள் போலாது, விசிட்டம் உடையவனாய் நிற்கிறான்:" என்பர் இன்னொரு சாரார். சொல்லும், பொருளும்போல இவை உள்ளன என்று எடுத்துக்காட்டும் அவர்கள் கூறுவர். இவர்கள் '**விசிட்டாத்துவிதிகள்**' எனப் பெயர் பெறுவர். இஃது இராமானுசர், போதாயனர் முதலிய அறிஞர்களாற் பரப்பப்படலாயிற்று. அந்த இறைவனே **விஷ்ணு**: அவரைப் பரமான்மாவாக, அக் கொள்கை உடைமையே **வைஷ்ணவம்**. இது பாஞ்சராத்திரம் எனவும் கூறப்படும். 'பேதாபேதவாதிகள்' எனவும் இக் கொள்கையுடையவர்கள் அழைக்கப்படுவர்.

7. சுருங்கக்கூறின் "உடலை இயக்குவது மனம், அந்த மனத்தை இயக்குவது உயிர்; இவ்வாறே பிரபஞ்சத்தை இயக்குவது பிரபஞ்ச மனம் என்னும் மகாமனம்; அம் மகாமனத்தை இயக்குவது இறைவன். எனவே, உயிர்கள், உலகங்கள் ஆகியவை உடலாக, இறைவன் உயிராக

நின்று இயக்கியும், இயங்கியும் கொண்டிருக்கிறுன் என்பது வைஷ்ண சமயக் கொள்கை" என்று இன்றைய நவீன சமய ஆராய்ச்சியாளர் கூறுவர். மனம் சடமாக லின், உடலை இயக்குவது உயிரேயென்பர் பிராசீனர்.

8. 'இறைவன் உயிர்களின் வேறுய் நிற்கிறுன், என்ற (இரு பொருட்) துவிதீயக் கொள்கையையும், இறைவன், உயிர் என இரண்டில்லை, என்ற (ஒரு பொருட்) கேவலாத் துவிதக் கொள்கையையும், 'ஒரு வகையால் ஒன்றுயும், மற்றெருவகையால் வேறுயும், சொல்லும் பொருளும் போல உள்ளன, என்ற விசிட்டாத் துவிதக் கொள்கையையும் ஒருங்கு ஏற்று நிற்பது மற்றெரு கொள்கை. அக் கொள்கையின்படி "இறைவன், உயிர்களோடு உயிரும் உடம்பும் போலக் கலந்து நிற்கும் தன்மையால் ஒன்றுயும்; கண்ணும், சூரியனும் போல, உயிர்களாகாது, பொருட்டன்மையால் வேறுயும்; உயிர்கள், உடல்கள், உலகங்கள், உலகத்துப் பொருள்கள் என்பவற்றை எல்லாம், உயிரறிவு கண்ணொளியை உடனின்று செலுத்துமாறு போலச் செலுத்தி நிற்பதால் உடனுயும் நிற்கிறுன்" என்பதாகும். இக் கொள்கை 'சுத்தாத்துவிதம்' எனப்படும். இதுவே சுத்தாத்துவித சைவசித்தாந்தம் எனப்படுவதுமாகும். 'சிவம்' என்னும் பெயரால், அவ் விறைவனை அழைத்து, எம்முட் பலர் இன்று பின்பற்றி நிற்கும் கொள்கை இதுவேயாகும். இது நீலகண்டர் முதலிய பரமஞானிகளாற் பரப்பப்படலாயிற்று.

9. இந்த அத்துவிதக் கொள்கைகள், வேதத்தைத் தொகுத்தருளிய வியாசரால் எழுதப்பட்டதும், பிரம மீமாம்சை, உத்தரமீமாம்சை, வேதாந்த சூத்திரம் என்னும் பெயர்களால் அழைக்கப்படுவதும் ஆகிய வியாச சூத்திரத்திற்குப் பாஷியங்கள் எழுதிய இந்தச் சான்றேர்களால் நன்கு பரப்பப்பட்டனவேயாயினும் அச்சான்றேர்களின் காலங்களுக்கு முன்னரே வேத காலத்திலும், அதற்கு முற்பட்ட காலத்திலும் தோன்றியனவேயாகும். எனவே திருமால் (விஷ்ணு) வழிபாடு கால ஆராய்ச்சிக்கு மிக முற்பட்ட தொன்மைவாய்ந்தது என்பது விளங்கக் கிடக்கின்றது.

10. மிக்க பழைய தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் "மாயோன் மேய காடுறை யுலகமும்" என்ற அடி இதற்குச் சான்று பகருகின்றது. 'திருமாற்கு இரு நான்கு' என்னும் வெண்பாவால், எட்டுச் செய்யுள்கள் பரிபாடலில் இருந்தனவாகக் கூறப்பட்டுள்ளது. ஏனைய சங்கங்களின் இலக்கிய நூல்களாலும், திருமால் வழிபாடு இருந்த வரலாறு புலப்படலாகும். திருக்குறளில் 'உலகளந்தான் தாயது' (திருக். 610) என்பது முதலியன, இதற்கு ஆதாரங்கள் ஆகும்.

11. 'விசிட்டாத்துவிதம்' பேசும் வைஷ்ணவ சமயமும், 'சுத்தாத்துவிதம்' சொல்லும் சைவசமயமும் அத்துவித நுட்பத்தில் மாத்திரமேயன்றி, தத்துவத் தொகை, பிரபஞ்ச முதல் துணைநிமித்த காரணங்கள், ஆன்ம இலக்கணம் முதலியவற்றிலும் வேற்றுமையுடையனவே யாயினும், அவை தம்முட் பெரிதும் ஒற்றுமையுடையனவேயாகும். இந்தியாவில் ஒரு காலத்தில் இவை இரண்டும் மிக்க வேற்றுமையுடையன என்ற கருத்து மிக மேலோங்கிச் சமய வாதங்களுக்கும், சமயச் சண்டைகளுக்கும் இடமாயிருந்தது உண்மையே; எனினும், பிற்காலத்தில் அவை அடங்கி, அமைதியும், சமாதானமும் உடையனவாய் நிலவுகின்றன; சிவனும், விஷ்ணுவும் மைத்துனமுறை யுடையவர் என்ற கொள்கையும் பரவலாயிற்று. புராணங்களாலும், நாடகங்களாலும் இது வலியுறுத்தப்படலாயிற்று. இறைவன் ஒருவனே உருவத் திருமேனி இரண்டு கொண்டு இவ்வாறு திருவிளையாடல் செய்தான் போலும்.

12. இனி, 'சுத்தாத்துவிதம்' பேசும் சைவசித்தாந்திகள், "உலகு, உயிர் எல்லாவற்றையும் இயக்கிக் கொண்டிருக்கும் சக்தி, அருவம், அருவுருவம், உருவம் என்னும் முத்திறப்பட்ட திருமேனிகள் கொண்டுள்ளது" என்றும், "அவற்றுள், உருவத் திருமேனி கொண்டு 'திருமால்' என்னும் பெயர்பூண்டு, படைத்தல், காத்தல், அழித்தல்களுள் காத்தலையே முதன்மை பெறவும், ஏனையிரண்டையும் துணைமை பெறவும் நடத்தி வருகின்றது" எனவும் கூறுநிற்பர். சிவத்தின் வலப் பாகத்தில் திருமாலும் இடப்பாகத்திற் பிரமனும் உள்ளனரென்னும், இதனுலும் சைவ சமயிகள் திருமால் வழிபாடு செய்து வருகின்றனர்.

13. இதனுல் தமிழ் ஈழத்திலும் சிவாலயங்களும், வைஷ்ணவ ஆலயங்களும் அமைக்கப்படலாயின. இரண்டு சமயங்களும் பக்தியே (அன்பே) கடவுளை அடைதற்குச் சிறந்த வழி என்னும் கொள்கை உடையன. பக்தியால் அதன் முதிர்வால் இறைவன் திருமேனி கொண்டு, பக்தர்களின் கண்முன் தோன்றுவான் என்பதும் இந்துக்களின் கொள்கையும் நம்பிக்கையுமாகும். கனவிலும், நனவிலும் இறைவன் பக்தர்களுக்குத் தரிசனங் கொடுத்த வரலாறுகளை யாம் அறிவோம்; நம்புகின்றேம். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், பாகவத புராணம், வேதாகமங்கள், தமிழ் வடமொழி இலக்கியங்கள் இவற்றை எடுத்து எமக்கு இயம்பிக் கொண்டிருக்கின்றன.

14. தமிழ் ஈழத்தில் (இள)வல்லி என்னும் பெயருடைய பக்தசிரோன்மணி வாழ்ந்தாள். தமிழ் ஈழத்தின் வடகீழ்க் கடலில் வந்துற்ற மீன் ஒன்று பலவகையாலும் வலையால் அகப்படுத்திஞேராற், கைப்பற்ற இயலாமல் துள்ளிக் குதித்து உயிருடன் திருவிளையாடல் புரிந்ததாகவும், வல்லி என்னும் அப் பெண்மணி தான் முதல்நாட் கண்ட கனவின்படியே அம்மீன் திருவிளையாடல் செய்யும் இடத்திற்குச் சென்று அதை எடுக்க, அந் நங்கையின் திருக்கரத்தில் அது அடங்கியதாகவும், அவள் கொண்டுவரும் வழியில், அது நழுவி விழுந்து திருமாலின் குழந்தை உருவத்தைக் காட்டிச் சக்கர உருவமாய் மறைந்ததாகவும், அதனுல் அவளாலும், அவ்வற்புதத்தைக் கண்ணுற் கண்டவர்களாலும் மறைந்த அவ்விடத்தில் வைஷ்ணவ ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டதாகவும், அதனுல் அவ்விடம் வல்லிபுரம் (புரம் = ஊர், கோவில்) என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டு வருவதாகவும், வல்லி எடுக்க எடுக்க மணலுள் ஆழ்ந்து ஆழ்ந்து இறுதியிற் சக்கர உருவாய் மறைந்ததனுலும், திருமாலுக்கும் திரு

மால் அடியார்க்கும் ஆழ்வார் என்னும் பெயருண்மையாலும், மூன்று காலத்தும் உள்ள நிகழ்ச்சி எதிர்காலத்துக் கூறப்படும் முறை தமிழ்மொழிக் குண்மையாலும், சக்கர ஆழ்வார் என்னும் பெயரால் அத் திருமால் அழைக்கப்பட்டு வருவதாகவும், அவ் வூராரும் அயலூரார் பலரும் கர்ணபரம்பரைச் செய்தி கூறுகின்றனர். இதுபற்றிப் பிற வாறும் வரலாறுகள் கூறுவாரும் உளரேனும், எதற்கும் கர்ணபரம்பரையே அன்றிப் பிற சான்றுகள் இதுவரையிற் கிடைக்கவில்லை. வல்லிபுரப் பொன்னேடு என்னும் பெயருடைய சாதனமும் அதுபற்றிய ஆராய்ச்சிகளும் பொருத்தமற்றன என்றே கொள்ளக்கிடக்கின்றது.

15. யாழ்ப்பாணத்துச் சிங்கையாரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி நடத்திய காலத்தில், அவர்கள், இப்போதிருக்கும் ஆலயத்தானத்திற்கு அணித்தாய் இராசதானியையும் பல கடலரண்களையும், கைத்தொழிற் சாலைகளையும் நிறுவியிருந்து, வல்லியால் அமைக்கப்பட்ட ஆலயத்தைப் புதுக்கி வழிபட்டு வாழ்ந்தார்கள் என்றும் அது பிற்காலத்துக் கடல்கோளாலோ, மணல் கோளாலோ, அன்றிப் பிறிதொரு காரணத்தாலோ மறைவதாயிற்று என்றும், பிற்காலத்தில் புத்தசமயிகள் சிலர் வந்து புத்தசமய தாபனம் செய்வதற்காக அதை உபயோகிக்க முற்பட்டபோது அயல் ஊரவர்கள் ஒருங்கு திரண்டு அவ்வாறு நிகழாது தடுத்து இதைப் புனரமைப்புச் செய்து பேணிப் பரிபாலனம் செய்வாராயினர் எனவும், சிலர் கூறும் கர்ணபரம்பரைச் செய்தியும் பல வகையாலும் பொருத்தமுடைத்தெனவே கொள்ளக் கிடக்கின்றது. எவ்வகையால் நோக்கினும் இஃது ஈழத் தமிழகத்தின் காலத்தில் மிக முற்பட்ட 'விஷ்ணு ஆலயம்' என்பது மறுக்கவொண்ணாத உண்மையேயாகும்.

16. ''புகையிரதம், பஸ், கார், குதிரைவண்டி முதலிய பிரயாண வசதிகள் இல்லாமல் இருந்த காலத்தில், இவ்வாலயத்தின் பாங்கராய் இருந்த பாதை ஒன்றின் வழியாக யாழ்ப்பாண இராச்சியத்திலும், வன்னி இராச்சியத்திலும் வாழ்ந்த தமிழ்மக்கள் போக்கு வரவு செய்தார்கள்'' எனவும், ''புகையிரதம் முதலிய பிரயாண வசதிகள் ஏற்பட்ட பிற்காலத்தில், அப்பாதையின் முக்கியத்துவம் தேய்ந்து குறைந்துவிட்டது'' எனவும், எண்பது ஆண்டுகள் வாழ்ந்து, இற்றைக்கு முப்பது ஆண்டுகட்கு முன் காலஞ்சென்ற முதியார் ஒருவர் கூறிய கூற்றும் ஆராய்ச்சிக்குரியதேயாகும். எவ்வாற்ருல் நோக்கினும், இவ்விஷ்ணு ஆலயமும், திருமாலாகிய வல்லிபுர ஆழ்வார் மகிமையும் இன்னும் நன்கு மேலோங்கிப் பெரும் பிரசித்தி வாய்ந்து நிலைத்து நிற்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்பது துணிபு.

17. இன்று இவ்வாலயத்தை ஒரு சபையார் நிருவாகஞ் செய்கின்றனர். இந்த நிர்வாகசபைக் காலத்தில், சிறந்த முறையிற் பூசை யொழுங்குகளும், திருப்பணி வேலைகளும் மிக முன்னேற்றம் பெற்றுள்ளன. கர்ப்பக்கிருகத்தில், பேரலங்காரங் கொண்டு, காண்பார் கண்களையும் மனத்தையும் கவரும் தன்மையில் ஸ்தூபி ஒன்று, உயரம் பெறப் புதிதாய் இன்று இந்த நிர்வாக சபையாரின் பெருமுயற்சியால் அமைக்கப்பட்டுள்ளது. மிகக் குறுகிய காலத்தில், செயற்கரிய இம்முயற்சியைச் செய்து காண்பாரும் கருதுவாரும் பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றி, இன்று கும்பாபிஷேகத்தை நடத்தும் இந்நிர்வாக சபையாரின் சேவை என்றும் போற்றற்பாலதேயாகும்.

18. வேண்டியதை வேண்டியாங்கு அளித்தருளும் விண்ணவர் பெருமான் வல்லிபுர ஆழ்வான், அன்பர்கள் யாவரையும் தன்பாற் கவர்கின்ருன்; வரவழைக்கின்ருன் ; வரவழைத்து வேண்டிய வரங்களை எல்லாம் வாரி வழங்குகின்ருன்; அவன் அருள்பெற முந்துவோமாக.

※

இரவு நேரத்தில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பலவற்றை நீ காண்கின்ருய். ஆனல் சூரியன் உதிக்கும்பொழுது நீ அவற்றைக் காண்பதில்லை. ஆகையினலே பகற் பொழுதிலே வானத்திலே நட்சத்திரங்களே இல்லையென நீ சொல்லிடலாகுமா? மானுடா, உன்னிடம் அஞ்ஞானம் இருக்கின்ற நாளிலே நீ இறைவனைக் காணமுடியாத காரணத்தால் இறைவனே இல்லை என்று பகராதே.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

*　　*　　*　　*

## ஞானம் என்ருல் என்ன?

எது எது அநித்தியமோ அதையெல்லாம் விசாரணையால் ஒவ்வொன்ருக நீக்கியபின் மிஞ்சி நிற்பது எதுவோ, அதுவேதான் ஞானம்; அதுதான் மெய்ப்பொருள்; கடவுள், தெய்வம், தான், நீ எல்லாம் அதுதான். மலையிலே போனுற்ருன் ஞானம் வரும், குகையிலே போனுற்ருன் ஞானம் வரும் என்று அங்குமிங்குமலைவது பைத்தியந்தான்.

— "மெய்ப்பொருள் காண்பதறிவு"

*　　*　　*　　*

கடவுள் எங்கே உள்ளான்? பொதுவாக எங்கும்; சிறப்பாக அவரவர் உள்ள மலரிலும் எழுந்தருளியுள்ளான். உடல் கோயில்; உள்ளம் சந்நிதி; இறைவன் மூர்த்தி; எல்லார் உள்ளத்தும் இறைவன் உள்ளான்.

— சுத்தானந்தர்

# பாரதி கண்ட கண்ணன்

திரு. சி. தில்லைநாதன், அவர்கள் M. A., M. Litt.,

விரிவுரையாளர், பேராதனை வளாகம்

கண்ணன் என்ற திருமாலின் நாமம், இன்று இல்லங்கள் தோறும் வழங்கும் ஒன்றாக விளங்குவதை அவதானிக்கலாம். வைணவர்கள் அல்லாதோரையும் வசீகரிக்கும் விதத்திற் கண்ணன் தமிழ் மக்களிடை மிகப் பிரசித்தி பெற்றிருக்கிறான். வேதகாலக் கடவுளான கண்ணன் கிறித்து பிறப்பதற்கு முன்பே தமிழ்நாட்டிற் பரவப்பட்டவனாதல் வேண்டும். அகநானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி, பெரும்பாணாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, பரிபாடல், கலித்தொகை, தொல்காப்பியம் முதலான முற்கால நூல்களிற் கண்ணன் குறிப்பிடப்படுகிறான். இடைக்காலத்திலும் கண்ணன் கதைகள் பெருவழக்காய் இருந்தமைக்குச் சிலப்பதிகாரம் சிறந்த சான்றாகும். பக்தி இயக்கம் வேகம் பெற்ற காலத்திலே கண்ணனது தோற்றப் பொலிவையும், அவதாரங்களையும், லீலைகளையும், சாதனைகளையும் வைணவ ஆழ்வார்கள் வெகு விஸ்தாரமாகப் படிப்போர் உள்ளங்களைப் பிணிக்கும் வகையிற் பாடியிருக்கின்றனர்.

அளித்தற் கடவுளாகக் கண்ணன் கருதப்பட்டமையாலும், அவனது லீலைகள் சாதாரண மக்களோடு சம்பந்தப்பட்டு அவர்களைக் கவரும் தன்மையனவாக அமைந்தமையினாலும் போலும் அவன் ஏனைய கடவுளரைக் காட்டிலும் வெகுஜனப் பிரசித்தி அதிகம் பெற்றவனானான். இந்தியாவின் பல பிரதேசங்களையும் சேர்ந்தவர்கள் அவனுக்குப் பெண்களைத் தந்ததாய்க் கதைகள் உண்டு. நப்பின்னை தமிழ்நாட்டவராலே தரப்பட்டவள் என்பர்.

இந்நூற்றாண்டின் தோற்றுவாயில் இந்திய விடுதலை இயக்கத்துடன் இரண்டறக் கலந்து நின்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியும் கண்ணனைப் பலவாறாகப் பாடியிருக்கின்றான், அவனது கண்ணன் பாட்டுக்கு எழுதிய முன்னுரையிற் பாரதியின் நெருங்கிய நண்பரும், புகழ் பூத்த இலக்கிய விமர்சகரும், அறிஞருமாகிய வ. வே. சு. ஐயர் மேல்வருமாறு உரைப்பர்:

"பாரத நாட்டின் குலதெய்வமாகிவிட்ட கண்ணனுக்குப் பாமாலை சூட்டாத கவிகள் அருமை. தன்னை நெடுநாட்களாக மறந்திருந்த பாரதநாடு திடீரென விழித்துக் கொண்டதும், அதன் எதிரே முதலில் தோன்றிய ஒளி, கீதா சாஸ்திரத்தைக் கூறிப் பார்த்தனுடைய ரதத்தை வெற்றிபெற ஓட்டிய கண்ணபிரானுடைய உருவமே. அந்த உருவமானது நமது கவியின் இருதயத்திலும் எழுந்து அவருடைய கவிதைக்கு ஒரு சோபையைக் கொடுத்தது."

பாரதியைக் கண்ணன் ஆட்கொண்டு அவனது கவிதைக்குச் சோபை அளித்த சிறப்பைப் பற்றியோ, அல்லது பாரதி கண்ணன்மேற் கொண்ட ஈடுபாடு எத்தகையது என்பதைப் பற்றியோ, அல்லது பழைய பௌராணிக மரபொடு சார்ந்து கண்ணனது சிறப்புகளையும் சாதனைகளையும் முன்னைப்பல புலவர்களைப் போலப் பாரதி எவ்வாறு சித்திரித்தான் என்பதைப் பற்றியோ, அல்லது பாரதியின் கண்ணன் பாட்டில் மிகுந்து காணப்படும் கவிதா நயங்கள் குறித்தோ ஆராய எத்தனிப்பதல்ல இக் கட்டுரை.

தன் சிறப்புக் குலைவதைச் சகிக்க முடியாது, விழித்துக்கொண்டு, எதிர்கால வளர்ச்சியை அவாவி நின்ற ஒரு சமுதாயத்தில், அதன் முயற்சிகளோடு தன்னை இறுகப் பிணித்துக்கொண்டு, 'பொய்க்கும் கலியை யான் கொன்றே பூலோகத்தார் கண்முன்னே மெய்க்கும் கிருதயுகத்தினையே கொணர்வேன் தெய்வ விதி இஃதே' என்று சங்கற்பம் பூண்ட பாரதியின் எதிரிற் கண்ணன் எவ்வாறு தோன்றினான் என்பதைத் தொட்டுக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பாரதி கண்ணனைத் தாயாகவும் தந்தையாகவும் அரசனாகவும் குருவாகவும் ஆண்டானாகவும் குலதெய்வமாகவும் மட்டுமன்றித் தோழனாகவும் சீடனாகவும் சேவகனாகவும் குழந்தையாகவும் பல உன்னத பாவங்களில் வைத்துப் பாடியுள்ளான். அவனுக்கு முன்னரும் பலர் கண்ணனைப் பாடியிருக்கப் பாரதியும் பாடினான் என்றால் அதற்குக் காரணம், தன் காலமக்களுக்கு அர்த்தமும் பயனும் அளிக்கவல்ல கருத்துக்களையும் உணர்வுகளையும் கண்ணன் ஊடாகப் பரப்பலாமென்றும் வளர்க்கலாமென்றும் பாரதி கருதியமையேயாதல் வேண்டும்.

ஆணவத்தையும் கர்வத்தையும் பொய்மையையும் உடைத்துத் தொலைப்பவனாகவும், உழைக்கும் வழியும் பிழைக்கும்வழியும், வினையாளும்வழியும், கலக்கமகற்றும் வழியும் காட்டுபவனாகவும், உலகில் வேண்டிய தொழிலெல்லாம் ஆசையும் தாபமும் அகற்றிப் புரியச் சொல்பவனாகவும் கண்ணன் பாரதிக்குத் தோன்றினான்.

'சோதி அறிவில் விளங்கவும் — உயர்
சூழ்ச்சி மதியில் விளங்கவும் — அற
நீதி முறைவழு வாமலே — எந்த
நேரமும் பூமித் தொழில் செய்ய'

வேண்டுமெனப் பாரதி கண்ட கண்ணன் செப்புகின்றான் என்றால், அவ்வாறு தன்மக்கள் வாழவேண்டுமென்ற வேணவா பாரதிக்கு இருந்ததென்பதுவே அதன் அர்த்தமாகும்.

இந்தப் பூமியில் வாழும் தன் சோதரர்களுக்குப் பாடப்பட்டவையே தன் கவிதைகள் என்பதைப் பாரதி மறந்துவிடாத காரணத்தினாலேதான்,

"பூமிக் கெனைய னுப்பினான்; — அந்தப்
புதுமண் டலத்திலென் தம்பிக ளுண்டு"

என்று கண்ணனைத் தந்தையாகப் பாவனை செய்துகொண்டு பாடுகையிற் குறிப்பிடுகின்றான்.

தான் பிறந்த சமூகம் பலவீனங்கள் யாவும் ஒழிந்து, பலங்கள் யாவும் மிகுந்து விளங்கவேண்டுமென்ற வேட்கையே பாரதியின் உந்துசக்தி. அவ்வேட்கையால் வீறுபெற்ற முயற்சிகளுக்குக் கைகொடுக்கத் தக்கவனாகக் கண்ணனும் பாரதிக்குப் பட்டிருக்க வேண்டும். பிரிவினைகள் மக்களிடை மலிந்து கிடப்பதைக் கண்டு வெகுண்டவன் பாரதி. சமயத்தின் பேரால் எழுந்த சச்சரவுகளைக் கண்டித்து, 'தெய்வம் பலப்பல சொல்லிப் பகைத் தீயை வளர்ப்பவரை மூடரெனக் கடிந்த பாரதி, கண்ணனைப் பாடுமிடத்தும்,

"மூவகைப் பெயர் புனைந்தே — அவன்
முகமறி யாதவர் சண்டைகள் செய்வார்"

என்று கிண்டலாகக் கூறிவைக்கிறான்.

தமிழ்ச் சமுதாயத்தின் சாபக்கேடெனப் பலராற் கருதப்படும் சாதிப் பிரிவினையானது, அச் சமுதாயம் ஒற்றுமையாக இயக்கம் பெறவேண்டிய காலங்களிற் பெரும் முட்டுக்கட்டையாகக் கிடந்ததை முற்காலத்திலும் பலர் உணர்ந்திருந்ததாகவே தெரிகிறது. பௌத்த சமண மதங்களின் செல்வாக்குத் தமிழரிடை மிகுவதைக் காணச் சகியாது மூண்டெழுந்த பக்தி இயக்கத்துக்குக் கூட இந்தச் சாதிப்பிரிவினை முதலிற் சமாளிக்கப்பட வேண்டிய ஒன்றாயிற்று. எனவேதான்,

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பர் ஆகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே."

என்று திருநாவுக்கரசரும்,

"பழுதிலா வொழுக்க லாற்றுப் பலசதுப் பேதி மார்கள்
இழிகுலத் தவர்க ளேனு மெம்மடி யார்க ளாகில்
தொழுமினீர் கொடுமின் கொள்மின்."

என்று தொண்டரடிப்பொடி யாழ்வாரும் பாடிச்சென்றனர். ஆயினும், அவ்வாறு பாடி ஓராயிரத்தோடு ஓரிரு நூற்றாண்டுகளும் சென்று சென்று முடிந்தபின், பாரதி எழுந்து தேசிய ஒற்றுமைக்குக் குரலெடுத்த வேளையிலும் அதற்குத் தடங்கலாய்க் கிடந்தது சாதிப் பிரிவினையே. அதனைப் பலவாறு சாடிய பாரதி, கண்ணனைப் பாடுமிடத்தும்,

"நாலு குலங்கள் அமைத்தான்; — அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்;
சீலம் அறிவு கருமம் — இவை
சிறந்தவர் குலத்தினிற் சிறந்தவராம்;
மேலவர் கீழவ ரென்றே — வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம் — இன்று
பொசுக்கிவிட் டாலெவர்க்கும் நன்மையுண்டென்பான்."

என்று பாடுகின்றான். முன்னிருவர் கூற்றுக்களோடு, மனிதருள் ஏற்றத்தாழ்வு கற்பிப்பவற்றைப் போலிச் சுவடிகள் என்றும் அவற்றைப் பொசுக்கிவிடுமாறும் பகரும் பாரதி கூற்றினை ஒப்பிட்டு நோக்கும்போது, பாரதியின் புரட்சிகர ஆவேசம் துலக்கம் பெறுவதை அவதானித்தல் இயலும். அத்தகைய வீறும், இறுமாந்த துணிவும் பாரதி போன்ற ஓர் ஆளுமை சிறந்த கவிஞனுக்கு வாய்க்க வல்லவையே ஆயினும், அவனது குரல் புதுயுக விடிவை நாடிநிற்கும் ஒரு காலத்தின் குரலுமாகும் என்பதை மறந்துவிடல் சாலாது. 'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்' என்று திருநாவுக்கரசரும், 'சாத்திரச் சந்தடிகளில்' என்று இராமலிங்கரும் கூறிச் சென்றனராயினும், பொருந்தாத மூட நம்பிக்கைகளுக்குக் காலாகும் சாத்திரங்களைப் பொசுக்கிவிடுமாறு பாரதி எழுப்பும் கண்ணனின் குரல் புதியதே. அவன் குரல் இக்கட்டான ஒரு நிலையில், அல்லது ஓர் இயக்கத்தின் தேவைக்கு வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு வருமாறு அழைக்கும் கூக்குரலன்று; மனிதருள் ஏற்றத் தாழ்வை வீராவேசத்துடன் எதிர்க்கும் ஒரு மனிதாபிமானியின் குரலாகும்.

இருபதாம் நூற்றாண்டிற் பாரதி கண்ட கண்ணனுக்குப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் சம்மதமில்லை. அவன்,

'ஏழைகளைத் தோழமை கொள்வான்; — செல்வம்
ஏறியார் தமைக்கண்டு சீறிவிழுவான்.'

சமுதாயத்தின் ஒரு பாதியாகிய பெண்கள் அடிமைப்பட்டுக் கிடக்கையில், மறுபாதி விடுதலையடைய முடியுமா என்ற வினாவினைத் தன்னிடம் எழுப்பிய நிவேதிதா தேவியைத் தன் குருமணியாகவும் தாயாகவும் வரித்துக் கொண்ட, பாரதி பெண்ணுரிமைக்காக முழுமூச்சுடன் பாடியவனாவான். அவன் படைத்த கண்ணம்மா பல விடத்துப் புதுமைப் பெண்ணாகவே தோன்றுகின்றாள்,

"ஆற்றங் கரையதனில் முன்ன மொருநாள் — எனை
அழைத்துத் தனியிடத்தில் பேசிய தெல்லாம்
தூற்றி நகர்முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்.

"சோர மிழைத்திடையர் பெண்களுடனே — அவன்
சூழ்ச்சித் திறமைபல காட்டுவ தெல்லாம்
வீர மறக்குலத்து மாத ரிடத்தே
வேண்டிய தில்லையென்று சொல்லி விடடீ!"

என்பது அச்சமும் நாணமும் நாய்கட்கே எனக் கருதும் வீரமறக் குலத்துப் புதுமைப்பெண் ஒருத்தியின் குரலாகவே ஒலிக்கிறது. மேல்வரும் கூற்றுக்கள் பெண்ணுரிமைப் போராட்டத்தின்பாற் பட்டவை என்பது சொல்லாமலே போதரும்:

"மூத்தவர் சம்மதியில் — வதுவை
முறைகள் பின்பு செய்வோம்",

"தில்லித் துருக்கர் செய்த வழக்கமடீ! — பெண்கள்
திரையிட்டு முகமலர் மறைத்து வைத்தல்."

"ஓரிரு முறைகண்டு பழகியபின் — வெறும்
ஒப்புக்குக் காட்டுவதிங் காண மென்னடீ?"

பாரதி தனது கண்ணன் பாட்டில், தான் வாழ்ந்த சமூகத்தின் குறைபாடுகளைக் காட்டுவதோடு மட்டும் அமைந்துவிடாது, அக்குறைபாடுகளை அகற்றும் மார்க்கங்களையும் காட்டுவது பலவிடத்தும் புலனாகும். இறைவன் பெருமைகளையும் தோற்றப் பொலிவினையுமே விஸ்தாரமாகப் பாடிய பழைய மரபினின்றும் மாறுபட்டு, இறைவனை எளியவனாக மட்டுமன்றி சமுதாயப் பிரக்ஞை மிகுந்தவனாகவும் ஆக்கி, அவன்மூலம் சில புதிய முடிவுகளைக் காட்ட முனைந்தவன் பாரதி; அம் முனைப்பினிற் சமயப்பகை, சாதிபேதம், பெண்ணடிமை, அர்த்தமற்ற மூட வழக்கங்கள் போன்றவற்றிலிருந்து விடுபட்ட புதிய பாதை யொன்றினைப் பாரதி சுட்டி நிற்கின்றான். தொகுத்து நோக்குங்கால், பாரதி கண்ட 'பள்ளத்திலே நெடுநாளழுகுங் கெட்ட பாசியை யெற்றி விட' வந்த கண்ணன், பழைய கோலத்திலன்றிப் புதுப் பொலிவுடன் எமக்கு முக்கியமான பல செய்திகளை வெளியிடுபவனாகவும், சமகாலத்தின் தலையான பணிகளுக்கும் கைகொடுப்பவனாகவும் விளங்குவது புலனாகும்.

"கண்ண னெம்பெரு மானருள் வாழ்கவே!
கலியழிந்து புவித்தலம் வாழ்கவே!"

# வல்லிபுர அந்தாதிப் பதிகம்

பண்டிதர் பொன். சின்னத்துரை அவர்கள்

மாதவா! வல்லிபுர மாயவா! மாசற்ற
மனந்தனில் மருவு மரசே!
மாதவம் செய்திலேன் மனிதரில் கடையனும்
மயங்கிடச் செய்தல் முறையோ?
தீதகல வுன்னடிகள் சிந்திக்க வந்திக்கச்
சிறியனேன் வந்து சேர்ந்தேன்;
திருவரு ளருந்திடும் தாகமிக வந்துளேன்
தெய்வமே! சிறிது பாரும்;
பாதகம் வெய்யவினை செய்தோரும் பயபக்தி
படிந்தவுள் ளத்த ராகிப்
பலமுறை பணிந்தெழுந் துள்ளமெழு காயுருகிப்
பாடியே வலம்வ ருகிறார்.
காதலால் "ஓம்நமோ நாராய ணயநம"
கருத்தொடே செபித்து நிற்பார்;
கண்ணனே! மணிவண்ண! கருதிடும் பொழுதெலாம்
காப்பதுன் கடமை; அருளே! 1

அருளினைப் பெற்றிட, அன்புளம் உருகிட,
ஆக்கையும் கரைந்து நிற்க,
ஆனந்த மானகண் ணீர்தாரை தாரையாய்
அடியிணை நனைக்க நின்றார்;
இருகரம் தலையில் குவிந்தபடி யுன்னடிகள்
இடைவிடா தெண்ணி யெண்ணி
இன்றுபோல் என்றுமாய் எங்குமே நின்றபடி
ஏத்தவுன் னருள்பெ றுவனோ?
மருவுமுன் திருநாமம் மறவாத நெஞ்சமும்
மங்காத பக்தி யன்பும்
மாசின்றி யிரவுபகல் கனநனவு நிலையெலாம்
மன்னியே பொலிய வருள்வாய்;
தருவையோ? வல்லிபுரத் தையனே! துய்யனே!
தமியனேன் வேண்டி நின்றேன்;
தாழ்விலா வாழ்க்கையும் தளராத செல்வமும்
தவநிலையும் வேண்டும்; அரியே. 2

அரியே யெனப்பாடி ஆடியும், போற்றியும்,
ஆனதவ பூசை செய்தும்,
ஆற்றிடும் புண்ணியம் தவங்கள்பல பண்ணியும்,
அகமதில் துதித்து நிற்பார்;
உரிமைகொள் பல்லாயி ரத்துருவு நீகொள்ள
உண்மை யுணர்ந்த ஞானி
ஊரவர்கள் புகழ்கின்ற சாதேவன் பக்தியால்
உனதுருவம் கட்ட நின்றாய்;

அரிதரிது மானிடப் பிறவியில் உன்னடியன்
அன்பினுல் உள்ள மதனில்
ஆராத பாசத்தில் கட்டிவைத் தேபூசை
ஆற்றியே என்று மகிழ்வேன் ?
வரிவரா லுகள்பொய்கை வல்லிபுர நாதனே !
வழியின்று தருதல் வேண்டும் ;
வானவர்க் கமுதத்தை வாரிக் கொடுத்தவா !
வாழ்வுறத் தருக ; வரமே. 3

வரந்தருக மாயவா மாதவா வெனவன்பர்
வந்துதொழு துய்ய நிற்பார் ;
வாய்த்தபடி யன்னவர்க் குள்ளம் நினைத்தவை
வழங்கியே காவல் செய்வாய் ;
அரகரா சக்கரப் படையேந்து கேசவா !
ஆனபிணி வறுமை நோய்கள்
ஆபத்து துன்பம் பயந்தளர்வு நீங்கிட
அளித்துயர்வு தருதல் வேண்டும் ;
உரகமதில் ஆடியும் அறிதுயில் புரிந்தும்நீ
உள்ளமெல் லாமறி குவாய் ;
ஊதா தொலித்திடும் சங்குசக் கரகரா !
உன்னடி மைநா னல்லனே ?
விரவியே தொழுகையொலி மந்திரம் பாடலொலி
வீதியெங் கும்மு ழங்கும்
வீரனே ! வல்லிபுர நாதனே ! யுன்னடிமை
வேண்டுவன தருதல் கடனே. 4

கடனுமக் கென்னையாண் டடிமையாய் வைப்பதும்
காப்பதும் வளர்வ தெல்லாம்
கடனெனக் குன்னடிகள் மறவாது தொழுவதும்
கண்டிடும் தியான மெல்லாம் ;
படவரவு சூட்டிடும் பரைக்கண்ண னனநீ,
பராபரன் சக்தி யாகிப்
பாங்கா யவன்வலப் பாகமாய்க் கொண்டனை !
பராவுறும் பெருமை பூண்டாய் ;
மடமைகொள் தாருக வனத்துமுனி கூட்டத்தின்
மாயையைக் களைதல் வேண்டி
மாயங்கொள் மோகினிப் பெண்ணுருக் கொண்டுநீ
மருவியரி கரற்ப டைத்தாய் ;
திடமனப் பக்தியாய் வல்லிபுரம் போற்றுவார்
தீராத வினை தீருமே ;
தீதகற்றிப் புவியை வாழவைத் தாண்டவா !
தீயனையு மாளல் முறையே. 5

முறையெதென் றறியாது மூடனாய் வாழ்கிறேன்
முத்திநெறி தருதல் என்றோ ?
முன்செய்த பாவவினை மூட்டையை யழிக்கநின்
முன்னிலையில் தொழுது நின்றேன் ;
இறைவனீ அடியனுய் என்னையே கொண்டனை ;
எனதுடலம் ஆவி பொருள்கள்
யாவுமே நின்னுடைமை ; இந்நிலைகை கூடவருள் ;
ஈறிலா இன்ப மடைவேன் ;

மறையுமாய் மறைகளின் பொருளுமாய் மலர்ந்தவா !
மாயவா ! கோவிந்தனே !
மனமொழிமெய் மூன்றிலும் மன்னிடும் வணக்கமொடு
மருவுபுண் ணியம்த வந்தா ;
குறைகொண்ட வாழ்விலே நிறைமல்க வேண்டினேன் ;
கும்பிட் டிரந்து நின்றேன் :
கூபமலி வல்லிபுரம் கோவிலாக் கொண்டவா
கூறடைக் கலமுனக் கே. 6

உனக்கேது கூறுவேன் ; எல்லா மறிந்தனை
உள்ளம் கவர்ந்த கண்ணு !
ஊனெடுத் துழல்கிறேன் ; உயர்ந்தவழி காண்கிலேன் ;
உன்னருளின் ஒளியை யருள்வாய் ;
மனக்குறைகள் பலவுண்டு ; கூறவந் தேன் : உமது
மாண்பு மிகுசந்நி திக்கே ;
மாயவா ! மாதவா ! வாமனு ! கேசவா !
மனத்தினில் கொள்ளு மையா ;
எனக்குமது திருவுருவம் காணுதவம் இல்லையோ ?
ஏற்றவொரு கனவி லேனும்
என்னிதயம் மகிழ்கொள்ள வந்தடிகள் காட்டுவாய் ;
எதுவுநீ செய்த லரிதோ ?
வனத்தயல் மணற்குன்று வாய்ந்தழகு காட்டிடும்
வயல்களும் தடமும் மிளிர
வானமும் கடலுநின் நீலநிற மூட்டிடும்
வல்லி புரம்வாழ் தெய்வமே. 7

தெய்வநீ ; ஐயனீ ; செகமெலாம் காத்திடும்
தேவனீ ; போற்றி ! போற்றி !
செய்கின்ற கருமங்கள் சீரும் சிறப்புமாய்ச்
சேர்ந்தே யுயர்ந்து பொலிய
உய்யவழி காட்டுவாய் ; என்னுடைமை யாவுமே
உனக்க பயமென் கடவுளே !
உலகெலாம் பணிந்திடும் செங்கமல பாதனே !
உன்னருளை யென்று பெறுவேன் ;
வெய்யவினை வாட்டுதே ; வேதனைப் படுகிறேன் ;
விரும்பிய வைநீ யருளுவாய் ;
விண்ணவர்கள் நடுநிசியில் வந்துசக் கரதேவ !
வேண்டியே ! தொழுகை புரிவார் ;
வெய்யவன் கதிர்க்கரம் போற்றுதுன் னுலயம்
விருத்திகொள் வல்லி புரனே!
வீரமுறு சிங்கைநகர் தொன்னுள் விளங்கிடும்
வேந்தநலம் அருள்க ; வரியே ! 8

அரியவெல் லாமெனக் கெளியவாய் ஆக்குவாய்;
அலைவிலா துறச் செய்குவாய்;
அகத்தினில் நினைந்தவை அடுத்துடன் நிறைவுசெய்
யாற்றலும் வழங்கல் வேண்டும்;
பெரியநல் லவல்லிமடி மற்சமாய் மகவுமாய்
பெருகுசா பந்தவிர்த் தாய்;
பேதையேன் இடர்களைந் துயர்வுறும் ஒருவரம்
பாலித்தல் நிற்கருமை யோ?
உரியவன் பால்தொழுது வரமெலாம் அடியர்பெற
உலுத்தனுய் நானலை வதோ?
ஓலமிட் டலறியும் கதறியும் உருகியும்
உன்னருள் அடைந்தி லேனே
உரியவென் னுயிரினுக் குயிராகி நின்றவா!
உயர்ந்தவழி காட்டி யாள்வாய்;
உயர்வல்லி புரத்தேவ! யமன்தூதர் வருமுன்னர்
உன்னடிமை யாக்கு மரியே.

அரிநமோ நாராய ணயநம! மாயநம!
அனந்தசய னயநம ஓம்.
அச்சுதா! கேசவா! வாமனு! போற்றிஓம்
அடைக்கலம் அடைக் கலம்காண்;
கரியமா லேகண்ண! கோவிந்த! காகுத்த!
கருதுபஞ் சாயு தத்தாய்;
கருதிடும் நின்னடியர்க் கொருகுறையு மில்லையே;
கருணைமழை பொழிதல் வேண்டும்;
உரிமையோ டுன்னடியை நம்பினேன்; போற்றினேன்
உயர்முத்தி யருளு மையா;
ஊனெடுத் தைம்புலனில் உழலாது பக்திமுறை
உறுவாழ்வு தருதல் வேண்டும்;
கரியகட லலையோசை சங்கோசை மணியோசை
கானமார் பறவை யோசை
காலமெல் லாம்நிறையும் பருதிநகர் வல்லிபுரக்
கடவுளே போற்றி போற்றி.

⁂

நல்லாரைக் காப்பதற்கும் கெட்டவரைக் கரந்தொடுக்குவதற்கும், நாமத்தை நிலைநாட்டுதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன். — பகவத்கீதை

* * *

வேகவைத்த நெல்லைப் பூமியில் விதைத்தால், அது மறுபடியும் பயிராக முளைக்காது. அதுபோல, சித்தனை பிறகு, ஒருவன் இறப்பானுனால், அவன் மறு ஜன்மம் அடைவதில்லை. — ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம்

* * *

விளையாட்டுப் பழமும், விளையாட்டு யானையும் வாஸ்தவமான பழத்தையும், யானையையும் நினைப்பூட்டுவதைப் போல, ஆராதிக்கப்படும் விக்கிரகங்கள் நித்தியனும் அருபியுமான ஈசுவரனை நினைப்பூட்டுகின்றன. — ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம்

உ

# திருமால் வழிபாடும் வல்லிபுரமாயன் கோயிலும்

பண்டிதர் சங்கர வைத்தியலிங்கன் அவர்கள்

பழந்தமிழ் மக்கள் வழிபட்ட கடவுளர்களில் திருமாலும் ஒருவர் என்பது மிகப் பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்துப் பொருளதிகாரத்தில்

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."

என்னும் சூத்திரத்தாற் பெறப்படுகின்றது. தமிழ் இலக்கணக்கடலை ஆரப்பருகி, அதனைத் தன்காலத்தில் இலக்கண அறிவிற்குறைந்த மக்களுக்கு இலக்கணச் சுருக்கம் செய்யவந்த தெய்வத் தொல்காப்பியர், நிலத்தையும் நிலத்துறை மக்கள் ஒழுக்கங்களையும் வகுத்துக் கூறவந்து, திருமால் வழிபாடு காட்டகத்தே நிகழ்ந்ததாகக் கூறிப்போந்தார். காடுகளும் மெல்ல நாடுகளாயின, கடைச்சங்க நூல்களாகும் அகநானூறு, புறநானூறு, பதிற்றுப் பத்திலும், இசைதழுவிய கலித்தொகை, பரிபாடலிலும் பலப்பல செய்யுள்கள் திருமால் வழிபாட்டைக் குறிப்பன. பரிபாடலில் திருமாலுக்குரிய பாடல்கள் படிக்குந்தோறும் இன்பச் சுவையும் பத்திச்சுவையும் சொட்டுவன. இன்னும் சிலப்பதிகாரத்தில் நாடுகாண்காதை, காடுகாண்காதைகளில் பூலோக வைகுந்தம் என்று புகழப்படும் திருவரங்கமும் திருப்பதியும் வழிபடப்படுகின்றன. ஆய்ச்சியர் குரவையிலுள்ள வழிபாட்டுப் பாக்களும் படிக்குந்தோறும் பத்திச்சுவையூட்டிப் பரவசப்படுத்துவன.

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன், பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய்! மாயமோ மருட்கைத்தே."

"பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையும் திருவாயும் செய்ய
கரியவனைச் காணாத கண்ணென்ன கண்ணே;
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே."

"மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே;
நாராய ணாவென்னா நாவென்ன நாவே."

பிற்காலத்துப் பன்னிரு ஆழ்வார் நாலாயிரப் பிரபந்தங்கள் திருமால் வழிபாட்டை உச்சப் படியிற் செலுத்துவன.

வல்லிபுர மாயன் கோயில் பண்டைப்பெருமையுள்ளது; ஈழத்திலுள்ள திருமால் தலங்களில் மிகப்பழமையானது; காடுறை உலகத்தன்றி, பெருமணல் உலகத்தில் இயற்கையழகு வழியுமிடத்தில், மணற்குன்றுகளிடையே, அமைந்து மாட்சியுடன் விளங்குகிறது; ஈழத்தில் உள்ள திருமால் கோயில் எதனிலும் சிறப்புடையதாக எல்லாராலும் பத்தி செய்யப்பட்டு நித்திய பூசைகளுக்கு அடியார் பெருந்தொகையினரால் வழிபடப்பட்டுவருவது; திருவிழாக் காலங்களில் எல்லா ஊர்களிலும் உள்ள இந்துக்களால் தவறுத பத்தியோடு ஒழுங்காகத் தரிசிக்கப்படுவது; கண்ணனுடைய திருவிளையாடல்கள் அழகாக நடித்துக்காட்டப்படுவது. இத்திருவிழாக்களில் அனுமார் தீர்த்தம் என்னும் கடலாடு திருவிழா, உவா நாளில் கொந்தளிக்குங் குணகடலில் தீர்த்தம் ஆடுந் திருவிழா பாடலால் ஏத்தும் தகையது. இங்கு முறையாக வழிபடும் அடியார்கள் திருமகள் கலைமகள் கடைக்கண்ணோக்கம் பெற்று நீண்டநாள் இன்பவாழ்வு எய்துவது கண்கூடு. இத்தன்மையாக மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கியைந்து அமைந்து விளங்கும் தலங்கள் ஈழத்திற் சிலவே. இத்தலம் இவ்வளவு அண்மையில் அமைந்து எமக்கு வழிபடக் கிடைத்தது நாம் செய்த தவமே.

இத்தலத்தைப் பாடிய பிரபந்தங்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு அச்சிடப்படல்வேண்டும்; இத்தலத்தின் பண்டைய வரலாற்றினை, வரலாற்று ஆராய்ச்சிவல்லார் ஒருவர் எழுதி வெளியிடல் வேண்டும்; அதிலிருந்து புராணம் தோற்றுதல் வேண்டும். இத்தலத்தமரும் மாயனைப் பாடிய பிரபந்தம் ஒன்றினை யாம் படித்து இன்புற்றேம். சொற்சுவை, பொருட்சுவை மலிந்த அப் பதிகத்தை இயற்றியவர், துன்னை, பண்டிதர் தா. முருகேசம்பிள்ளையாகும். இதனையும் அரும்பதவுரையுடன் திருப்பி அச்சிடுதல் வேண்டும்.

# முகுந்தன் நாமம்

இளம்பிறையான்

அறிவினையும் அழகினையும் அணைத்த நாமம்;
அடியினையும் முடியினையும் இணைத்த நாமம்;
நெறியினையும் நினைவினையும் நேர்ந்த நாமம்;
நேத்திரங்கள் போல்கின்ற நித்த நாமம்;
பொறியினையும் போக்கினையும் மாற்று நாமம்;
பொறையினையும் நிறையினையும் ஆக்கு நாமம்;
அறிவினையும் அன்பினையும் அடக்கு நாமம்;
அவனியெலாம் அசைகின்ற முகுந்த நாமம்;

சித்தினையும் அசித்தினையும் சேர்க்கு நாமம்;
சீர்த்தியெலாம் அளிக்கின்ற சிறந்த நாமம்;
முத்தினையும் மணியினையும் நிகர்க்கு நாமம்;
மூவேழு லோகத்தும் ஒலிக்கு நாமம்;
பத்தனையும் பரமனையும் இணைக்கு நாமம்;
பாவேந்தர் படிக்கின்ற பழைய நாமம்;
வித்தினையும் விளைவினையும் விளக்கு நாமம்;
வேதமெல்லாம் விளக்குகின்ற விகிர்தன் நாமம்.

# வேணு கோபாலன்

திரு. வ. குகசர்மா அவர்கள்

திருமால் காத்தல் தொழிலுடையவர். அதற்குப் பொருத்தமாய் அருள்மிகு குணமுடையவர். ''நிலவரை பரந்த இளஞாயிற்றினது ஒளிபோலும் பீதாம்பரத்தையும், மணிமுடியையும், நிறைமதி போலும் அளித்தற்றொழிலையும் கொண்ட நெடுமாலே'' எனத் தமிழ் முதுநூலாகிய பரிபாடல், திருமாலை அழைக்கிறது

திருமால் உலகினை அருளக்கொண்ட வேடங்களும், எடுத்த அவதாரங்களும் பல. அவை ஆழ்வார்களால் விதந்து பாடப்பட்டுள்ளன. ஆழ்வார்கள் திருமாலைக் குழந்தையாக, வேணுகோபாலனாக, தோழனாக, காதலனாக, முத்திதரும் தெய்வமாக விதந்து பாடியுள்ளனர்.

இவற்றுள் ''முனிவர்களுடைய உள்ளத்தாமரையை நெகிழச் செய்யும்'' உன்னத சிறப்புடைய வேணுகான கோபாலனைப்பற்றி, அடியார் கூறும் அரிய கருத்துக்களில் ஒரு சிலவற்றைப் பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கண்ணன் அழகிய திருமுக மண்டலத்தைத் தியானம் செய்து மௌன நிலையில் இருக்கும் போது, கண்ணன் குழலோசை கேட்டு அந்த மனப்பூசை கலையவேண்டும் என அடியார் ஒருவர் விரும்புகிறார்.

''கண்களை மூடிக் கண்ணனை எண்ணி
தண்ணிய நிஷ்டை நான்புரி போதில்
வண்ண இசைக்குழல் வாயில் இசைத்துப்
புண்ணியன் முன்வரப் பூசையும் கெடுமோ''

கண்ணன் முகத்தாமரையிலிருந்து குழலோசையாகிய தேன் பெருகுகின்றது. அந்தத் தேனை விரும்பும் பெண்கள் கண்களாகிய வண்டுகளின் போர்க்களம் போல விளங்குகின்ற கண்ணனின் வதன கமலம்'' எனப் பாடுகின்றார் ஓர் அடியார்.

ஆழ்வார்களுள், பெரியாழ்வார் கண்ணன் குழலூதும் சிறப்பைப் பல திருமொழிகளில் பாடியுள்ளார். ''தேவர்கள் யாகங்கள் முதலியவற்றில் மக்களாற் கொடுக்கப்படும் அவியுணவில் விருப்பமுடையவர்கள்; அவியுணவு தேவர்களுக்கு நாவின் சுவையை நல்குகின்றது; ஆனால், கோவிந்தன் ஆயர்பாடியில் இசைக்கும் குழலோசை கேட்டவுடன் தேவர்கள் தங்கள் நாவின் சுவைக்குரிய அவியையும் மறந்து போகிறார்'' என்கிறார். ''செவியின் வழியே புகும் இனிய வேணுகானம் அவர்களுக்கு நாவின் சுவையையும் அளித்துவிடுகிறது'' என்கிறார்; கண்ணன் குழலோசையின் இனிமைக்கு எவ்வளவு சிறந்த எடுத்துக்காட்டு இது.

''அவியுணா மறந்து வானவரெலாம் ஆயர்பாடி நிறையப் புகுந்தீண்டி
**செவியுள் நாவின் சுவைகொண்டு மகிழ்ந்து** கோவிந்தனைத் தொடர்ந்தென்றும் விடாரே.''

எனப் பெரியாழ்வார் கூறுவது வியக்கத் தகுந்தது. ''கண்ணன் குழலோசை கேட்டு வீணை வல்லவர்களாகிய தும்புருநாரதரும், கின்னரசாதியார்களும் தம் வீணை இசைகளை மறந்து அந்தக் குழலோசையையே கேட்டு நின்றார்கள்'' எனப் பெரியாழ்வார் திருப்பாசுரம் கூறுகிறது. மயிற்பீலியணிந்து, பீதாம்பர ஆடையுடுத்து ஆயர் பெருமானாகும் திருமால் குழலூதினபொழுது, அஃறிணை உயிர்கள்கூட மயங்கி நின்றன. உதாரணம்: மரங்களின் செய்கைகளைப் பெரியாழ்வார் தமது பாசுரத்திற் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்:

"மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்; மலர்கள் விழும்; வளர்கொம்புகள் தாழும்;
இரங்கும்; கூம்பும்; திருமால் நின்றநின்ற பக்கம் நோக்கி அவை செயும் குணமே,"

ஆழ்வார்கள் மாத்திரமல்ல, வேறு அடியார்களும் திருமால் பெருமையையும், அவர் குழலூதும் மகிமையையும் விதந்து பாடியுள்ளார்கள். உதாரணமாக, அருணகிரிநாதரைக் குறிப்பிடலாம். அவர், முருகப்பெருமானின் அடியார். அவர் தாம் முருகப்பெருமானைக் குறித்துப் பாடிய திருப்புகழிலும் "மாலோன் மருகனாக" முருகப்பெருமானைப் பாடி மகிழ்ச்சியடைகிறார். அவர் திருப்புகழில் கண்ணபிரானின் வேணுகானத்தைப்பற்றிப் பாடியுள்ளார். "கண்ணபிரானின் குழலோசையைக் கேட்டவுடன், புலிக்குட்டிகள் பசுவின் மடியில் பால் அருந்துகின்றன; மரங்கள் தளிர்விடுகின்றன; பறவைகள் நிலம் வருகின்றன" இவ்வாறான பல காட்சிகளைக் காட்டுகிறார்,

"அளையி லுறைபுலி பெறுமக வயிறரு
பசுவி னிரைமுலை யமுதுண, நிரைமகள்
வசவ னெடுபுலி முலையுண, மலையுட — னுருகா,நீள்
அடவி தனிலுள வுலவைகள் தளிர்விட,
மருள மதமொடு களிறுகள் பிடியுடன்
அகல, வெளியுயர் பறவைகள் நிலம்வர, — விரல்சேரேழ்
தொளைகள் விடுகழை விரன்முறை தடவிய
இசைகள் பலபல தொனிதரு கருமுகில்
சுருதி யுடையவ னெடியவன் மனமகிழ் — முருகோனே"

என்பது திருப்புகழ்.

"எந்தக் குழல் செல்வனான கோபகுமாரனுடைய சிறந்த உதட்டினருகில் வைக்கப் பெறும் உத்தமப் பதவியை அநுபவிக்கிறதோ, அந்தப் பதவியைப் பெறுவதற்கு நான் புண்ணியம் படைத்தவனாகி ஒரு பிறவியில் அதைப் போல மூங்கில் குழலாக ஆவேனோ, என்று லீலாசுகர் தாம் பாடிய "ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதம்" என்னும் நூலில் வேண்டுதல் செய்வதை நாம் சிந்திப்போமாக.

வாடினேன்; வாடி வருந்தினேன்; மனத்தால்,
பெருந்துயர் இடும்பையிற் புரிந்து
கூடினேன்; கூடி இளையவர் தம்மோ
டவர்தரும் கலவியே கருதி
ஓடினேன்; ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்; நாடி நான்கண்டு கொண்டேன்;
நாராயணா என்னும் நாமம்.

— திருமங்கையாழ்வார்

* * * *

செடியாய வல்வினைகள் தீர்க்கும் நெடுமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாயில்,
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.

— குலசேகராழ்வார்

# மட்டக்களப்புத் தமிழகத்தில் விஷ்ணு வழிபாடு

பேராசிரியர், கலாநிதி, சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள், M. A , Ph. D: (Lond.)

தமிழர் வாழும் பகுதிகளில் விஷ்ணு வழிபாடு இலங்கையிற் சிறப்புற்று விளங்குவது மட்டக்களப்புத் தமிழகத்திலாகும். அங்குள்ள தமிழரிற் பெரும்பான்மையோர் சைவ சமயிகளாயினும், அவர்கள் விஷ்ணுவையும் வழிபட்டு வருகின்றனர். ஆங்காங்கு பல விஷ்ணு கோயில்கள் காணப்படுகின்றன. வந்தாறுமூலை, திமிலதீவு, குருக்கள்மடம், களுதாவளை, கல்லடி, காரைதீவு, பழுகாமம், தம்பிலுவில் போன்ற இடங்களிலுள்ள விஷ்ணு கோயில்களிலே திருமால் வழிபாடு இன்றும் முறைப்படி நடந்து வருகின்றது.

திருமாலுக்குச் சக்தி தங்கையாவள்; இதனால், மட்டக்களப்பிலுள்ள கண்ணகியம்மன் உற்சவங்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து, விஷ்ணு கோயில்களின் உற்சவங்கள் ஆரம்பமாகின்றன. கிருஷ்ணனின் பிறந்த நட்சத்திரம் திருவோணம். "ஒன்பது கோளும் உறவு செய்யும் வேளையிலே, இன்பசுகத் தவசு வென்னும் முகூர்த்தமதில் — சீரான செல்வத் திருவோண நாளையிலே, பேராளன் வந்து பிறந்தான்" எனக் கிருஷ்ணனின் பிறப்பைக் கூறுகின்றது கஞ்சன் அம்மானை.

வைகாசித் திங்களில் வரும் அந்தத் திருவோண நாளிலேயே, பெரும்பாலும் மட்டக்களப்பு மகாவிஷ்ணு கோயில்களில் உற்சவம் தொடங்குகின்றது. விஷ்ணு உற்சவத்தை மட்டக்களப்பிற் 'கிருஷ்ணன் கோயிற் சடங்கு' என்றே கூறுவர். க்ண்ணகையம்மன் உற்சவத்தைக் 'கண்ணகியம்மன் சடங்கு' என்று குறிப்பிடும் வழக்குடன் இஃது ஒத்திருக்கின்றது. 'சடங்கு' என்ற சொல்லிற்குத் திருமணம் என்ற பொருள் உண்டு. விஷ்ணு கோயில் உற்சவத்தின் இறுதி நாளிற் கிருஷ்ணனுக்குத் திருமண வைபவமொன்றும் நிகழ்வதனால், இவ்வுற்சவம் சடங்கு என்ற பெயராற் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். கண்ணகை உற்சவத்திலும் குளிர்த்திக்கு முன்னருள்ள இரவில் நிகழ்வது கலியாணச் சடங்கு எனப்படுகின்றது. விஷ்ணு கோயிலில் நிகழும் இச்சடங்கைக் 'கலியாணப் படிப்பு' என்று கூறுவதுமுண்டு. அன்றிரவு கஞ்சன் அம்மானையிலுள்ள உருப்பிணிக்கும் கிருஷ்ணனுக்கும் திருமணம் நிகழ்ந்த பகுதி படிக்கப்படுவதால், அன்றைய உற்சவம் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

பொதுவாக மட்டக்களப்பிலுள்ள கோயில்களின் உற்சவத் தொடக்கத்தைக் 'கதவு திறத்தல்' என்பர், கண்ணகையம்மன் கோயில்கள் ஆண்டு முழுவதும் பூட்டியே வைக்கப்பட்டிருக்கும். வருடத்தில் நடக்கும் ஒரேயொரு உற்சவத்துக்காகவே, அங்கு வருடத்தில் முதன் முதலாகக் கதவு திறக்கப்படும். அதனாற் போலும் எல்லாக் கோயில்களின் உற்சவத் தொடக்கமும் கதவு திறத்தல் என்ற பெயரால் வழங்கப்படுகின்றது.

மட்டக்களப்பு விஷ்ணு கோயில்களிற் கதவு திறக்கப்பட்ட நாளிலிருந்து உற்சவ இறுதிநாட் கலியாணச் சடங்குவரை, கஞ்சன் அம்மானை ஒவ்வொரு நாளும் தொடர்பாகக் கிரமமாகப் படிக்கப் படுகின்றது. 'கஞ்சன் அம்மானை' ஏட்டுப் பிரதிகளையே கோயில்களிற் பயன்படுத்துவர். உற்சவ காலத்திற் படிக்கப்படும்போது, ஏட்டை வைப்பதற்கென. ஒரு பெட்டி உண்டு. அப்பெட்டி 'ஏட்டுப்பெட்டி' என வழங்கப்படும். கடவுளுக்கு மடை வைப்பதுபோல, ஏட்டுப் பெட்டியிலும் ஒரு மடை வைக்கப்படுவது வழக்கம்.

மட்டக்களப்பிலுள்ள விஷ்ணு கோயில்களிலே தொடக்கக் காலங்களில் வெறுஞ் சடங்குகளே நடந்து வந்தன. அப்போது திருவிழாக்கள் நிகழ்ந்தனவெனத் தெரியவில்லை. அவிபாகங்கள் படைக்கப்பட்ட பூசையோடு, நாள்தோறும் 'கஞ்சன் அம்மானை' படிக்கப்பட்டு வந்தது.

திமிலதீவு விஷ்ணு கோயில் உற்சவம் ஒரு தனியான அமைப்போடு நிகழ்வதை இங்குக் குறிப்பிட வேண்டும். வெறும் சடங்கு என்ற நிலையிலிருந்து வளர்ச்சி பெற்று, திருவிழாவாக மலர்ந்து, ஒரு தனித்தன்மையோடு அது அங்கு நிகழ்த்தப்படுகின்றது. கொடியேற்ற வைபவம் விஷ்ணு கோயில்களில் இல்லை. அங்கு முதல் நாள் நிகழ்ச்சி 'மாங்கனி பறித்தல்' என்ற பெயரோடு நடைபெறுகின்றது. 'கஞ்சன் அம்மானை' அன்று தொடக்கத்திலிருந்து படிக்கப்பட்டு, வேட்டைக்குச் சென்று மாங்கனி பறித்ததோடு நிறுத்தப்பட்டதும் திருவிழா தொடங்கும்; வாகனத்தில் விஷ்ணு எழுந்தருளிக் கோயில் வலம் வருவர். அத்தோடு கஞ்சன் வேட்டைக்குச் சென்று மாங்கனி பறித்தலும், அதன்பின் முனிவன் வந்து சாபமிடுதலும் நடித்துக் காட்டப்படுகின்றன. கனி பறித்தல், பூதகி வதை, மருதுகால்சாய்தல், கன்று கொண்டு கனிக்கெறிதல், கூத்தரைக் கொல்லுதல், கருகசூரன் வதை, கஞ்சசம்மாரம், கலியாணச் சடங்கு என்ற வரிசையில் நிகழ்ச்சிகளை எட்டு நாட்களாகத் திருவிழாவில் நடித்துக் காட்டுவர். கஞ்ச சம்மாரத்திலன்று பெருந் திரளான மக்கள் கூடுவர். கஞ்சன் போர் நிகழ்த்தப்பட்டு, கஞ்சன் வெற்றிகொள்ளப்பட்டு, அவனது ஈமக்கிரியைகள் தத்ரூபமாகக் காட்டப்படும். இறுதி நாளிற் கலியாணச் சடங்கு மிக விமரிசையாக நடைபெறும். வரிசைக்கிரமமான கிரியைகளுடன் ஓர் இளம் வேப்பங் கன்றைக் கலியாணக் காலாக வெட்டி வருவார்கள். அதைக் கலியாணப் பந்தலில் நட்டு, அடுக்கடுக்காகப் பல சேலைகளை அணிவர். பின்னர் ஓமம் வளர்த்துத் தாலி கட்டப்படும். கலியாணச் சடங்குடன் விழா முற்றுப்பெறும். அடுத்த நாள் அமுது கொடுக்கப்படுவதுடன் யாவும் இனிது நிறைவேறுகின்றன.

வந்தாறுமூலையிலுள்ள விஷ்ணு கோயிலில் விஷ்ணு வழிபாட்டின் முழுமையைக் காணலாம். விஷ்ணு அவதாரம் பற்றிய கூத்துக்கள் ஆடுவதும், உற்சவத்தின் போது விஷ்ணு வரலாற்றை வருணிக்குமுகமாக மக்கள் தம்மைக் கண்ணனது கோத்திரமாகப் பாவித்து ஆடல் பாடல்களில் ஈடுபடுவதும் அங்கு நடைபெறுகின்றன. அங்கு ஆனிப் பூரணையில் நடக்கும் தீர்த்தத்தின்போது தயிர்முட்டி விளையாட்டும் நடைபெறும். இதிலே ஆழ்வார் பாடல்கள் பாடப்படுகின்றன. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடிய பாடல்கள் சிறப்பாகப் பாடப்படும் தால், தொட்டில், சப்பாணி யெனப் பாடல்கள் பாடுவர். பாடல் முடியக் கண்ணன் தயிர்முட்டி களவெடுக்கச் செல்வதும், தாயார் அவனைக் கட்டுதலும், இறுதியில் அச்சோப் பாடல் பாடுவதும் இடம்பெறும்.

வந்தாறுமூலையிலுள்ள பலர் தாமோதரன், பரசுராமன், அசோதை, தேவகி போன்ற பெயர்கள் தரித்திருப்பது அங்கு விஷ்ணு வழிபாட்டின் செல்வாக்கைக் காட்டுகின்றது. துன்னாலை வல்லிபுர ஆழ்வார் கோயிலைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ளவர்கள் பெயர்கள் ஆழ்வாப்பிள்ளை, இலட்சுமிப்பிள்ளை, பாலகிருஷ்ணன், நாராயணபிள்ளை, கோவிந்தர், கிருஷ்ணசாமி, இராமநாதன், சீதை, கிருஷ்ணபிள்ளை, தாமோதரம்பிள்ளை, முகுந்தன், முரளி, யசோதை என அமைந்திருப்பதோடு இது ஒப்பிட்டு நோக்கற்பாலது.

மட்டக்களப்பில் நிலவும் விஷ்ணு வழிபாட்டினை நோக்கும்போது, மாடு ஏராளமாக இருந்த பகுதிகளிலேயே தொடக்கக் காலத்தில் இவ்வழிபாடு இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது. மாடுகளைக் காப்பவன் கண்ணன் என்ற அடிப்படையிலே, மாடுகளை ஏராளமாகப் பேணிய பகுதிகளில் இவ் வழிபாட்டினை மேற்கொண்டிருக்கக் கூடும். வந்தாறுமூலையில் இன்றும் காணப்படும் சில வழக்கங்கள் இதற்கு ஆதாரமாக உள்ளன. மாட்டுப் பட்டியிலே முதன் முதற் கன்றினை அடைத்துப் பால் கறக்கும்போது, முதன் முதற் கறக்கும் பாற்பிரயோசனம் அனைத்தையும் கண்ணனாலயத்திற் படைக்க வேண்டும்; அன்றேல், துர்நிமித்தங்கள் நடக்குமெனக் கூறுவர். வந்தாறுமூலையில் அதிகமான மக்களிடம் மாடுகள் உண்டு. அத்துடன் மிகத் தொன்மையான கோயில் அது என்றும் கூறப்படுகின்றது. மாட்டை நம்பி வாழும் மக்கள் தொன்றுதொட்டுப் பழுகாமத்திலும் இருந்து வந்திருக்கிறார்கள். இதனாலேயே அங்கும் ஆவணி அபரபக்கத் திருவோணத்தில் உற்சவம் தொடங்கிப் பதினொரு நாட்களுக்குத் திருவிழா நடைபெறுகின்றது. மட்டக்களப்பிலுள்ள பழமையான பல விஷ்ணு கோயில்கள் குளக்கோட்டன் காலத்திலே அமைக்கப்பட்டனவென மக்கள் கொள்கின்றனர். இதன் உண்மை எவ்வாறாயினும், மட்டக்களப்புத் தமிழகப் பொது மக்களின் சமய வாழ்க்கையில் விஷ்ணு வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பிடத்தைப் பெறுகின்றதென்பது வெளிப்படை.

நீயலையே? சிறுபூவாய்! நெடுமாலார்க் கென்தூதாய்,
நோயெனது நுவலென்ன, நுவலாதே இருந்தொழிந்தாய்;
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான்; இனிஉனது
வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே.

— நம்மாழ்வார்

கஞ்சைக் காய்ந்த கருவில்லி கடைக்கண் என்னும் சிறைக்கோலால்
நெஞ்சூ டுருவ வேவுண்டு, நிலையும் தளர்ந்து நைவேனை,
‘அஞ்சேல்’ என்னான் அவன்ஒருவன்; அவன்மார் பணிந்த வனமாலை
வஞ்சி யாதே தருமாகில் மார்பில் கொணர்ந்து புரட்டீரே.

— ஆண்டாள்

உ

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சரணப் பதிகம்

**கவிஞர் திரு. சி. செல்லமுத்து அவர்கள்,** ஆசிரியர்

தொன்மைசேர் கீர்த்தி யோங்குந் துன்னையம் பதியின் கண்ணே
மன்னிய கருணை கொண்டு வல்லிபுர ஆழ்வா ராகிப்
பொன்மகள் பூமா தேவி புடைசூழ வரங்கள் நல்குஞ்
சென்னியில் துளவஞ் சேருந் திருமாலே சரணம் நீயே. 1

ஆழியுஞ் சங்குந் தாங்கி அரவணைப் பாயல் மேவி
ஆழியில் மீனு மாகி ஆமையாய் வராக மாகி
ஆழியில் அமுதந் தேடி அமரர்கள் உய்யத் தந்து
ஆழியில் உதித்தா ளாகம் அமர்த்தியோய் சரணம் நீயே. 2

மங்கலக் கன்னி மாதம் மதிநிறை நன்னாள் தன்னில்
வங்கஞ்சேர் வளைகு டாவில் வந்துமே தீர்த்த மாட
அங்குறு மடியார் கோடி அளவினு மதிக மாகும்;
இங்கிவர்க் கருளு கின்ற இறைவனே சரணம் நீயே. 3

வெண்ணெயுந் தயிரு முண்டு, வியன்பசி போகா தென்ன
மண்ணையு முண்ட வாயுள் மாபெரு முலகங் காட்டி
மண்ணடி மூன்று கேட்டு மண்ணுடன் வானுங் காணா
மண்ணாள்மா வலியைச் சேர்க்கும் மாதவா சரணம் நீயே. 4

நல்லொரு பாலன் சொல்லும் நாரண நாமங் கேட்டுக்
கல்லினா லாய தூணைக் கையினா லறைந்தான் தன்னை
நல்நர சிங்க மாகி அல்பகல் வெளியுள் ளின்றி
வல்லுகி ரதனால் மாய்த்த மாதவா சரணம் நீயே. 5

கயந்தனில் மலர்ந்த போதைக் கயமது பறித்த போது
பயந்தனில் வாழி டங்கர் பற்றியே காலை யீர்க்க
அயர்ந்தது அரியே யென்று அழைத்தலும் விரைந்து சென்று
உயர்ந்தவை குந்தப் பேறு உதவியோய் சரணம் நீயே. 6


பேசருங் கீதை சொல்லிப் பேதலிப் பகற்றிப் போரில்
நேசமிக் குடைய பார்த்தன் நிலைத்திட வலவ னாய்;
வாசவன் பகையால் வாடு மாநிரை கிரியெ டுத்துப்
பாசமாய்க் காத்து நின்ற பரந்தாமா சரணம் நீயே. 7

உந்தியிற் கமலந் தன்னில் உதித்தனன் அன்ன வூர்தி;
தந்தியின் உரியோன் கூடத் தந்தனை ஐயன் தன்னைச்;
சிந்தனை தன்னிற் காமன் திருமகள் மைந்த னானான்;
கந்தனுக் கிருவர் தம்மைத் தந்தவா சரணம் நீயே. 8

துருபதன் பாவை தன்னைச் சுயோதனன் தம்பி மன்றில்
ஒருகரங் கூந்தல் பற்றி ஒண்துகில் களைந்த போது,
தருமனுந் தம்பி மாருந் தலைதாழ்த்தி வாளா நிற்ப
மருளுற்றாள் மானங் காத்த மணிவண்ணா சரணம் நீயே. 9


அல்லியங் குடமும் மல்லும் அரவினில் நடமு மாடி,
மெல்லியல் பின்னை முன்னோன் மேவவே குரவை பாடி,
வல்லியின் மடியிற் பால வடிவுடன் வந்து சேர்ந்து
வல்லிபுர ஆழ்வா ராகும் மாயனே சரணம் நீயே. 10

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்துத் திருக் குடமுழுக்கு மலர்க் குழு



இடமிருந்து வலம்: திருவாளர்கள் : ச. தேவதாசன் (செயலாளர்), த. கெங்காதரன் (தலைவரும், ஆசிரியரும்), Dr. க. அருளானந்தம், இ. க. திருஞானசம்பந்தமூர்த்தி.

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்துத் திருப்பணிச் சபை



இடமிருந்து வலம்—முன்வரிசை: திருவாளர்கள்: சி. கணபதிப்பிள்ளை, ச. மா. கந்தசாமி, ப. இராமலிங்கம், க. கணபதிப்பிள்ளை, சி. வல்லிபுரம், ப. நா. கிருஷ்ணகுமார்.

இடமிருந்து வலம்—பின்வரிசை: திருவாளர்கள்: வ. செல்லத்தம்பி, சி. வே. சிவசுப்பிரமணியம், த. கெங்காதரன்.

# ஆழ்வார்களின் பாவனைத் திறன்

**கலாநிதி, அ. சண்முகதாஸ் அவர்கள்**, B. A. (Hons.) Ph. D. (Edin.)
(தமிழ்த்துறைத் தலைவர், யாழ். வளாகம்)

நமது தமிழ்மொழியாலமைந்த இலக்கியப் பரப்பிலே பலவேறு வகையான பொருளமைதிகளையும் உருவங்களையும் நாம் தரிசிக்கமுடிகின்றது. அவற்றுள், பண்டைய புராண, இதிகாச, பாகவத மூலங்களை அடிப்படையாகக்கொண்டு தமிழகத்திலே பாடப்பட்ட பக்திப்பாடல்கள் தனித்தன்மைகொண்டனவாயமைகின்றன. அவை சமய ஆர்வலருக்கும் இலக்கிய ரசிகர்களுக்கும் ஒருங்கே பயனளிப்பனவாயுள்ளன. இவற்றுள்ளும் திருமாலைத் தொழுதேத்தும் பாடல்கள் ஒரு வகையானவை. திருமால் மானிட அவதாரம்பெற்ற புராண, இதிகாச, பாகவதக் கதைகள் திருமாலடியார்களுக்கு மானிட அன்பினைக் கடவுள் அன்பாக மாற்றிக் கவிதைகள் படைக்க நன்கு உதவின. மானிட அன்பு கடவுள் அன்பாகும் தத்துவம் இந்திய மெய்யியல் ஞானத்துடன் ஒட்டியதாகும். இவ்விடத்தில் வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் கூறிய ஒரு கூற்று மனங் கொள்ளத்தக்கது.

"இந்தியாவில் எங்கள் இலக்கியங்களின் பெரும்பாலான பகுதி சமயச் சார்புடையன. ஏனெனில், எங்களுடைய கடவுள் எங்களிடமிருந்து தூர இருப்பவரல்லர். அவர் எங்கள் வீடுகளிலும் உள்ளார்; கோயில்களிலும் உள்ளார். உண்மையான பெண்களில் அக் கடவுளைக் காண்கிறோம். உண்மையான ஆண்களிலும் காண்கிறோம். குழந்தைகளில் அவனைக் காண்கிறோம், அவன் திரும்பத் திரும்பப் பிறக்கிறான். ஆகவே எங்கள் சமயப் பாடல்கள் காதற் பாடல்களாக அமைகின்றன."

என்று கூறுகின்றார். பாரதநாட்டின் குலதெய்வம் கண்ணன் என்று கூறுவார்கள். அவன் அளித்த பகவத் கீதை இந்துக்களின் பைபிள் அல்லது திருக்குர்ஆன் எனக் கொள்ளப்படும். ஏனெனில் முன்னெழுந்த இந்திய சமய மெய்யியற் கருத்துக்களின் சாராம்சமாக அது அமைவதாலேயாகும். இதனை ஒரு ஸம்ஸ்கிருத சுலோகம் நன்கு தெளிவுறுத்துகின்றது:

ஸர்வோப நிஷதோ **காவோ**
**தோ**க்தா **கோ**பால நந்தந:
பார்தோ வத்ஸ ஸுதீர் **போக்**தா
**துக்தம் கீதாம்ருதம்** மஹத்

**வைஷ்ணவ** தந்திரஸார என்னும் நூலிலே குறிப்பிடப்பட்டுள்ள இச் செய்யுளின் பொருள் பின்வருமாறு:

"உபநிடதங்களெல்லாம் பசுக்கள்; கோபால நந்தனுடைய மகன் கிருஷ்ணன் அப்பசுக்களிற் பால் கறப்பவன்; அருச்சுனன் பசுக்கன்று; மிகச்சிறந்த கீதை என்னும் பால் அப் பசுக்களிலிருந்து கறக்கப்படுகின்றது. அப்பாலினைக் குடிப்பவர்கள் அறிஞர்."

இவ்வாறு இந்திய தத்துவ தரிசனத்தையே அளித்த கண்ணன் பாரத நாட்டின் குலதெய்வமாகியது விந்தையல்ல. சுதந்திரம் பெறவேண்டிநின்ற இந்திய நாட்டில் இந்த நூற்றாண்டில் பாரதி கண்ணனைப் பாடிய போது வ. வெ. சு. ஐயர் அவர்கள் இவ்வாறுதான் கூறினர்;

"பாரத நாட்டின் குலதெய்வமாகிவிட்ட கண்ணனுக்குப் பாமாலை சூட்டாத கவிகள் அருமை. தன்னை நெடுநாள் மறந்திருந்த பாரதநாடு திடீரென விழித்துக்கொண்டதும், அதன் எதிரே முதலில் தோன்றிய ஒளி, கீதா சாஸ்திரத்தைக் கூறி, பார்த்தனுடைய ரதத்தை வெற்றிபெற ஓட்டிய கண்ணபிரானுடைய உருவமே; அந்த உருவமானது நமது கவியின இருதயத்திலும் எழுந்து அவருடைய கவிதைக்கு ஒரு சோபையைக் கொடுத்தது."

இத்தகைய கண்ணன் மனிதரோடு மனிதராக வாழப் பல அவதாரங்களை எடுத்துள்ளான், ஏன் அவ்வாறு அவதாரங்கள் எடுத்தான் என்பதற்குக் காரணத்தையும் அவனே **பகவத் கீதையில்** கூறி விடுகிறான்.

"யதா யதா ஹிதர்மஸ்ய க்லானிர்பவதி பாரத
அப்யுத்தான மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்"

"பரித்ராணய ஸாதூனம் விநாசாய ஸதுஷ்க்ருதாம்
தர்மஸம் ஸ்த்தாபனார்த் தாயஸம் பவாமியுகேயுகே"

என்ற இரு சுலோகங்களும்;

"பாரதா, எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்குகிறதோ, அப்பொழுதெல்லாம் நான் என்னைப் பிறப்பித்துக் கொள்கிறேன்."

"நல்லவர்களைக் காப்பதற்கும் கெட்டவர்களை அழிப்பதற்கும் தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்".

என்னும் பொருளைத் தருகின்றன. இவ்வாறு மானிட அவதாரங்கள் பெற்ற கண்ணனைப் பாடுதற்கு மானிட உறவுகளையே கையாளுதல் ஆழ்வார்களுக்கு மிகவும் இலகுவாயிற்று. கண்ணனின் தாயாக, காதலியாக, மாமியாக; இராமனின் தந்தை தசரதனாக எல்லாம் ஆழ்வார்கள் பாவனைசெய்து பாடியுள்ளார்கள். அத்தகைய பாடல்களிலே அவர்களுடைய பாவனைத் திறன் காரணமாக பரபக்தியின் ஆழத்தினையும் அகலத்தினையும் வேகத்தினையும் உணர்ந்து கொள்வது மட்டுமன்றி, அவற்றின் இலக்கியச் சுவையினையும் நாம் சிறப்பாக அனுபவிக்க முடிகின்றது.

முதலில், தாயாகப் பாவனை செய்வதை நோக்குவோம். கண்ணனைக் குழந்தையாக எண்ணித் தம்மைத் தாய் என்னும் பாத்திரமாகப் பாவனை செய்து பாடுகிறார்கள் பெரியாழ்வாரும், குலசேகராழ்வாரும். பெரியாழ்வாருடைய கண்களுக்குத் தாய்மை உணர்ச்சி பொங்கும் அவருடைய கண்களுக்குத் திருக்கோட்டியூர் ஆயர்பாடியில் கண்ணன் அவதாரஞ் செய்வதாகத் தெரிகின்றது. குழந்தை பிறந்தது – குறிப்பாக இந்தக் கண்ணக் குழந்தை பிறந்தது, பெற்றோர்களுக்கு மாத்திரமல்ல உற்றார், ஊரார், மற்றோர் யாவருக்குமே மகிழ்ச்சியாயுளது. பிள்ளை பிறந்த மாத்திரத்தே அப்பிள்ளையின் வீட்டைத் தேடி ஓடுகிறார்கள் பல பெண்கள்; சிலர் அத் தெய்வக் குழந்தையை விருப்பத்துடனே அணைத்து மகிழ்கின்றனர்; சிலர் குழந்தையை எடுத்துக்கொள்ள விரும்புகின்றனர்; சிலர் குழந்தையைத் தூக்கி முத்தமிட, சிலர் குழந்தை எங்கே எனத் தாயிடங் கேட்கிறார்கள். இவற்றையெல்லாம் பெரியாழ்வாராகிய தாய் கண்டு கூறுகிறாள்:

"ஓடு வார்;விழு வாருகந் தாலிப்பார்;
நாடு வார்நம்பி ரானெங்குற் றானென்பார்;
பாடு வார்களும் பல்பறை கொட்டநின்
றாடு வார்களு மாயிற்றாய்ப் பாடியே."

இவ்வாறு பிறந்த குழந்தைக்குத் தாயாகத் தம்மைப் பாவனை செய்து பாடும் பெரியாழ்வார் பல இதிகாச புராணக் கதைகளைத் துணையாகக் கொண்டு தம் பாவனைத் திறனை அரண் செய்கின்றார். பிறந்த கண்ணக் குழந்தையினைத் தாய் தாலாட்டுகிறாள். அப்பொழுது அக்குழந்தைக்கு வந்த பரிசில்கள் பற்றிக் கூறுமிடத்து,

"மாணிக்கங் கட்டி வயிர மிடை கட்டி
ஆணிப்பொன் னாற்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ வையமளந்தானே தாலேலோ"

என்று பெரியாழ்வார் என்னுந்தாய் தாலாட்டுப் பாடுகிறாள். உலகளந்த பெருமாளுக்கு — மூன்றடிகளாலே உலகமெல்லாவற்றையும் கடந்தவனுக்கு— இந்த உலகத்தையே படைத்த பிரமனே தொட்டில்கட்டி அனுப்புவது பொருத்தமாயுள்ளது. அந்த வண்ணச்சிறுதொட்டிலிலே உலகளந்த பெரியவன் படுக்கமுடியாதல்லவா? அதனால் தான் பெரியாழ்வார் இந்தச் சந்தர்ப்பத்திலே "மாணிக் குறளனே" என்று விளிக்கின்றார். அவ்வாறு சிறுவனாக விளித்தபோதும் அவன் பெருமையினைத் தாய் மறந்தவளாயில்லை. கண்ணக் குழந்தை சந்திரனை வரும்படி கூவியழைக்கிறான். ஆனால் சந்திரனோ ஓடிச் செல்கிறான். அப்பொழுது தாய் கூறுகிறாள் :

"சிறியனென் றென்னிளஞ் சிங்கத்தை யிகழேல்கண்டாய்;
சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்றுகேள்;
சிறுமைப் பிழைகொள்ளில் நீயுமுன் தேவைக்குரியைகாண்;
நிறைமதி! நெடுமால் விரைந்துன்னைக் கூவுகின்றான்."

"சந்திரா! கண்ணக் குழந்தை சிறியவன் என்று எண்ணி இகழ்ந்துவிடாதே. வாமன வடிவங்கொண்டு சிறியவனாகச் சென்று மாவலியிடம் மூன்றடி மண்கேட்டு விண்ணையும் மண்ணையும் இரண்டு அடிகளிலே கடந்து மூன்றாவது அடி மாவலிச் சக்கரவர்த்தியின் தலையிலே விழுந்தது. சிறியவன் என்று மாவலி எண்ணி ஏமாந்துவிட்டான். அவ்வாறு நீயும் இவனைச் சிறியவன் என்று எண்ணிவிடவேண்டாம்" என்று சந்திரனுக்குப் பெரியாழ்வாராகிய தாய் கூறுகிறாள்.

பெரியாழ்வாராகிய தாய் தன் பிள்ளை தளர்நடை நடக்க, அவன் வாயிலிருந்து வீழ் நீர்வடியக் கண்டு அதனைத் திரும்ப எடுத்துக் கூறுங்காட்சி அருமையான சொற்சித்திரமாக அமைந்துவிடுகின்றது. அதுமட்டுமன்றி அப்பாடல் பெரியாழ்வார் தாயாகப் பாவிக்குந் திறனையும் நன்கு வெளிப்படுத்திவிடுகின்றது. அப்பாடல் இதுதான் ;

படர்பங் கயமலர்வாய் நெகிழப் பனிபடு சிறுதுளிபோல்
இடங்கொண்ட செவ்வா யூறியூறி யிற்றிற்று விழநின்று
கடுஞ்சேக் கழுத்தின் மணிக்குரல் போலுடைமணி கணகணென
தடந்தா ளிணைகொண்டு சார்ங்கபாணி தளர்நடை நடவானோ.

இது சாதாரணமாக நாம் காணக்கூடிய காட்சி, வீழ் நீர் வடிய நிற்குங் குழந்தைகளை நாம் கண்டிருக்கிறோம். அது எவருக்குமே பரவசமூட்டக்கூடிய காட்சி. அதனை அழகுணர்வுடன் ஆழ்வார் தத்ரூபமாகச் சித்திரிக்கின்றார்.

பெரியாழ்வார் கண்ணக் குழந்தையை வளர்த்த யசோதையாகப் பாவனை செய்தார். ஆனால் குலசேகராழ்வாரோ எல்லையில் பிள்ளையாகிய கண்ணன் செய்யும் குழந்தைக் குறும்புகளைக் காணாத் தெய்வத் தேவகியாகப் பாவனை செய்கிறார். அவள் புலம்பிய புலம்பல்களை, அவள் தாயுள்ளத்தில் எழுந்த இன்பக் கனவுகளை அக்கனவுகள் நனவாக முடியாததனால் ஏற்பட்ட உள்ளக் குமுறல்களைக் கவிதை உருவங்களாகத் தீட்டுகின்றார் குலசேகராழ்வார்.

'மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்' என்றும், குழந்தைகள் விட்ட மிச்சில் உணவு அமிழ்தினும் ஆற்ற இனிதே என்றும் குழந்தைகளாலுண்டாகும் இன்பங்களைக் கூறிச் செல்கிறான் வள்ளுவன். இவ் வின்பங்களைத் தாயாரிடம் கேட்டாற்றான் அறியலாம். ஒவ்வொரு தாயும் தன் மனத்துள் இவ்வின்ப நினைவு அலைகள் எழுவதை உணர்ந்து மகிழ்வாள். ஆனால் யாம் அதனை முழுக்க முழுக்க அறிதல் இயலாது. எனினும், குலசேகராழ்வார் தன்னைத் தேவகி என்ற தாயாக மனோ பாவனை செய்து தன் நெஞ்சில் எழும் இன்ப அலைகளைக் கூறி அவற்றை அனுபவிக்க முடியாத நிலையில் தானிருக்கிறதாகக் கதறுகிறாள்,

தண்ணந் தாமரைக் கண்ணனே! கண்ணா!
தவழ்ந்தெ ழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணிற் செம்பொடி யாடிவந் தென்றன்
மார்பில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ
வண்ணச் செஞ்சிறு கைவிர லனைத்தும்
வாரிவாய்க் கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன்; ஓ!கொடு வினையேன்,
என்னை யென்செயப் பெற்றதெம் மோயே.

"குளிர்ந்த அழகிய தாமரைமலர் போன்ற கண்களையுடையவனே, கண்ணனே! நிலத்திலே தவழ்ந்து எழுந்து தள்ளாடி நடந்துசென்று, மண்ணிலே படிந்த செம்புழுதிகளை உடம்பு முழுவதும் பூசிக்கொண்ட அந்த அழுக்கோடு என் மார்பிலே வந்து அணைத்துக்கொள்கின்ற பாக்கியத்தை நான் பெறாமலே போய்விட்டேன். ஐயோ! நீ உணவு உண்ணும்போது உனது அழகிய சிவந்த விரல்கள் எல்லாவற்றையும் சேர்த்து அந்த உணவை அள்ளுவாய்; அள்ளி அப்படியே அவ்விரல்கள் முழுக்க வாய்க்குள்ளே போகக் கீழும் மேலும் சிந்துவாய்; போட்டுவைத்த உணவு முழுவதையும் உண்ணாமல் கையினால் அளைந்து மீதம் வைத்து விடுவாய்; அந்த மீதத்தை எடுத்து அமிழ்தத்தைக் காட்டிலும் இனிமையாகச் சுவைத்துண்ணும் பாக்கியத்தையும் பெறாமல் போய்விட்டேன், இவ்வுலகில் எதற்காகத்தான் என் தாய் ஈன்றாளோ அறியேன்," தேவகியின் அடிவயிற்றிலிருந்து தாய் உணர்ச்சி கிளர்ந்தெழ அதனைத் தாங்க முடியாது வாய்விட்டுக் கதறுகிறாள்.

இவ்வாறு தாயாக இவ்விரு ஆழ்வார்களும் பாவனை செய்து பாடியதுபோல ஏனைய ஆழ்வார்களும் பல்வேறு பாத்திரங்களாகப் பாவனைசெய்து பாடியுள்ளனர். அப்பாடல்களிலே அவர்களுடைய பாவனைத் திறனை நன்கு தரிசிக்கலாம்.

# இருக்கு வேதத்தில் விஷ்ணு சூக்தம்[1] ஒன்று

## 1, 154. ரிஷி[2] : தீர்க்கதமஸ் : சந்தஸ்[3] : திரிஸ்டுப்

**திரு. சி. முருகவேள் அவர்கள், M. A.**

*( நூலகர், சிரேஷ்ட உதவி பல்கலைக்கழகம், பேராதனை )*

இருக்கு வேதத்தில் விஷ்ணு ஆக ஆறு சூக்தங்களில் முழுமையாகவும், இன்னும் வேறு மிகச் சில சூக்தங்களில் இந்திரன் அக்கினி முதலிய பிற தெய்வங்களுடனும் போற்றப்படுகின்றார். ஏறக்குறைய நூறு இடங்களில்தான் அவர் நாமம் இவ் வேதத்தில் வருகின்றது. இவ்வடிப்படையில், வைதிக சமயத்தில் விஷ்ணு அவ்வளவு முக்கியமான தெய்வம் அல்லர் என்ற கருத்தினைச் சில அறிஞர்கள் வெளியிட்டுள்ளார்கள். இக் கருத்துப் பிழையானது என்றே கூறத் தோன்றுகிறது. இருக்கு வேத ரிஷிகள் தாங்கள் பாடிய தெய்வங்களைத் தரம் பிரித்துப் பாடினர் என்று கூறல்முடியாது. வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு நேரங்களில் தாங்கள் கண்ட அமானுஷ்யக் காட்சிகளை, கவிதைகளில் வடித்துத் தந்தவர்கள் அவர்கள். காட்சி ஆற்றல் வாய்ந்த மேன்மையான காட்சியாக இருந்திருந்தால், அக்காட்சியில் உருவாகும் தெய்வமும் ஆற்றலும் மேன்மையும் உடைய தெய்வமே.

முதலாவது மண்டலத்தில் வரும் இச்சூக்தம் ஆறே ஆறு ரிக்குகளைக்[4] கொண்டது. எனினும், இது பிற்காலத்தில் வைஷ்ணவ சமயம் தனக்கே சிறப்பான சில அம்சங்களைக் கொண்ட ஒரு தனிப்பெருஞ் சமயமாக வளர்வதற்கு வழிவகுத்துள்ளமையைக் காணலாம்.

1. எவன் செவ்வண்ண ஒளிமயமாய், துகள் கிளம்ப உலகங்களை அளந்தவன்; எவன் அடியவர் வாழ, சுவர்க்கத்தை நிறுவியவன்; எவன் அகலமாய் மூவடி வைத்தவன்; அவன் விஷ்ணு. அவ்விஷ்ணுவின் வீரச் செயல்களைப் பாடுகின்றேன்.

2. எவன் தன் மூவடிகளின் கீழ்ச் சகல புவனங்களையும் ஆசுவாசமாக அமைதியுற்று இன்புறச் செய்தவன்; அவன் விஷ்ணு. மலை உச்சிகளில் உலாவித் திரிந்து கர்ச்சிக்கும் சிங்கங்கள் போல, அவன் அடியார் செருக்குற்றுத் திரிந்து அவன் புகழ் பாடுவர்.

3. எவன் நீண்ட அகன்ற மேலுலகத்தை மூவடிகளினால் தானே ஒருவனாய் அளந்தவன்; அவன் விஷ்ணு. மலைப் பிரதேசங்களில் திரிபவனும், அகலமாய் அடிவைப்பவனும் ஆகிய அவ்விஷ்ணு ரிஷபத்திற்கு எனது இப்பாமாலை அர்ப்பணமாகட்டும்.

4. எவன் தேன் சொட்டும் அநாதியான மூவடிகளினால் சீவர்களை அன்னம் அளித்துப் போஷித்து இன்புறுத்துகின்றான், எவன் முத்தாதுக்களோடு[5] கூடிய இப் பூமியையும் மேலுலகத்தையும் தாங்கி நிற்கின்றான்; அவன் விஷ்ணு.

5. தெய்வத்தினை விகசிக்கும் மனுஷ்யர்கள் வாழும் அவனது பிரியமான இடத்திற்கு யானும் போக ஆசைப்படுகின்றேன்.

அங்குதான் அகல் ஞாலத்தினை அடியெடுத்தளந்த அண்ணலின் சக அடியார்கள் இன்புற்று வாழ்கின்றனர். விஷ்ணுவின் மேலான பதத்தில் தேனூற்று ஒன்றுண்டு.

6. தேவர்களே! எங்கு பெரிய கொம்புகளையுடைய பசுக்கள் மடிவின்றித் திரிகின்றனவோ, அச்சுகஸ்தானத்திற்குச் செல்ல ஆசைப்படுகின்றேன். அகலமாய் அடியெடுத்து வைக்கும் விஷ்ணு ரிஷபத்தின் மேலான பதம், வெகுவாய் எம்மை நோக்கிப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

இத் தமிழாக்கத்துக்கு, சில இடங்களுக்குச் சாயனாசாரியரின் உரையையும், இன்னும் சில இடங்களுக்கு மேற்கத்திய மொழிநூல் வல்லாரின் விளக்கங்களையும் ஆதாரமாகக் கொண்டுள்ளேன். இன்னும் சில இடங்களில் பிற்கால வைஷ்ணவ சமய அடிப்படைக் கோட்பாடுகளுக்கேற்ப மொழிபெயர்த்துள்ளேன்.

---

1. ஸூக்தம்: நன்றாகக் கூறப்பட்டது என்பது பொருள்; வேதத்தில் ஒரு பொருள் பற்றி அல்லது ஒரு தெய்வம் குறித்து வரும் பல மந்திரங்களின் தொகுதி. ஒவ்வொரு சூக்தத்துக்கும் தேவதை, ரிஷி, சந்தஸ் உண்டு. இங்கு தேவதை விஷ்ணு.
2. மந்திரத்தையும் மந்திரப் பொருளையும் கண்டு கூறிய ரிஷி: இங்கு தீர்க்கதமஸ்.
3. யாப்பு ஓசை இரண்டையும் உள்ளடக்கியது சந்தஸ். சந்தஸ்களைப் பற்றிய வைதிக அறிவுத் துறையும் சந்தஸ் எனப்படும். இது வேதாங்கங்களில் ஒன்று.
4. பாதங்கள் எனப்படும் செய்யுள் அலகுகளைக் கொண்ட இருக்குவேத மந்திரம் ரிக்.
5. திரிதாது என்பது சொல். கருத்து தெளிவில்லை. சாயனரின்படி நீர், நிலம், தீ.

# திருமால்

செல்வி சிவகாமி கணபதிப்பிள்ளை, B. A. (Hons.)
விரிவுரையாளர், பேராதனை வளாகம்

முல்லை நிலத்துத் தெய்வம் மாயோன் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. மாயோன் அல்லது திருமாலைப் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களிற் காணப்படுகின்றன. மிகவும் பழைய நூல்களிலே மால், மாயோன் என்ற பெயர்களே வழக்கிலிருந்தன. முல்லைப் பாட்டின் மூன்ரும் அடியில் 'மால்' என்ற சொல்லும், மதுரைக் காஞ்சியில் ஐந்நூற்றுத் தொண்ணூற்ரேராம் அடியில் 'மாயோன்' என்ற சொல்லும் வருகின்றன. மற்ற நூல்களிற் பல இடங்களில் இப்பெயர் காணப்படவில்லை. எனினும் கூறப்படும் பண்புகளைக் கொண்டு அவ்விடங்களிற் குறிக்கப்படும் தெய்வம் திருமால் என அறிந்து கொள்ளலாம்.

'ஆலமார் கடவுள்' எனப் புறநானூறும்,

'நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல்'

என முல்லைப்பாட்டும் திருமாலைப் பற்றிக் கூறுகின்றன. பெரும்பாணுற்றுப்படை, 'காந்தளஞ் சிலம்பிற் களிறு படிந்தாங்குப் பாம்பணைப் பள்ளியமர்ந்தோன்' எனவும், 'நீனிற வுருவின் நெடியோன் கொப்பூழ் நான்முகனொருவற் பயந்த' எனவும், 'இருநிலங் கடந்த திருமறு மார்பின் முந்நீர் வண்ணன்' எனவும் திருமாலைப்பற்றிக் கூறுகின்றது.

திருமால் மும்மூர்த்திகளிலே காக்குங் கடவுளாவர். திருமாலை விஷ்ணு என்றுங் கூறுவர். உலகமெங்கும் நிறைந்துள்ளவர் என்பது இதன் பொருளாகும். இவர் நான்கு கைகளையுடையவர்; சங்கு, சக்கரம், உடைவாள், கதை, வில் ஆகியவற்றைத் தாங்கியிருப்பவர்; சங்கின் பெயர் பாஞ்சஜன்யம்; உடைவாளின் பெயர் நந்தகம்; கதாயுதத்தின் பெயர் கௌமேதகம்; வில்லின் பெயர் சார்ங்கம். இவர் மார்பில் ஒரு மறு உண்டு. அதன் பெயர் ஸ்ரீவத்ஸம், கழுத்தில் கௌஸ்துபம் என்ற ஆரம் ஒளிரும். நீலநிற மேனி கொண்டவர். இடுப்பிலே பீதாம்பரம் என்று கூறப்படும் மஞ்சள் நிற ஆடை இருக்கும்; இவருடைய கைகள், கால்பாதங்கள், கண்கள் தாமரை மலர் போலிருக்கும் என்று கூறுவர்.

இவ்வித திருக்கோலத்திலே ஆலயங்களிலே திருமாலின் உருவம் அமைந்திருக்கும். சில கோயில்களிலே ஆதிசேடன் என்று கூறப்படுகிற பாம்பின்மேற் படுத்துக் கிடப்பது போல இருக்கும். இந்த நிலை 'கிடந்த கோலம்' எனக் கூறப்படும். பாற்கடலிலே இவ்விதம்தான் திருமால் ஆதிசேடன் என்னும் பாம்பின் மேலே சயனித்திருக்கிறுர் எனக் கூறுவர். கிடந்த நிலையிலே திருமால் 'யோகநித்திரை' செய்கிறுர் என்பர். உலகத்து உயிர்களைக் காக்குங் கருத்திலேயே அந்த யோகநித்திரை செய்கிறுராம்.

சில இடங்களிலே, தலைக்குமேலே குடைபோல ஆதிசேடன் படமெடுத்திருக்க, அவனது உடலையே சிம்மாசனமாகக் கொண்டு அமர்ந்திருக்கும் கோலத்திலே இருப்பர். இந்த நிலை 'இருந்த நிலை' எனப்படும்.

சில இடங்களிலே, நிற்பது போலத் தோன்றுவார். இந்த நிலை 'நின்ற நிலை' எனக் கூறப்படும். ஸ்ரீதேவி, பூதேவி எனப்படும் திருமகளையும் மண்மகளையும் திருமாலின் தேவியராகச் சொல்வர்.

உலகத்து உயிர்களைக் காக்குங் கடவுள் இவரேயாதலின் அங்ஙனம் காப்பாற்றுவதற்காக அவ்வப்போது உலகத்தில் மனிதரைப் போலத்தாமே தோன்றுவார். வாழும் மனிதருள் தகுந்த ஒருவரிடம் தமது சக்தியைச் சிறிதளவு கொடுத்து அவரைக் கொண்டு பல காரியங்களை முடிக்கச் செய்வார். அதனுலேயே சாதாரண மனிதர்களாலே சாதிக்க முடியாதவற்றை நிறைவேற்றுபவர்களைத் 'தெய்வ அருள் பெற்றவர்' என்று போற்றி மதிக்கிறுர்கள்.

சிவபெருமானைப் போலன்றித் திருமால் அவதாரங்கள் எடுப்பவர். பிறவாயாக்கைப் பெரியோனுகிய சிவனிலும் பார்க்க அவதாரங்கள் எடுத்துவரும் திருமால், அடியார்கள் அண்மிச் செல்லக்கூடியவராகக் காணப்படுகிறுர். திருமால், தாமே மானிடராய் மண்ணுலகிற்கு இறங்கிவந்ததையே 'அவதாரம்' என்கிறேம். அவதாரம் என்ற சொல் இறங்குதல் என்னும் பொருள்கொண்டதாகும். அவதாரங்கள் பத்து என்று கூறுவர். அவையாவன: மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராவாகதாரம், நரசிம்மாவ

தாரம், வாமனவதாரம், பரசுராமாவதாரம், இராமாவதாரம், கிருஷ்ணவதாரம். புத்தாவ தாரம். சிலர் புத்தாவதாரத்தைச் சொல்லாமல் பலராமாவதாரம் என்று கூறுவர். மச்சாவ தாரம், கூர்மாவதாரம், வாமனவதாரம் என் பன பற்றிக் குறிப்புக்கள் சதபத பிராமணத்திற் காணப்படுகின்றன. அவதாரங்களின் தொகை பற்றியும், பெயர்பற்றியும் கருத்து வேறுபாடு காணப்பட்டபோதிலும், அவதாரங்கள் பத்து என்று கூறுவது மரபு. எட்டாம் நூற்றாண்டு மாமல்லபுரச் சாசனம் ஒன்று மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, தசரத ராம பார்க்கவராவ, புத்த, கல்கி என்னும் பத்து அவதாரங்களை எடுத்துக் கூறுகிறது. கண் ணன் திருமாலுடைய பூரண அவதாரமாகக் கொள்ளப்படுவதுண்டு. காத்தலுக்குரிய தெய்வ மான திருமாலின் அருட்செயல்களாக இந்த அவதாரங்கள் கணிக்கப்பட்டுள்ளன.

பாகவதம் என்ற நூல் திருமாலின் பெருமை களையும், சிறப்புக்களையும், கருணைத் திறத்தை யும் விளக்குவதற்கென்றே எழுதப்பட்டதாகும்.

ஒருகாலத்தில் எங்கும் நீரே வெள்ளமாகப் பெருகி நிரம்பியிருந்தது. அந்தவெள்ளத்தின் மேலே — ஆதிசேடனாகிய பாம்புப் படுக்கை யிலே உயிர்களுக்கெல்லாம் உயிராய் விளங்கும் இறைவனாகிய திருமால் யோகநித்திரை செய்துகொண்டிருந்தான். அவனுள்ளத்திலே இந்த உலகத்தைப் படைக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அப்போது அவனது நாபியிலே ஒரு தாமரை தோன்றியது. அதன் நடுவே வேதவடிவினனை பிரமன் தோன்றி னான். தோன்றியவுடனே தானும் இறைவனும் மாத்திரம் இருப்பதையும் இறைவனது விருப் பத்தையும் தியானத்தால் உணர்ந்தான். படைப்புத் தொழிலைப் புரியத் தனக்குச் சக்தி யையும், திறனையும் அருளும்படி வேண்டினான். உயிர்க்கு உயிராய் விளங்கும் பரமன் அருளவே பிரமன் அந்த அருளாலும். தன் தவ வலிமை யாலும், அறிவு வலிமையாலும் உலகங்களைப் படைத்தான். சில ஆலயங்களிலே ஆதிசேட னாகிய பாம்புப் படுக்கையிலே திருமால் படுத் திருப்பதுபோலவும், அவனது நாபியிலிருந்து தோன்றிய தாமரை நடுவே பிரமன் வீற்றிருப் பது போலவும் உள்ள திருவுருவம் காணப்படு கின்றது.

1. திருமாலின் அவதாரங்களாகக் கூறப் படும் பத்து அவதாரங்களிலே ஒன்று, வராகா வதாரம் ஆகும். இரணியாக்கன் என்ற அரக் கன் பூமியைக் கடலாழத்திலே அமுக்கிக்கொண் டிருந்தபொழுது திருமால் இந்த அவதாரத்தை எடுத்தார் என்று கூறப்படுகிறது. அவர் ஒரு பெரிய பன்றியாகத்தோன்றிக் கடல்நீரின் ஆழத் திலே மூழ்கித் தம் கொம்புகளின் நுனியிலே பூமியைத் தாங்கினார். பூமியை மேலே எழ விடாது தடுத்த இரணியாக்கனைக் கொன்று விட்டுப் பூமியை மேலே கொண்டுவந்து நிறுத் தினார்.

2. அட்டூழியங்களைச் செய்த இரணியகசிபு என்பவனை அழிப்பதற்காக எடுத்த அவதாரமே நரசிம்மாவதாரம் எனக் கூறப்படுகிறது. இரணி யாக்கனின் சகோதரனான இரணியகசிபு, திரு மால் தனது தமையனைக் கொன்றதாலே தீராப் பகை கொண்டு "திருமாலை எவரும் வணங் குதல் ஆகாது. அவர் பெயரைச் சொல்லுதல் ஆகாது" என்று உத்தரவிட்டான். எல்லோ ரும் தன்னையே தெய்வமாக வணங்கவேண்டும் என்றும் கூறினான். அவனின் மகனான பிரகலா தன் அவனுக்கு நேர்மாறாக விளங்கி" திருமால் தூணிலும் இருக்கிறார்" என்று தந்தைக்கு விடை பகர்ந்தான். இரணியன் தூணைப் பிளந்த பொழுது, திருமால் அந்தத் தூணிலே மனித உடம்பும் சிங்கத் தலையும் கொண்ட நரசிங்க அவதாரம் எடுத்து இரணியனைக் கொன்றார்.

3. அசுரர்களை அடக்குவதற்காகத் தேவர் கள் அமிர்தத்தைப் பெறும் பொருட்டுப் பாற் கடலைக் கடையும் பொழுது அவர்களுக்கு உதவி செய்வதற்காகத் திருமால் கூர்மாவதாரம் எடுத்தார் எனக் கூறப்படுகிறது. வாசுகி என்ற பாம்பைக் கடை கயிறாகக் கொண்டு, மந்தர மலையை மத்தாக வைத்துப் பாற்கடலைத் தேவர்கள் கடையும் பொழுது, மந்தரமலை அடிப்புறத்திலே ஆதாரம் இல்லாமற் கடலுள் மூழ்கியது. அப்போது திருமால் மிகப் பெரிய ஆமையின் உருவத்தை எடுத்துக் கொண்டு அந்த மலையின் கீழேசென்று அதைத் தாங்கினார். அவர் முதுகில் மந்தர மலையாகிய மத்து நிலைத் துச் சுழன்றது.

4. அசுரனாகிய மகாபலி முறையில்லாமல் தேவர்களின் உலகைக் கவர்ந்த பொழுது அவனை அழிக்கத் திருமால் வாமனவதாரம் எடுத்தார் எனக் கூறப்படுகிறது. காசிப முனி வரின் வேண்டுகோளின்படி திருமால் அதிதிக்குப் பிள்ளையாகப் பிறந்து வளர்ந்தார். அவர் குள்ள மான வடிவொடு விளங்கியதால் 'வாமனர்' எனப்பட்டார். வாமனர் மூவடி மண்ணை மகா பலியிடம் பெற்று, ஓரடியிலே மண்ணுலகை யும், மற்றொரு அடியாலே விண்ணுலகத்தை யும் அளந்தார். மூன்றாவது அடியை மகாபலி யின் தலையிலே வைத்து அவனைப் பாதாளத் திலே அமுக்கிப் புகுத்தினார்.

5. பிரமனிடமிருந்து வேதங்கள் களவாடப்பட்ட பொழுது திருமால் மச்சாவதாரம் எடுத்தார். எனக் கூறப்படுகிறது. ஒரு சமயம் பிரளயம் ஏற்பட்டது. அப்போது பிரமதேவன் சிறிதளவு தூங்கினான். அந்தவேளை பார்த்து ஹயக்கிரீவன் என்ற அசுரன் பிரமனிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து சென்று கடலுள் மறைந்தான். இதனைக் கண்ட திருமால் உடனே மீனுருவம் எடுத்துக் கொண்டு ஹயக்கிரீவனைக் கண்டுபிடித்து மாய்த்து. அவனிடமிருந்த வேதங்களைக் கொண்டுவந்து பிரமனிடம் சேர்த்தார்.

6. அரசகுலத்தினர் ஒரு சமயம் மிகவும் இறுமாப்புக் கொண்டு மக்களைத் துன்புறுத்திய பொழுது திருமால் அதனைத் தடுக்கப் பரசுராமாவதாரம் எடுத்தார் எனக் கூறப்படுகிறது. ஜமதக்கினி என்ற முனிவருக்கும் ரேணுகைக்கும் நான்கு புதல்வர்கள் தோன்றினர். அவர்களுள் நாலாவது புதல்வரின் பெயர் இராமன் என்பதாகும். பகைவரை அழிக்க அவன் பரசு (கோடரி) என்ற ஆயுதத்தைக் கையிலே தாங்கியிருந்ததாலே பரசுராமன் எனப்பட்டான். இவ்விதம் பரசுராமனாக அவதரித்த திருமால் இருபத்தொரு முறை அரசகுலத்தில் தீய பண்புகள் தலையெடுக்க ஒட்டாமல் அழித்து, நீதியை நிலைநாட்டினார்.

7. திருமால் இராமாவதாரம் எடுத்த பொழுது அரக்கனான இராவணனைக் கொன்று அட்டூழியங்கள் செய்த எல்லோரையும் அழித்து நல்லோர்களைக் காத்தார் எனக் கூறப்படுகிறது,

8. பூமியை ஆண்ட மன்னர்கள் ஒரு சமயம் நெறியிலிருந்து மிகவும் பிறழ்ந்தனர். பூமிதேவி பிரமனிடம் முறையிட்ட பொழுது பிரமன், ''திருமால் வசுதேவனுக்கு மகனாய்க் கண்ணன் எனப் பிறக்கப் போகின்றான். தேவப் பெண்கள் கோபியர்களாகவும், முனிவர்கள் பசுக்களாகவும் பிறப்பார்கள். ஆதிசேடன் கண்ணனுக்கு அண்ணனாகப் பிறப்பான். உன் துயர் தீரும்'' என்றான். இதன்படியே திருமால் கண்ணனாக அவதரித்துக் கம்சனையும் மற்றும் பகைவரையும் கொன்றார். கண்ணனாக அவதரித்த திருமால் பஞ்சபாண்டவருக்கும் துணையாயிருந்து உதவி செய்தார்.

9. திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகப் புத்தாவதாரமும் கூறப்படுகிறது. சிலர் புத்தாவதாரத்தைச் சொல்லாமல் பலராமாவதாரம் என்று கூறுவர். பௌத்தமதம் செல்வாக்கிழந்து வந்த காலத்திலே திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகப் புத்தரைக் கூறத் தொடங்கினர் வைணவர். பௌத்த சமயத்தவர் வைணவர்களுள் ஒரு பகுதியினராக மாறிவிடுவதற்கு இக்கூற்று உதவியது. பௌத்தப் பள்ளிகள் சில வைணவக் கோவில்களாக மாறியது வரலாற்றுண்மையாகும். அதிகமான பௌத்தர்கள் திருமால் வணக்கத்தை இன்று மேற்கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

10. கலியுகத்தின் முடிவிலே உலகத்தை யாளுபவர்கள் அளவிடமுடியாத அக்கிரமங்களையும், அநியாயங்களையும் செய்யும்பொழுது திருமால் கல்கியவதாரம் எடுப்பார் எனக் கூறப்படுகின்றது. இந்த அவதாரத்தின்போது திருமால் தீயவர்களை அழித்துத் தருமத்தை நிலைநாட்டுவார் எனக் கூறப்படுகின்றது.

திருமாலின் அவதாரப் பெருமைகளை வைணவ ஆழ்வார்கள் தங்கள் பாடல்களிலே எடுத்தாண்டுள்ளனர். திருமாலினுடைய அவதாரங்கள் அருட்செயல்களாகக் கொள்ளப்படுகின்றன. திருமாலின் அவதாரங்களுள்ளே கண்ணனவதாரமும், இராமாவதாரமும் ஆழ்வார்கள் மனத்தை விசேடமாக வசீகரித்தன. வைணவ ஆழ்வார்களுள்ளே பெரியாழ்வாரும், ஆண்டாளும் கண்ணனவதாரத்திலேயே தம் உள்ளத்தைப் பறிகொடுத்துள்ளனர். பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகவும், ஆண்டாள் கண்ணனைக் காதலனாகவும் கண்டனர். பெரியாழ்வார் இராமாவதாரத்தைப் பற்றிப் பாடிய போதிலும் அது கண்ணன் பெருமைபற்றிப் பாடியது போலவே காணப்படுகின்றது. இராமாவதாரத்திலே, தம்மை முழுக்க முழுக்கப் பறிகொடுத்தவர் குலசேகராழ்வார். இவர் கண்ணனவதாரத்தைப் பற்றிப் பாடியபோதும், அங்கு இராமனுடைய பெருமையையே பாடினார்.

மதாசாரியர்களுட் சிலர், திருமாலின் இருதயத்தில் பரமசிவன் இருப்பதாகச் சொல்கின்றனர்; பரமசிவனுடைய இருதயத்தில் திருமால் இருப்பதாகச் சொல்பவர் சிலர். இதனால் சிவனை வழிபட்டால் திருமாலையும் வழிபட்டதாகவும், திருமாலை வழிபட்டால் சிவனை வழிபட்டதாகவும் ஆகிறது. எவரை வழிபட்டாலும் ஆதிப்பரம்பொருளையே வழிபட்டதாக அமைகிறது என்பதே உண்மையான கருத்தாகும்.

# சூடிக் கொடுத்தவள் பாடிக் கொடுத்தாள்

திரு. ஆ. சிவநேசச்செல்வன் அவர்கள், B. A. (Hons.)
இலங்கைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாண வளாகம்

பக்தி இலக்கிய மரபிலே காதற் சுவை ததும்பும் அமர கவிதைகளை அளித்த வைஷ்ணவ உலகம் தமிழ் இலக்கிய அகமரபை மீறியதுபோலச் சைவ நாயன்மார் மீறவில்லை. சங்ககால இலக்கியங்களிலே அமைந்துள்ள பொருள் மரபினைத் தமது பக்தி உணர்வுக்குக் கருவியாகப் பயன்படுத்திய வைஷ்ணவ ஆழ்வார்களின் பாடல்களிலே அன்பினைந்திணையல்லாத அகத்திணை மரபு புது மெருகுடன் பேரின்ப உணர்வு கலந்து வெளியாகியது. மரபு மீறிய நிலையிற் பாடியமை, இவற்றிலே உணர்ச்சியும், உயிரோட்டமும் மீதூர இறப்பதற்கு ஒரு காரணம் எனலாம். கண்ணன்மீது பக்திக் காதல்கொண்ட ஆண்டாளின் அனுபவ உணர்ச்சிப் புலப்பாடே நாச்சியார் திருமொழி. நாயக நாயகி பாவத்திற் பாடிய பக்திக் கவிஞர்களுள் பெண்ணாக விருந்தே பெண்ணுணர்ச்சியைப் புலப்படுத்திப் பெருமையுறும் ஆண்டாள் பெற்ற பல்வேறு அனுபவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும் வகையிலே அமைந்துள்ளன.

திருமொழியின் ஆரம்பத்திலேயே ஆண்டாள் காதலின் வளர்ச்சி நிலையில் இருந்து பாடுகிறாள். 'கண்ணனை இணக்கு' எனக் காமனைத் தொழுவதிலிருந்து திருமொழியை ஆரம்பிக்கிறாள். மானுட உணர்ச்சியையும் தெய்வீக பக்தி உணர்ச்சியையும் இயைபுபட அமைத்துத் தனது அதீத நிலையைத் தீர்த்துக்கொள்ள முனைகிறாள். தம்மை மானுட நிலையிலே வைக்காது கண்ணனுடன் ஒன்றுபடுத்திவிடத் துடிப்பதைப் பல நிலைகளிற் காணமுடிகின்றது. காமதேவனை விளித்துப் பாடும் பகுதியிலே, கண்ணனோடு முழுகிக் கலக்க வேண்டு மென்ற ஆவல் மேலீட்டினாற் பாவனை மீதூரப் பாடுவதைக் காணலாம். தன்னை ஆண்டவனுக்கே அர்ப்பணித்த பக்தையின் அதீத பக்தியுணர்வையும் அதனூடே கலந்த உலகியற் காதலுணர்ச்சியையும் தான் ஒரு மானுடப் பெண் என்ற நினைவின்றியே வெளிப்படுத்துகிறாள். ''நெஞ்சை நெருப்பாக்கும் காதலுணர்ச்சியின் தன்மையையும், அத்தகைய உணர்ச்சியுடன் காதலிக்கும் மணாளன் என்று கொண்டவன்மீது எழும் பாசத்தின் பரிணாமங்களையும் அவனுக்காக ஏங்கித் தவிக்கும் பெண்மையின் அவஸ்தைகளையும் வீறுடன் பாடியதை ஆண்டாள் பாடல்களிற் காணலாம்.'' காமனை வழிபட்ட பகுதியில் உண்மையான நியம உணர்ச்சியுடன் வழிபாடு செய்ததையும் காணமுடிகிறது.

> ''வெள்ளை நுண்மணல் கொண்டு தெருவணிந்து,
> வெள்வரைப் பதன்முன்னம் துறைபடிந்து,
> முள்ளு மில்லாச் சுள்ளியெரி மடுத்து,
> முயன்றுன்னை நோற்கின்றேன்; காமதேவா''

என்று கூறும்போது வழிபாட்டு முறையையும் காட்டுகிறார். கண்ணன்மீது கொண்ட அன்பை இது தெளிவாக்கிப் புலப்படுத்துகின்றதெனலாம். வாழ்க்கையில் நுழையும் பருவமெய்தியவர் அனுபவிக்க வேண்டிய இன்பத்தையும், தெய்வீகமாகப் பெற்ற பெண்மையின் துடிப்பையும், உள்ளத்தின் உணர்ச்சி மூலம் சித்திரிக்கும் தன்மையிற் பாடல்கள் அமைகின்றன. ஆண்டாளின் இந்த நிலையை மதுரபக்தியினைக் கடந்த நிலையாகிய மகாபாவனை யெனலாம். ''இறையன்பு, தஸ்யம், ஸக்யம், வாத்ஸல்யம், மதுரம் என நான்கு வகைப்படும் என ஸ்ரீ சைதன்ய சித்தாந்தம் கூறும். இந் நான்கினுள் மிக உயர்ந்தது மதுர பக்தியாகும்''. இந் நிலையைப் பெற்றவர்கள் கோபிமார்களே. கண்ணனுடன் கூடும்போது தம்மையும் கண்ணனையும் மறந்து பேரின்பத்தில் ஆழ்ந்து விடுகின்றனர். காமம் எள்ளளவும் அற்ற இந் நிலையைக் காம நினைவுடையார் சிறிதும் பெற முடியாது. உடலுணர்ச்சி முழுதாக அற்றுப்போய், தெய்வானுபவப் பேற்றின் உயர்ந்த அனுபூதி நிலையில் இறைபணிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த நிலையே இது எனலாம். இறையன்பினுள்ளே தாம் அடங்கித் தமக்குள் இன்பத்தை அடக்கும் நிலையே இஃது. வைஷ்ணவ சித்தாந்தப்படி யமைந்த இச் சாதன பக்திக்கு அப்பாற்பட்ட மகாபாவனையைச் சேக்கிழார், பெரிய புராணத்திற் காட்டும், 'வீடும் வேண்டாவிறல்' என்ற நிலையுடன் ஒப்பிடலாம், கண்ணனை இதயத்தே நிறுத்தி அவன் வயப்பட்ட ஆண்டாளின் உணர்வு முதிர்ச்சி நிலையையும் இத் தெய்வானுபவப் பேற்றினை அடையும் முயற்சியின் ஒரு படியெனலாம்.

''ஞானமும் பக்தியும் ஒன்று கூடும்போது இறைவனே, எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறம்பும் இருப்பதைப் பிரபன்னன் காண்கிறான்.'' இந்த நிலைதான் நம்மாழ்வார் காட்டும்,

"உண்ணும் சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலையும், எல்லாம்
கண்ணன் ..............."

என்ற நிலையாகும். கண்ணன் மீது காதல் கொண்ட ஆண்டாளின் மனோநிலையும் இவ்வாறானதே. கண்ணன் வடிவழகில் மயங்கி அவனுக்கே தன்னை அர்ப்பணஞ் செய்து மணஞ் செய்ததாகக் கனவு கண்டு பிரிந்திருக்கும் தலைவி நிலையிலே மனக்கவற்சி யடைந்து வருத்தத்தின் மத்தியில் அல்லல் விளைத்த அழகனைச் சேரத் துடிக்கிறாள். அதீத பக்தியினால் பிரபக்தி நிலை வரும்போது பக்தன் தனக்கென ஒன்றைக் கோராது இறைவன் இஷ்டப்படியே தன்னை வைத்து அனுபவிக்கும்படி விட்டு விடுகிறான். பயன் கருதாத இவ் விலட்சியக் காதலையே ஆண்டாள் அவாவினாள் எனலாம். இதனை அனுபூதி நிலையின் ஒருபடி என்பர். "அனுபூதி நிலையிற் பெறும் அனுபவத்தை மொழிகளாற் சொல்ல முடியாது. அதனால் அவர்கள் குறியீடுகளின் வாயிலாக வெளியிடுகிறார்கள். அவர்கள் கையாளும் குறியீடுகள் காதல் கல்யாணம் ஆகியவையாகும். தம் அனுபவ வேளையில் அனுபூதிமான்கள் வெளியிடுவதெல்லாம் அவர்கள் வாயிலாகக் கடவுள் வெளியிடுவதாகும்." எனவே ஆண்டாள் பிரபக்தி நிலையிற் பெற்ற அனுபூதிச் செல்வமே நாச்சியார் திருமொழி எனக் கூறலாம்.

கண்ணன்மீது காதல் கொண்ட பெண்கள் பலர். வடநாட்டுக்கு ராதை போலத் தமிழ் நாட்டிற்கு நப்பின்னையைக் கூறுவர். நப்பின்னை காதல் பற்றிய விரிவான இலக்கியங்களைக் காணமுடியாது. ராதையின் காதல் உறவு கண்ணனுடன் ஏற்பட்ட தெய்வீக இயைபு. இத் தெய்வீக இயைபு பாலுணர்ச்சி நிலை சார்ந்த மானுட நிலைக்கு அப்பாற்பட்டதென்பர். ராதை பெற்ற காதல் அனுபவங்களைவடநாட்டு இலக்கியங்களில் நுணுக்கமாகப் புலப்படுத்தியுள்ளார். வங்கநாட்டு இலக்கிய கர்த்தாக்கள் கண்ணன்ராதை பற்றிய பாவங்களை ரஸபாவம் ததும்ப சற்று விரஸ நிலையிற் கூடக் கூறியுள்ளனர். தன்னையே அர்ப்பணஞ் செய்யும் ராதை நிலைபோன்ற ஒப்புயர்வற்ற கூட்டையே ஆண்டாள் கண்ணனிடத்தில் எதிர்பார்த்தாள் எனலாம். பெரியாழ்வாரின் செறிவினால் "கிருஷ்ண லீலா ரஸபாவங்களில்' ஈடுபட்ட ஆண்டாளின் மனம் இவ்வாறான பாவனையில் ஈடுபட்டதில் வியப்பில்லை.

உலகியல் வாழ்க்கையிலே உயர்ந்த இலட்சியங்களை எவ்வளவுக் கெவ்வளவு நெறிப்படுத்த முனைகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு வாழ்க்கை துன்பமயமானதாக இருக்கும். இயங்கும் உலகிலே காணமுடியாத கண்ணனை, அகத்திலே நிறுத்தி அவனை அடைய அவாவிய ஆண்டாள் வரலாறு பலவித அனுபவங்கள் கொண்டதை அவதானிக்கலாம். ஆண்டாளின் அனுபவங்கள் நிறைந்த ஆன்ம சரிதத்தை ஆன்ம அழகின் வளர்ச்சியுடன் வரையிட்டுக் கண்டுகொள்ளலாம். குழந்தைப்பருவ உணர்வுகளையும், கன்னிப்பருவ நினைவுகளையும், பக்திப்பெருங் காதலையும், இறைவன் ஆட்கொண்டதையும் கலந்து அனுபவப் பொதியாக நாச்சியார் திருமொழிமூலம் வெளிப்படுத்துகிறாள். இவ்வாறான அக உணர்வே பக்திப் பாடலுக்கும் அகப் பாடலுக்கும் அடிநாதமாக, ஆதார சுருதியாக விளங்கும் என்பர். பெரியாழ்வாரின் பக்தி வாழ்க்கை இலட்சியங்களுக்கு ஆண்டாளின் பாடலை இலட்சியமாகவுங் கொள்ளலாம். ஆண்டாளின் மனத்திற் கண்ணனைக் காதலனாக வரிக்கும் நினைவை ஏற்படுத்தியதும் பெரியாழ்வாரின் இயைபே யெனலாம். கண்ணன்மீது கொண்ட காதலின் ஆழ்ந்த அனுபவமாக எல்லைமீறிய உணர்ச்சிகளைச் சொல்லோவியமாக வெளிப்படுத்துங்கால் மானுட உணர்ச்சியும் தெய்வீக உணர்ச்சியும் வேறறக் கலந்து விடுகின்றது! "மானுடர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கிலேன்" என்பதன்மூலம் பரமாத்மாவின் இயைபிற்கு அவாவிற்கு ஒன்று சேரத் துடிப்பதையும் காணலாம்.

இத்துடிப்பின் வளர்ச்சி, 'வண்ணனுக்கே பணிசெய்து வாழப்பெறுவிடில் நான் அழுதழுதமந்தம்மா வழங்க ஆற்றவும் அது உனக் குறைக்குங் கண்டாய்'' என்ற வைராக்கிய பக்தியை ஏற்படுத்துகின்றது. அடக்கமுடியாத அன்புக் காதல் மேலீட்டால் கூடலிழைத்தும் இத்துயர் அகலவில்லை. பொதும்பினில் வாழும் குயிலை விளித்துத் தன் உள்ள நிலையைச் சுட்டிக் கூவுவாய் என அங்கலாய்க்கிறாள். இந்நிலையில் ஆண்டாள் வாயிலாக வரும் "காமம் மிக்க கழிபடர் கிளவி", அவள் ஆற்றாமையையும் உணர்ச்சியின் வளர்ச்சியையும் காட்டுகிறது எனலாம்.

பரமாத்மாவாகிய கண்ணனை மானுடனாகப் பாவனைசெய்து வரித்த ஆண்டாள் மாயவன் தன்னை மணம் செய்த நிலையைக் கனவு கண்டதாகத் தோழிக்கு உணர்த்தும் வாயிலாகத் தன் உணர்ச்சிக்கு அமைதிகாண முனைகிறாள். எனினும், இதயத்திற்கு அங்கலாய்ப்பே மிகுகிறது. இச் சூழ்நிலையில் கண்ணபிரான் கரத்துள்ள சங்கை விளித்து,

"கரும்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ,
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ,
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விழுப்புற்றுக் கேட்கின்றேன்; சொல்;ஆழி வெண்சங்கே"

எனச் சற்று அதிகமாகவே, தன் அடங்காத உணர்ச்சியையும் பக்தியையும் வெளியிடுகிருள். தொடர்ந்து மேகத்தைத் தூது விடுகிருள். இப்பகுதிப் பாடல்கள் ஒரே பிரலாபமயமாகவே காணப்படுகின்றன. ''குயில் காள்! மயில்காள்! கருவிளைகாள்! நறுமலர்காள்!'' என்றெல்லாம் அரற்றுகிருள். 'என் கோவிந்தன்' எனச் சற்று அழுத்தம்கொடுத்துப் பாடுகிருள். இந்நிலையில் மலர்களும், குருகினங்களும், களிநிலையிற் திரிதரும் சிறுபிராணிகளும் விரகதாபத்தையும் கண்ணன்மேல் மோகத்தையும் மிகைசெய்கின்றன. காணும் பொருள்களெல்லாம் கண்ணனுகவே ஆண்டாளுக்குக் சாட்சியளிக்கின்றன. கரைபுரண்டோடும் காதல் வெள்ளத்திற் பற்றுக்கோடின்றித் தவிக்கும் அனுபவங்கள் பொதிந்துள்ள ஆண்டாள் கூற்றுக்கள், பித்தநிலையில் உழலும் மனுேபாவத்தையும் காதல் காரணமாகத் தன்னைக் கைவிடமாட்டான் என்ற மனுேதைரியத்தையும் காட்டுவதுடன், உணர்ச்சியின் வளர்ச்சி நிலையையும் தெளிவுபடுத்துகின்றன.

உணர்ச்சிக் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஆண்டாளின் மனுேபாவம் தொடர்ந்துவரும் பகுதிகளிலே சிற்றின்ப முலாம் பூசப்பெற்றுப் புலனுணர்ச்சியுடையதாகத் தெரிகின்றது. '.........வண்ண வாடை கொண்டென்றன் வாட்டம் தணிய வீசீரே' என்பன போன்ற அடிகளில் விரகதாபத்தால் ஏற்பட்ட நிலைமாற வழி கூறும் வகைகளைக் கூறுவதுபோலத் தெரிகிறது. இவ்வாருக இரங்கியேங்கிய ஆண்டாள் ஈற்றிலே தன் மனுேரதம், பிருந்தாவனத்தே கண்ணனைக் கண்டு நிறைவெய்தியமையைக் கூறிமுடிக்கின்ருர்.

எனவே, ஆண்டாளின் இலட்சியக் காதலைப் புலப்படுத்தும் நாச்சியார் திருமொழி, உள்ளக்குமுறல்களையும், குமையுந் தூய வெண்மை உள்ளத்தின் துடிப்பையும் கூறுவதன் மூலம் இன்ப உணர்ச்சிக்கு உருவளிப்பது போலப் படினும், சிற்றின்ப உணர்வு வழியே பேரின்ப விளக்கம் காட்டுகிறது எனலாம். முழுமையான உணர்ச்சியனுபவம் வளர்ச்சி யடைந்து முடிவதை அவதானிக்கும்போது, ஒவ்வொரு பத்தையும் ஒவ்வொரு நாடக நிகழ்ச்சிகளை அடக்கிய சொற்சித்திரமாகவும், நிகழ்ச்சிகளைத் தொடர்பாக வகுத்து நாடக முறையினை அமைக்க முயன்ற முயற்சியின் விளைவாகவும் கூறலாம் போலத் தெரிகிறது.

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருப்புகழ்

ஆழி நடுவினில் ஊழி முடிவினில்
ஆலின் இலையினில் — துயில்வோனே
ஆடும் அரவினில் ஏறி நடனமும்
ஆடிச் சயனமும் — அமர்வோனே
ஆழி சுடர்விட நாறுந் துளசியும்
ஆர்க்குஞ் சங்கமும் — உடையோனே
ஆழி கடைந்திடப் பூமின் உதித்திட
ஆகம் அமர்த்திய — நெடியோனே
ஆழித் தலையுடன் தூணில் உதித்துநீ
ஆங்கு மதலையைப் — புரந்தாயே
ஆயர் மகளிரின் சேலை திருடியே
ஆவி யுடலென — அணைவோனே
ஆழி யொருபுறம் ஆலித் தெழுந்திட
ஆன்ற துணைப்பதி — வருவோனே
ஆல துதித்திட நாடும் அடியரை
ஆளும் வலிபுரப் — பெருமானே.

— சி. செல்லமுத்து

உ

# சைவமும் வைணவமும்

பேராசிரியர், கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள், M. A., Ph. D. (Poona)

சைவமும் வைணவமும் தென் பாரதத்தின் தமிழ்நாட்டின் இரு கண்களாக விளங்குவது கண்கூடு. சைவத் திருக்கோவில்களும் வைணவத் திருக்கோவில்களும் கலந்து விரவாத கிராமங்களே அங்கு இல்லை எனத் துணிந்து கூறலாம்.

பாரதநாட்டில் நிலவும் சமயங்களுட் சைவம் தனிப்பெருஞ் சிறப்புடையது. உயரிய ஞானம் கூறும் சைவசித்தாந்த தத்துவம் வழங்கியதால் உயர்ந்து விளங்குவது. 'எத்தெய்வத்தை வழிபடினும் தன்னை யறியாது சிவபிரானையே வழிபடுபவனாகின்றான்' என்ற உண்மையினை எடுத்துரைத்துச் சிவபெருமானது அருளும் பெற்றியை விதந்து கூறுவது.

ஈழநாட்டில் சிவாலயங்களே பெருமளவிற் காணப்படுகின்றன. வைணவ ஆலயங்களில் ஒரு சிலவற்றையே இங்கு காண்கிறோம். தனியே நிறுவப்பட்ட வைணவ ஆலயங்களில் பெரும்பாலாகச் சைவப் பெருமக்களே வழிபடுவதையும் காண்கிறோம். இவ் வழிபாட்டுமுறை சைவ பாரம்பரியத்துக்குப் பொருத்தமாக அமைந்திருப்பது உற்று நோக்கற்பாலது. அது எவ்வாறெனெ நோக்குவோம்.

சிவாகமங்கள் விஷ்ணுவின் வழிபாடுபற்றியும் எடுத்தியம்புவன; சிவாலயத்தில் விஷ்ணு எவ்வாறு இடம் பெறுவர் என்பது பற்றியும் முக்கியமாகச் சிவாகமங்களுள் ஒன்றான காரணாகமம் எடுத்துக் கூறுகின்றது. காரணாகமம் 60ஆவது படலம். சிவபெருமானது பரிவார தெய்வமாக விட்டுணுவைப் பிரதிட்டிப்பதற்கும் இடம் வகுத்ததோடமையாது விட்டுணுவைப் பிரதிட்டிக்கும் முறையினை 99ஆவது படலம் விரித்துரைக்கின்றது. கிராமங்களில் விட்டுணுவின் ஆலயம் தனியாக அமையும் முறைபற்றியும், அங்கு பரிவாரங்களை நிறுவும் முறையானது விட்டுணு ஆலயங்களில் வழிபாடு எவ்வாறு பாஞ்சராத்திர கிரமமாக நிகழவேண்டும் என்பதுபற்றியும் எடுத்துரைக்கின்றது. இதுபற்றியே சைவப் பெருமக்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களிலும் விஷ்ணுவிற்காகத் தனி ஆலயங்கள் நிறுவப்பட்டிருப்பதையும் சைவப்பெருமக்கள் அங்கு சென்று வழிபாடு நடத்துவதையும் காண்கிறோம். இதில் வியப்பெதுவுமில்லை.

சிவலிங்கத் திருமேனியிலும் மூன்று அமிசங்கள் விளங்குவதைச் சைவத் திருக்கோவிற் கிரியை நூல்கள் கூறும். ஒன்று பிரமபாகம்; மற்றையது விஷ்ணு பாகம் எனப்படும். மூன்றாவது உருத்திர பாகமாகும். விஷ்ணு பாகம் இத்திருமேனியின் நடுவதான அம்சம். சிவலிங்கத் திருவுருவத்தின் இம்மூவகைப் பாகுபாடுகள் சகள நிலையில் உள்ள திருமேனிகளுக்கும் வழங்கக் காணலாம்.

உமைக்கும் திருமாலுக்கும் வேற்றுமை காணாத அப்பர் சுவாமிகள், திருத்தாண்டக மொன்றில் சிவபெருமானைத் 'திருமாலோர் பாகத்தான்' என்றும், ''அரியலால் தேவி யில்லை ஐயன்ஐ யாற னார்க்கே'' என்றும் கூறியவை நோக்கற்பாலன. திருமாலையும் தனது சக்திகளுள் ஒரு சக்தியாகக் கொண்டு ஒரு பாகத்தில் உடையவன் என்பது இதனால் தெளிவாகிறது. சிவபிரானது சக்தி ஒன்றே செயலாற்றுதற்கண் நான்காகப் பிரிந்து நிற்கும். அங்ஙனம் நிற்குமாறாவது: இன்பத்தில் பவானியும், ஆடவரிடத்துத் திருமாலும், வெகுளியில் காளியும், போரில் துர்க்கையும் என்பது சிவாகமங்களின் துணிபு,

''ஏகைவ சக்திஃ பரமேஸ்வரஸ்ய பின்னா சதுர்த்தா – விநியோககாலே,
போகே பவானி, புருஷேஷு விஷ்ணு; கோபேது காலீ – சமரேச துர்க்கா.''

சிவ – ஆகமங்களுள் விதித்த மூர்த்தி பேதங்களுள் ஹரேரர்த்த மூர்த்தியும், ஏகபாதத்ரி மூர்த்தியும் உற்று நோக்கற்பாலன, ஒரு காலில் ஊன்றிநிற்கும் உருவத்தின் நடுவிலிருந்து கிளைத்தெழும் இரு தோற்றங்களில் ஒன்று பிரமனாகியும் மற்றது விஷ்ணுவாகவும் விளங்கும் உருவமே ஏகபாதத்திரிமூர்த்தித் திருவுருவமாகும். சிவபெருமானின் 64 வகை மூர்த்தி பேதங்களுள் இதுவும் ஒன்று, ஹரேரர்த்த மூர்த்திக்கு உரிய மறு பெயர் ஹரிஹரமூர்த்தி. இது சங்கரநாராயண மூர்த்தி எனவும் கூறப்படும். இதில் அர்த்தநாரீசுவர வடிவத்தில் அமைந்திருப்பது போன்று ஒருபாதி சிவபெருமானின் அமிசம் விளங்கும். மறுபாதி திருமாலின் தோற்றத்தைக் கொண்டு அமையும்.

சைவத்தின் உன்னத நிலையைக் காட்டும் சிவபெருமானின் திருவுருவங்களில் விஷ்ணுவிற்குச் சக்கரம் வழங்கி அனுக்கிரகம் செய்யும் தோற்றம் வாய்ந்த விஷ்ணுவனுக்கிரக மூர்த்தியும், நரசிம்மத்தை யடக்கும் கோலம் காட்டி நிற்கும் சரபமூர்த்தியும் குறிப்பிடத்தக்கவை.

விட்டுணுவைத் தலைசிறந்த பக்தனாகச் சித்திரிக்கும் புராண வரலாறுகளும் இவ்வரலாறுகட்கு வடிவம் தரும் சிற்பங்களும் சிவவழிபாட்டில் விஷ்ணு ஈடுபட்டு நிற்கும் நிலையினை வெளிப்படுத்துவன. சிவபிரானை வழிபடும் விஷ்ணு ஆயிரம் தாமரை மலர்களால் அருச்சித்து வழிபட்டுக்கொண்டிருந்தபொழுது ஒரு மலர் குறையக் கண்டதும் தம் கண்ணை இடந்து மலராக அருச்சித்த வரலாற்றைச் சித்திரிப்பன இவ் வரலாறுகளும் சிற்பங்களும்.

பக்தியின் உன்னத நிலையினைச் சித்திரிக்கும் பெற்றியினை வேறொரு தெய்வம் வேண்டாது தம் தெய்வத்தையே தனிப்பெரும் தெய்வமாகக் கருதும் முறையை விளக்குவதைச் சைவ மரபிலும் தனித்தனியே காணலாம்.

சைவநெறி தழைத்தோங்கி வளர்ந்துவரும் ஈழத்திலும், சைவர்களே பெரும்பாலாக வசிக்கும் இடங்களிலும் சிவாகமம் கூறும் மரபை அடிப்படையாகக் கொண்டு போலும், தனி வைணவத்தலங்களும் பாஞ்சராத்திர ஆகம முறைகளைத் தழுவி நிறுவப்படலாயின. அதே முறைக்கமைய வழிபாடுகளையும் நடத்திவரலாயின.

# ஆலயமும் ஆன்மீகமும்

பிரம்மஸ்ரீ ச. க. இராமச்சந்திரக் குருக்கள் அவர்கள்

பிரதமகுரு, ஸ்ரீவல்லிபுரஸ்வாமி தேவஸ்தானம்

எண்ணரிய பிறவி தன்னுள் மானுடப் பிறவி எடுத்த ஆன்மாக்களுக்கு ஆண்டவனுடைய அனுக்கிரகத்தைத் தரக்கூடியது ஆலயமாகும். ஆ — என்றால் — ஆன்மா; லயம் — என்றால் வசப்படுதல்; ஆகவே ஆன்மா வசப்படும் இடம் ஆலயம் எனப்படும்.

ஆலயம் எனப்படும் திருக்கோவில் எமது உடம்பைப் போலவே அமைக்கப்பட்டுள்ளது. புறத்தே காணப்படும் ஆலயங்கள் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், ஸ்நான மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என ஆறு மண்டபங்களால் அமைந்துள்ளன. இந்த ஆறு மண்டபங்களும் எம் உடம்பின் கண் உள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களையும் குறிக்கும்.

சுற்றிலும் மதில் கட்டி ஒருபுறம் பெரியவாசல் அமைத்து, அங்கே இருக்கும் கோபுரம், ஸ்தூலலிங்கம் எனப்படும். நாம் தொலைவில் வரும்பொழுதே கோவிலின் கோபுரமாகிய ஸ்தூல லிங்கம் எமக்குத் தோன்றும். கோபுரத்தைக் காணும்போதெல்லாம் எமக்குத் தெய்வ சிந்தனை தோன்றும் என்ற நோக்குடனேயே இது அமைக்கப்படுகிறது. இதனையே இராஜகோபுரம் எனவும் அழைக்கின்றோம்.

இந்த இராஜ கோபுரத்தில், உலகில் உள்ள எல்லாப் பொருள்களின் உருவங்களையும் காணலாம். எம்பெருமானின் வீரச்செயல்கள், திருவிளையாடல்கள் காட்டுகின்ற உருவங்களும், தேவர்களின் உருவங்களும் பிறவும் இதன்கண் அமைக்கப்பட்டிருக்கும். இவற்றைக் காணும் பொழுதெல்லாம் இறைவனின் முழுமுதற் றன்மையை உணர்ந்து, அவரின்மேல் அன்பு செலுத்தவேண்டுமென்ற எண்ணம் உண்டாகும்.

இக் கோபுரத்தின் வாசல்கள் ஒன்றன்மேல் ஒன்றாக ஒற்றைப்படவே அமைந்திருக்கும். மூன்று வாசல்கள் இருந்தால் நனவு, கனவு, சுழுத்தி என்னும் மூன்று அவத்தை நிலைகளையும் ஐந்து வாசல்கள் இருந்தால் ஐம்பொறிகளையும், ஏழு வாசல்கள் இருந்தால் ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்னும் இரண்டையும் குறிப்பனவாகும். எத்தனை வாசல்கள் இருப்பினும், நாம் நிலமட்டத்தில் உள்ள வாசல் வழியாகவே உட்செல்ல முடியும். இவ்வாறே கடவுளின்மேல் நாட்டம் செல்லும் போது மனம் ஒன்றே பயன்படும்.

கோபுரத்தைத் தாண்டி உட்சென்றால் நாம் காண்பது பலிபீடம். துள்ளும் மறியாகிய எமது மனம், பலி ஏற்கக் காத்திருக்கின்ற பலிபீடமாகிய பத்திரலிங்கத்தை வீழ்ந்து வணங்கும் பாவனையாக வணங்கல் வேண்டும். அப்படி நாம் வணங்குவதினாலே எம் மனத்தின் கண் உள்ள காமம், வெகுளி, மயக்கம் முதலிய மிருகங்களை எல்லாம் பலிகொடுத்துவிட்டு ஆண்டவனிடம் செலுத்தும் அன்பு ஒன்றையே மனத்தில் வைத்துக் கொள்கிறோம் என்பதே கருத்தாகும். எனவே, எம் கீழான இயல்புகள் யாவையும் பலிபீடத்தில் பலி கொடுத்து அன்பு என்னும் உயர்வான இயல்போடு ஆண்டவனைத் தரிசிக்கச் செல்கின்றோம் என்பதாகும்.

கோவிலின் கர்ப்பக்கிருகம் திரைச் சேலையினால் மறைக்கப்பட்டிருக்கிறது. மாயையாகிய திரைச்சேலை இறைவனை அறியாதபடி ஆன்மாவின் அறிவை மறைத்துள்ளது. ஞான ஒளி வரும்வரையும் அடியவனாகிய ஆன்மா தவம் கிடத்தல் வேண்டும். நாம் கோவிலுக்குச் சென்று திரைச்சேலை நீங்கும் அளவும் காத்திருக்கின்றோம். மணிஓசை கேட்கிறது; திரை விலகுகிறது, கர்ப்பூரஆராதனையாலும், விளக்குக்களாலும் வெளிச்சம் உண்டாகி ஆண்டவனின் காட்சி எமக்குக் கிடைக்கிறது. இதில், எம் மனமே கர்ப்பக்கிருகம் எனவும், மனத்தின் கண் நிகழும் ஞானக் காட்சியே தீபாராதனையினால் உண்டாகும் ஒளி எனவும் கருதவேண்டும்.

இப்படியான எமது ஆன்மாவின் பரிசுத்த வாழ்வுக்கும், பக்தியின் வளர்ச்சிக்கும் வல்லிபுராலயம் வளர்ந்துள்ளது. இப்பிறவியில் ஜன்மம் எடுத்த மானுடர்க்கு ஜெகஜ்ஜோதியாக விளங்கும் மாயவனின் தசாவதாரங்களுள் மச்சாவதாரத்தின் மகிமைபெற்ற வல்லிபுர மாயவரின் ஆலயத்தில் மூலமூர்த்தியாக வீற்றிருக்கும் சக்கரத்தாழ்வார், தம்மை நினைந்துருகி வழிபடும் அடியார்கட்கு அல்லல்களை அறுத்து ஆனந்தம் அருளுகிறார்.

மேன்மேலும் பக்தகோடிகள் தினம் வணங்கி, வழிபட்டு வாழ்வில் வளம்பல பெற்று, இன்புற்றிருக்க வல்லிபுர ஆழ்வாரின் ஆலயத்திலே நித்திய, நைமித்திய பூஜைகள் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போலக் கடந்த மூன்று ஆண்டுகளாக ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழாக் கொண்டாடப்பட்டுவருகின்றது.

**ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் வந்த காரணம் யாதெனில்:**

பகவான் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே, தேவர்களின் வேண்டுகோளால் பூமியில் தர்மத்தை நிலைநாட்டவும், அன்பர்களுக்கு அருள்செய்யவும், துஷ்டர்களைச் ஸம்கரித்து சிஷ்டர்களைப் பரிபாலனம் செய்யவும், பூமிப்பாரத்தைக் குறைத்து லோகங்களை ரட்சிக்கவும் கிருஷ்ணனாக அவதரித்தார்.

ஏக ரூபியான ஈஸ்வரன் தன் சக்தியை படைத்தல், காத்தல், அழித்நல் என்ற முத்தொழிலுக்கும் பிரம்ம, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகிய மூன்று ரூபங்களை எடுத்து ஜீவாத்மாக்களைச் சிருஷ்டிக்கவும், ரட்சிக்கவும், ஸம்கரிக்கவும் அவதரித்தார். பரமாத்மா இவ்விதமாய் பிராணிகளை ஆட்டிவைக்கிறார் என்ற அனுமானப் பிரமாணத்தை உலகத்தாருக்குப் பிரத்தியக்ஷமாய் அறிவிக்கும்படி கிருஷ்ணாவதாரம் எடுத்தார். சக்திக்குத் தக்க பக்தி என்பதைத் தெரிவிக்க, பூர்ண பக்திமான்கள் மோக்ஷத்தையும், குறைந்த பக்திமான்கள் தாழ்ந்த பதவியையும் பகவான் கிருபையினால் அடைகிறார்கள். இவைகளை உலகத்தார் அறியவேண்டி இக் கலிகாவதாரம் எடுத்துக் காட்டினார். அந்தச் சமயம் தேவர்களையும் பூமியில் அவதரிக்கும்படி கட்டளையிட்டு, தானும் பூமியில் வாசம் செய்ய நினைத்தார்.

காத்தற் கடவுளாகிய கண்ணபிரான் ஆவணி மாதம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமித்திதி, ரோகிணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் கிருஷ்ணாவதாரம் எடுத்தார். மிக அற்புதம் வாய்ந்த பகவானின் இப் புனித நன்னாளின் பெருமைகளையும், சிறப்புக்களையும் பற்றிப் பல நூல்களிற் காணலாம்.

கோகுலமெங்கும் கொண்டாடும் இக் கிருஷ்ண ஜயந்தி விரத தினமானது பாவம் என்னும் கூட்டத்தை விலகிப்போகச் செய்யும் ஜயந்தி என்று எண்ணினாலே ஏழு ஜென்மங்களுக்கு ஒருவன் செய்த பாவங்கள் தீரும் என்று விரத கல்ப சிந்தாமணி என்னும் நூலில் கூறப்படுகிறது. இவ்விரத நாளிலே உபவாஸமிருந்து, விஷ்ணு ஆலயங்களில் கண்ணன் பிறப்புக்குரிய உற்சவக் கிரியைகளைத் தரிசித்து, பிரசாதங்கள் பெற்று மறுநாள் காலை பாரணஞ் செய்தால் 28 கோடி ஏகாதசி உபவாஸம் செய்த புண்ணிய பலன் உண்டாம்.

இவ் விரதத்தை அனுஷ்டிப்போர் முதல் நாள் நோன்பிருந்து, விரததினத்தன்று எள்ளு, நெல்லிப் பருப்பு இவைகளை அரைத்துத் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்து, விஷ்ணு ஆலயம் சென்று துளசி கலந்த தீர்த்தத்தை அருந்தினால் நான்குவித புருஷார்த்தங்கள் கைகூடி வரும். லக்ஷ்மி கடாட்சம் கிடைக்கும்.

வல்லிபுர மாயனை மனமுருகி வணங்கினால் மலைபோல் துன்பம் பனிபோல் நீங்கும்.

✻

வையம் தகளியா, வார்கடலே நெய்யாக,
வெய்ய கதிரோன் விளக்காகச் — செய்ய
சுடராழி யான்அடிக்கே சூட்டினன்சொல் மாலை
இடராழி நீங்கவே என்று.

— பொய்கையாழ்வார்

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு;
ஞானத் தமிழ்புரிந்த நான்.

— பூதத்தாழ்வார்

திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன்; திகழும்
அருக்கன் அணிநிறமுங் கண்டேன்; — திகழும்
பொன்ஆழி கண்டேன்; புரிசங்கம் கண்டேன்;
என்ஆழி வண்ணன்பால் இன்று.

— பேயாழ்வார்

# நாச்சியார் திருமொழி நயம்

**திரு. சீ. சிவப்பிரகாசம் அவர்கள்**

*(ஆசிரியர், சைவப்பிரகாச வித்தியாசாலை, தும்பளை)*

பெரியாழ்வார் திருமால்பாற் பேரன்பு பூண்டொழுகிய ஒரு பக்தர்; பூமாலை கொண்டேயன்றியும், பாமாலை தொடுத்தும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனுக்குச் சூட்டியவர். அவரால் ஸ்தாபிக்கப்பட்ட துளசி வனத்திலே கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட பெண் குழந்தைதான் கோதையார்: கோதைநாயகியார் என்றும், ஸ்ரீஆண்டாள் என்றும், சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் பெருமையாக விதந்து பேசப்படும் பெருமை உடையவரும் அவரேயாவர். பூப்பிராட்டியாராகிய இலக்குமி தேவியாரே, அவ்வாறு மனித உருவில் வந்தார். தெய்வத்திற்குப் பிரீதியான தொண்டு பூமாலையும் பாமாலையுமே என்பதை மனிதர்க்கு முன்னின்று காட்டி, அம் மனிதரை உய்விப்பதற்காக அவ்வாறு மானிட உருவில் வந்து விஷ்ணு சித்தர் என்னும் பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்டார்.

மணப்பருவம் எய்தியதும், அவர் எம்பெருமான் ஆகிய ஸ்ரீமந் நாராயணனையே அன்றி, மற்று எம் மனிதரையும் மணம் செய்வதில்லை என்னும் மனக்கருத்து உடையவர் ஆயினர். அதனால், அத்திருமால்பால் ஆராத காதல் கொள்வார் ஆயினர். அக்காதலால் எம்பெருமான்மேற் பாடிய நாச்சியார் திருமொழியில் அவரது மனநிலையாகிய காதல் விளைவுகளை — மெய்ப்பாடுகளை ஈண்டு ஒரு சிறிது நோக்குவோம்.

இறைவன்மேற் காதல் கொள்கிறாள்; அவனையே திருமணஞ் செய்யும் பாக்கியம் கிடைக்க வேண்டும் என்று காமன்பால் விரதங் கிடக்கிறாள்; விரதம் அனுஷ்டிக்கின்றாள்; தை மாதம் முழுவதும் தரையை விளக்கி, மாசி முதல் நாளில் வெள்ளை நுண்மணலால் தெருவை அணிந்து கோலஞ் செய்து, விடியற் காலையில், ஸ்நானம் செய்து வந்து, முள் இல்லாத சுள்ளிகளை எடுத்து எரியோம்புகிறாள். காமனுக்குப் பிரீதியென்று மத்தமலர், முருக்கமலர்கள் கொண்டு முப்பொழுதும் அர்ச்சிக்கின்றாள். அவள் அக்காமதேவனிடம் வேண்டுகின்றாள்;

> வானிடை வாழும்அவ் வானவர்க்கு
> மறையவர் வேள்வியில் வகுத்தஅவி,
> கானிடைச் சிறியதோர் நரிபுகுந்து
> கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப,
> ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கென்று
> உன்னித் தெழுந்தஎன் தடமுலைகள்,
> மானிடர்க் கென்று பேச்சுப்படில்,
> வாழகில்லேன் கண்டாய், மன்மதனே.

"எனது தடமுலைகள் ஸ்ரீமந் நாராயணனுக்கென்றே உன்னித்து எழுந்துள்ளன. அவனுக்கேயன்றி மானிடருள் எவர்க்கேனும் உரியன என்று யாரும் பேசும் பேச்சு என் காதில் விழுமாயின், என் உயிரை விட்டுவிடுவேன்" என்று அவ்வம்மையார் கூறுகின்றார். "அன்றியும், அவருக்கென்றிருப்பவற்றை, ஏனை மானிடவர் நுகர நினைப்பாராயின், அந் நினைவு, தேவர்களுக்கு என வேள்வியில் வைத்த அவியை, நரி வந்து கடப்பதும், மணப்பதும் போல் இருக்கும்" என்று கூறுகின்றார். பின்னும்,

> பேசுவ தொன்று உண்டு........
> பெண்மையைத் தலையுடைத் தாக்கும் வண்ணம்
> கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள்
> என்னும்இப் பேறுஎனக்கு அருள்கண்டாய்.

என்பது முதலாக, அவர் அம் மன்மதன்பால் வேண்டுகின்ற செய்யுள்கள் பத்தும், அவரது பிடிவாதமான மனநிலையின் உறுதியைச் செவ்வனே படம்பிடித்துக் காட்டுகின்றன:

காதல்நோய் கொண்ட கன்னிப்பெண்ணொருத்தி தான் காதலிக்கும் காதலனுடைய நாமத்தை அடிக்கடி சிந்திப்பதும் மனநிலையின் உறுதிப்பாடேயாகும். அதுமாத்திரமேயன்றி, அப்பெயரை மற்றொருவர்பாற் கேட்கும் போதும் மிக்க உவகை மேலிட்டுப் பொங்குவதும் நிகழ்தல் இயல்பே; அன்றியும் தன் காதலனை வருமாறு கூறும்படி பிறர்பால் வேண்டுதலும் காதல் மெய்ப்பாடே. அதனால், வினவும் வினாக்களுக்கு விடையை வாய்திறந்து, எம்மொழியானும் பேசும் ஆற்றல் அற்ற குயில் முதலியவற்றையும், அறிவேயில்லாத பொருள்களையும் நோக்கி, அப்பெயரைக் கேட்டு உவக்கும் எண்ணமும் காதல் நோயின் ஓர் அம்சமேயாகும். பெண்களுள் ஒருத்தியாய் மானிட உருவில் வந்த கோதையாரும் குயிலைப் பார்த்து, அவன் நாமத்தைக் கூறி, அவரை வருமாறு சொல்லியும் பாடிய பத்துச் செய்யுள்களுள் ஒன்றை நோக்குவோம்.

> மென்னடை அன்னம் பரந்துவிளையாடும்
> வில்லிபுத்தூர் உறைவான்தன்
> பொன்னடி காண்பதோர் ஆசையினாலென்
> பொருகயற் கண்ணிணை துஞ்சா;
> இன்னடிசி லொடுபால் அமுதூட்டி
> எடுத்தஎன் கோலக் கிளியை
> உன்னொடு தோழமை கொள்ளுவன்; குயிலே!
> உலகளந்தான் வரக்கூவாய்.

இன்னும், அவனை வரும்படி கூறினால், "என்னுடைய தலையை உனக்குப் பரிசாகத் தருவேன்" என்றும், "யான் பால் முதலிய உணவை ஊட்டி வளர்த்த கிளியை உன்னோடு கூட்டிவைப்பேன்" என்றும் கூறும் பகுதிகள்

காதல் நோயின் அம்சமான மெய்ப்பாடுகளை எடுத்து மிக்க தெளிவாய் விளக்கிக்கொண்டிருக்கின்றனை.

காதல்நோயால் கலக்குண்ட கன்னிப்பெண், தான் காதலிக்கும் காதலன், தன்னைப் புணர்தற்கு வரும் காலத்தை எதிர்பார்ப்பவள் அல்லவா? அந்நிலையில் அவனுடைய வாயிதழ் அமிர்தத்தைப் பருகும் எண்ணமுடையவளாய் இருப்பாள்தானே. தனக்கு அது கிடைக்கப் பெருமையால், அவ்விதழமுதத்தைப் பருகிய மற்றையவர்களின் பாக்கியத்தை நினைத்துத் துயருறுவாள் அன்றோ? அவ்வாறு அம்மையார் நோக்கும்போது, அத் திருமாலின் அதரவிதழ் அமிர்தத்தை உண்பதற்கு எப்போதும் பாக்கியம் பெற்ற பாஞ்சஜன்யம் என்ற அவரது சங்குதான் நினைவில் வருகிறது. அம்மையார் அப்பாஞ்சஜன்யத்தின் பேற்றையும், தான் அப் பாக்கியத்தைத் பெருமையையும் எண்ணி எண்ணித் தீராத் துன்பத்துக்கு ஆளாகிக் கொட்டாவிவிடும் பத்துச் செய்யுள்களும் படிப்பார் மனத்தை உருக வைப்பன. அவற்றுள் ஒன்றை நோக்குவோம்.

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்; சொல்; ஆழி வெண்சங்கே.

என்கிறார் அம்மையார். இன்னும் "பெண்கள் எல்லாரும் உன்னைப் பார்த்து உன்மேற் பொறாமை கொண்டு குற்றத்தை ஏற்றிப் பேசுகின்றார்களே" என்றும் பிராட்டியார் கூறும் பாடல் மிக்க அழகாய்த்தான் இருக்கின்றது.

உண்பது சொல்லில், உலகளந்தான் வாயமுதம்;
கண்படை கொள்ளல், கடல்வண்ணன் கைத்தலத்தே
பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்;
பண்பல செய்கின்றாய்; பாஞ்ச சன்னியமே.

சங்கே "நீ உண்பதோ என்றால் இவ்வுலகங்களை யெல்லாம் அளந்தவனுடைய வாயின் அமிர்தம்; நீ நித்திரை செய்யும் இடமோ என்றால் அப் பெருமானுடைய கைத்தலம்; உண்பதற்கும் உறங்குவதற்கும் எப்போதும் அவனிடமே இருந்துகொண்டாயே; நீ பெற்ற பேறு எனக்கும் என்னைப் போன்ற ஏனைக் காதல் நங்கையர்க்கும் கிட்டவில்லையே. அதனால் அப் பெண்கள் எல்லாரும் உன்மேற் பழிசுமத்துகின்றார்களே" என்னும் கருத்தில் அம்மையார் காதல் மெய்ப்பாடு எவ்வளவு வெளிப்படையாய்த் தோன்றுகின்றது; பாருங்கள்.

காதல் வேட்கை அதிகரிக்கத் தான் கருதிய காதலன் காலம் பல கடந்தும், தன் கருத்தை முற்றுவிக்காமையால், உள்ளத்தில் எழுந்த வேட்கை மிகுதி, பெண்ணின் உடலையும் உறுத்தலும் இயல்பாகும் அன்றோ. அவ்வாறு காதல் நோய் கொண்டார்பாற் காணத்தக்க மற்றொரு மெய்ப்பாடு 'காமம் மிக்க கழிபடர் கிளவி' ஆகும். அஃதாவது காதலிக்கப்பட்ட காதலன், தன்பால் வராமையால், மரத்தொடும், விலங்குகளொடும், பிறவற்றொடும் பேசித் தன் துயரத்தை ஆற்றிக்கொள்ளுதல். இந்நிலையில் அம்மையார் கூறிய பத்துச் செய்யுள்களும் அகப்பொருள் ஆய்வார்க்கு ஒரு பெரிய விருந்தை அளிப்பனவாகும். முல்லைச் செடியை நோக்கிக் கூறும் ஒரு செய்யுளை நோக்குவோம்.

முல்லைப் பிராட்டி! நீஉன் புன்முறுவல் கொண்டு
அல்லல் விளைவியேல்; ஆழிநங்காய்! உன் அடைக்கலம்;
கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்
சொல்லும் பொய்யானால் நானும் பிறந்தமை பொய்யன்றே.

"முல்லைப்பிராட்டியே! நீ ஏன் என்னைப்பார்த்துப் புன்சிரிப்புச் செய்கின்றாய்; இகழ்கின்றாய் போலும்; அவ்வாறு இகழாதே: துன்பத்தை மேலும் பெருக்காதே; நீ விட்டுவிடு" என்று கூறி அவருடைய சக்கரத்தின் இடமாக அடைக்கலம் புகுகின்றாள்; அதை நோக்கி "சக்கரமாகிய பெண்ணே! நீதானே என்னைக் கல்யாணம் செய்வதாக அவர் கூறியபோது, அவர் கையில் இருந்து கேட்டுக்கொண்டு நின்றாய்; நீதான் அவ்வாறு கூறினார் என்பதற்கு நல்ல சாட்சியாய் நின்றாய். சக்கரமே, நீயும் பெண்தானே; என்மேல் இரங்காயா?" என்று வேண்டுகின்றார். அன்றியும், சிரித்தவர்க்குத் தண்டனை என்ன வழங்க வேண்டும்? தன்னைப் பார்த்துச் சிரித்த குற்றத்திற்காகச் சூர்ப்பனகை என்ற பெண்ணின் மூக்கை அரிந்தவர் அல்லவா நம்பெருமான்; அவர் என்னைக் காதலிப்பதாக எனக்குச் சொல்லியிருக்கிறார்; நான் அவருடைய சொல்லை நம்பியிருக்கிறேன்; அவர் சொன்ன சொல் பொய்யானால், அதை நம்பி இவ்வாறு வாழ்கின்ற நான் பிறந்ததும் பொய்யாகும். நான் பிறந்தது பொய்யாகாமல் நீ உதவவேண்டும்" என்று அழகான பல கருத்துக்கள் தோன்ற அம்மையார் காட்டும் பாடல்கள், உள்ளுந்தோறும் உள்ளத்திற் பேருவகை ஊட்டுவனவாகும்.

உடலுற்ற நோயைப் பரிகரிக்க இயலுமா? இந்நோய் மருந்து பிறிதில்லாப் பெருநோய் அன்றோ? எனவே, காதல்வாய்ப்பட்ட பெண் சில மருந்துகளைத்தானே எடுத்து இயம்புகின்றாள். தன் காதலன் அணிந்த ஆடை, மாலை முதலியவற்றைத் தன்மேற் புரட்டினால் சுகமடைதல் இயலும் என்று எண்ணுதலேயன்றி, அதனை வாயால் எடுத்து உரைக்கவும் முயல்கிறாள். இக்கருத்து, கோதைப் பிராட்டியாரால், பத்துச்செய்யுள்களின் மூலம் தெய்வத் தன்மையோடு வெளிவருகின்றது. திருமால் அணிந்த ஆடை, துழாய்மலர், அவன் வாயில் ஊறியநீர், அவன் புல்லாங்குழல் ஊதும்போது, குழலின் துளைவழியே சிந்தியநீர், அவன் நடந்துசென்றபோது நடந்த அடிப் பாட்டில் உள்ள புழுதி முதலியன தான்கொண்ட நோயைக் குணமுறுத்தவல்லன என்று தம் தெய்வீகக் கவிமூலம் அப்பிராட்டியார், வடித்தெடுத்த சொற்களால், வண்ண ஓவியம் புனைகின்றார்.

கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சி பழகிக் கிடப்பேனை,
புண்ணிற் புளிப்பெய் தாற்போலப் புறம்நின் றழகு பேசாதே,
பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான் அரையிற் பீதக
வண்ண ஆடை கொண்டுஎன்னை வாட்டம் தணிய வீசீரே.

கண்ணனைக் கருந்தெய்வம் என்கிறார்; கருமை, நிறத்தைக் காட்டுதலேயன்றி வலிமையையும் குறிக்கும் அன்றோ; தன்மேல் தன்காதலன் இரங்காமையால், அந்நாராயணனது இரக்கம் இல்லாமையையும் அச் சொல்லாற் குறிப்பாகக் காட்டுகின்றார். இன்னும் பெண்ணின்

வருத்தம் அறியாத பெருமான் என்று கூறும் தொடர் இங்கே, பிராட்டியார் கருத்தைச் சுருக்கமாகவும் அழகாகவும் புனைந்திருக்கும் திறனைப் பாராட்டாமல் இருக்க இயலுமா? மற்றைய மருந்துகள் எல்லாம், புண்ணின் மேலே புளியை விட்டாற்போல, வேதனையை அதிகரிக்க வல்லன அல்லாமல், தணிக்கவல்லன அல்லன என்றும், அவன் அணிந்த பீதாம்பரத்தால் தம்மைத் தீண்ட, அதனுல் வரும் காற்று தம் வாட்டத்தைத் தீர்க்கும் என்றும் தம் கருத்தை அம்மையார் மிக்க அழகாக வெளிப்படுத்துகின்ருர்.

தம் உடல் வேதனையையும், உளவேதனையையும் போக்க மற்றொரு மருந்தையும் பிராட்டியார் பத்துச் செய்யுள்கள் மூலம், வடித்துக் காட்டுகின்ருர்; அது தான் என்ன? அத்திருமால் வாழும் திருத்தலங்களில் தம்மை அங்கு உய்த்துவிடுதல்தான் மருந்து என்கிருர்:

நாணி இனியோர் கருமம் இல்லை;
நாலய லாரும் அறிந்தொ ழிந்தார்;
பாணியா தென்னை மருந்து செய்து
பண்டுபண் டாக்க உறுதிர் ஆகில்,
மாணி உருவாய் உலக ளந்த
மாயனைக் காணில் தலைம றியும்;
ஆணையால் நீரென்னைக் காக்க வேண்டில்,
ஆய்ப்பாடிக் கேயென்னை உய்த்தி டும்மின்.

என்கிருர்: இவ்வாறே மற்றைய திருமால் திருப்பதிகளையும் குறிப்பிட்டு, அவற்றில் தம்மைக் கூட்டிச் சென்று உய்க்குமாறு அம்மையார் கூறும் திறத்தில், அவர் அன்பின் ஊற்று வெளியாவதைக் காணலாம்.

இன்னும், அம்மையார், தாம் காதலித்த காதலன் ஆகிய ஸ்ரீமந் நாராயணன், தம்மைக் கல்யாணம் செய்ததாகக் கனுவிற் கண்டதைத் தோழிக்கு உணர்த்தும் திறன் மிக்க சுவை பயப்பதாகும்.

பூரண பொற்குடம் வைத்து, தோரணம் நாட்டி, கமுகு முதலிய கட்டிய பந்தலின்கீழ், இந்திரன் முதலிய தேவர்கள் வந்திருந்ததாயும், துர்க்கை மணமாலை சூட்டியதாயும், மதுசூதனனுகிய தம் காதலன், வந்து தம் கையைப்பற்றித் தீவலம் செய்ததாயும், தம் காலை எடுத்து அம்மியில் அவன் வைத்ததாயும் தாம் கனுக் கண்ட வகைகளைப் பத்துப் பாக்களால், விவரித்துக் கூறுகின்ருர்;

அவற்றுள் ஒன்று,

வாய் நல்லார் நல்ல மறைஓதி, மந்திரத்தால்,
பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து,
காய்சின மாகளி றன்னுன் என் கைபற்றித்
தீவலஞ் செய்யக் கனுக்கண்டேன்; தோழீ! நான்.

என்பது.

இவ்வாறே, கூடலிழைத்தல், மேகத்தைத் தூது விடுதல், துகில் கவர்தல் முதலியவற்றை எல்லாம், அழகுற அகப்பொருட் கிளவிகள் மூலம் சாதாரண மனிதரால் நினைக்கவும் இயலாதவகையில், பிராட்டியார் பாடியிருத்தல், அவர் கோதையார், ஆண்டாள் என்ற பெயருடன் அழைக்கப்பட்டாலும், எம்பெருமானுர்பால் எப்பொழுதும் கால்பிடிக்கப் பெரும் பேறு பெற்ற இலக்குமி அம்மையாரே என்பதை எவராலும் மறுத்தல் இயலாது. பக்தியும் காதலே யாதலால், காதலால் தோன்றும் மெய்ப்பாடுகள் பக்தியின்பாலும் தோன்றுதல் பொருத்தமே ஆகும்.

அமலன்; ஆதிபி ரான்அடி யார்க்கென்னை ஆட்படுத்த
விமலன்; விண்ணவர் கோன்விரை யார்பொழில் வேங்கடவன்
நிமலன்; நின்மலன்; நீதிவானவன்; நீள்மதில் அரங்கத்தம் மான்திருக்
கமல பாதம்வந் தென்கண்ணி னுள்ளன வொக்கின்றதே.

— திருப்பாணுழ்வார்

குலங்கள் ஆய ஈரி ரண்டில், ஒன்றி லும்பி றந்திலேன்;
நலங்கள் ஆய நற்க லைகள் நாவி னும்ந வின்றிலேன்;
புலன்கள் ஐந்தும் வென்றி லேன்;பொ றியிலி லேன்; புனிதநின்
இலங்கு பாத மன்றி மற்றொர் பற்றி லேன்;எம் ஈசனே.

— திருமழிசைப்பிரான்

குடதிசை முடியை வைத்துக், குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டி, தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு,
உடலெனக் குருகு மாலோ; என்செய்கேன் உலகத் தீரே.

— தொண்டரடிப்பொடியாழ்வார்

உ

ஓம் நாராயணுய நம:

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

## பரிபாலன சபை

### மகாசபை

திரு. வ. செல்லத்தம்பி, சட்டத்தரணி, J. P. (தலைவர்)

திரு. த. கெங்காதரன் (செயலாளர்)

### தர்மகர்த்தா சபை

திரு. க. கணபதிப்பிள்ளை, J. P. (முகாமைத் தர்மகர்த்தா, பொருளாளர்)

திரு. ப. இராமலிங்கம் (செயலாளர்)

திரு. சி. வே. சுப்பிரமணியம்

திரு. சி. வல்லிபுரம்

திரு. ச. மா. கந்தசாமி

### திருப்பணிச் சபை

(மேல் உள்ளவர்களும், பின் கூறப்படுபவர்களும்)

திரு. ப. நா. கிருஷ்ணகுமார்

திரு. ச. சுப்பையா

திரு. சி. கணபதிப்பிள்ளை

### திருக்குட முழுக்கு மலர்க்குழு

திரு. த. கெங்காதரன் (தலைவரும், ஆசிரியரும்)

திரு. ச. தேவதாசன் (செயலாளர்)

Dr. க. அருளானந்தம்

திரு. இ. க, திருஞானசம்பந்தமூர்த்தி

திரு. ச. சுப்பையா

ஓம் நாராயணாய நம:

# ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய பரிபாலனம்

## மகாசபை அங்கத்தவர்கள்

## திருவிழாக்கள்

### கொடியேற்றம்

i. (1) திரு. குலத்துங்கர் கதிரையாண்டி, தெல்லிப்பழை
(2) ,, முருகேசு கணபதிப்பிள்ளை, துன்னாலை
ii. (3) Dr. தனபாலசிங்கம் உபேந்திரன், துன்னாலை
(4) Dr. மாணிக்கவாசகர் சத்தியநாதன், துன்னாலை
iii. (5) திரு. முத்துக்குமாரு பாலக்கிருஷ்ணன், புலோலி
(6) Dr. R. S. அசீரானந்தம், புலோலி
iv. (7) திருமதி S. N. சிற்றம்பலம், அனுராதபுரம்
(8) திரு. ராமு. வல்லிபுரம் கந்தசாமி, அனுராதபுரம்
v. (9) ,, மாப்பாணர் கந்தசாமி, துன்னாலை
(10) ,, மாப்பாணர் கனகரத்தினம், துன்னாலை
vi. (11) ,, சிற்றம்பலம் வல்லிபுரம், நெல்லியடி
(12) ,, N. நவரத்தினம், நெல்லியடி

### வெளிவீதித் திருவிழா

vii. (13) திரு. பொடியார் வல்லிபுரம், கற்கோவளம்
(14) ,, சிதம்பரப்பிள்ளை வயித்திலிங்கம், கற்கோவளம்

### குருக்கட்டு விநாயகர் தரிசன உற்சவம்

viii. (15) திரு. சரவணமுத்து கனகசிவநாயகம், துன்னாலை
(16) ,, சரவணமுத்து மெய்கண்டதேவர், வரணி

### வெண்ணெய் திருடல்

ix. (17) திரு. சேதுநாதபிள்ளை வேலுப்பிள்ளை, துன்னாலை
(18) ,, தம்பிமுத்து கெங்காதரன், துன்னாலை

### துகில் கவர்தல்

x. (19) திரு. முருகேசு வீரவாகு, துன்னாலை
(20) ,, வேலுப்பிள்ளை அருள்செல்வநாயகம், துன்னாலை

### பாம்பு நிர்த்தனம்

xi. (21) திரு. S. தனபாலசிங்கம், துன்னாலை

### கஞ்ச ஸம்காரம்

xii. (22) திரு. முத்தையா சதானந்தன், கற்கோவளம்
(23) ,, கந்தையா அருளானந்தம், கற்கோவளம்

### வேட்டை

xiii. (24) திரு. சிற்றம்பலம் கார்த்திகேசு, கரவெட்டி
(25) Dr. A. C. முத்துத்தம்பி, கொழும்பு

### சப்பறம்

xiv. (26) திரு. கனகசபாபதி திருஞானசம்பந்தமூர்த்தி, புலோலி
(27) ,, இராமலிங்கம் செல்லத்துரை, புலோலி

### இரதம்

xv. (28) திரு. நா. கிருஷ்ணகுமார், புலோலி
(29) திரு. G. G. பொன்னம்பலம் (யூனியர்), கொழும்பு

### சமுத்திர தீர்த்தம்

xvi. (30) திரு. சரவணமுத்து தேவதாசன், கற்கோவளம்
(31) ,, சதானந்தன் கேசவானந்தன், கற்கோவளம்

### (கேணித் தீர்த்தம்—பட்டுத் தீர்த்தம்)

xvii. (32) திரு. சங்கரப்பிள்ளை சுப்பையா, துன்னாலை
(33) ,, முருகேசு இளையதம்பி, துன்னாலை

### விசேட உற்சவங்கள்

(34) திரு. வெங்கடாசலம் சுப்பிரமணியம், கட்டுகாஸ்கெலியா
(35) ,, R. சிறீசிவாய, பருத்தித்துறை
(36) ,, S. சந்திரசேகரம், தும்பளை
(37) திருமதி சின்னம்மா சுப்பையா, நெல்லியடி
(38) திரு. S. V. சுப்பிரமணியம், வல்வெட்டித்துறை
(39) ,, A. V. கிருஷ்ணபிள்ளை, தொலஸ்பகா
(40) ,, வல்லிபுரம் செல்லையா, கரவெட்டி
(41) ,, S. விக்கினேஸ்வரமூர்த்தி, புலோலி
(42) ,, வ. துரைசிங்கம், புலோலி

### மேலதிக அங்கத்தவர்கள்


(43) திரு. வல்லிபுரம் செல்லத்தம்பி, J. P. U. M., பருத்தித்துறை
(44) ,, S. தர்மலிங்கம், நெல்லியடி
(45) ,, க. கணபதிப்பிள்ளை, J. P., புலோலி
(46) ,, பரமு இராமலிங்கம், வல்லிபுரக் குறிச்சி
(47) ,, சின்னையா கணபதிப்பிள்ளை, கற்கோவளம்
(48) ,, S. நடராசா, பருத்தித்துறை
(49) ,, நா. விஷ்ணுகாந்தன், புலோலி
(50) திருமதி N. நாகரத்தினம், பருத்தித்துறை
(51) திருமதி வ. செல்லத்தம்பி, பருத்தித்துறை
(52) திரு. S. தருமலிங்கம், நெல்லியடி
(53) Dr. A. தங்கரூபன், கற்கோவளம்
(54) திரு. R. இராசநாயகம், கரவெட்டி
(55) ,, P. சின்னத்தம்பி, புலோலி
(56) ,, N. நவரத்தினம், கரவெட்டி
(57) ,, R. பஞ்சாட்சரம், கரவெட்டி
(58) ,, S. கிருஷ்ணபிள்ளை, புலோலி
(59) ,, S. சுப்பிரமணியம், புலோலி
(60) ,, S. சோமசுந்தரம், புலோலி
(61) ,, சி. விக்கினேஸ்வரமூர்த்தி, புலோலி
(62) ,, N. நவரட்ணராஜா, புலோலி
(63) ,, N. K. சபாரத்தினம், புலோலி

*1978ஆம் ஆண்டு* தைமாதம் நடைபெறவிருக்கும் இம்மகாசபைக் கூட்டத்தில், மற்றைய அங்கத்தவர் பெயர்கள் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின், ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படும்.




ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்து
திருக்குடமுழுக்கு (3—7—1977) நிகழ்ச்சி


## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத் தொண்டர்கள்



இடமிருந்து வலம்: திருவாளர்கள்: சி. பசுபதி (காவலாளர்), க. விக்னேஸ்வரமூர்த்தி (மேற்பார்வையாளர்), சி. மு. கந்தவனம் (கணக்குக் காப்பாளர்), மு. காளித்தம்பி (கணக்குக் காப்பாளர்), சி. சிவலிங்கம் (பல பணியாள்)



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய கர்ப்பக் கிருகம்
மேற்கு ஓவியத் தோற்றம்
வேணுகானக் கண்ணன்



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானக் குருக்களும்
அவரது உதவியாளர்களும்

உ

# ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில்

## திருக் குடமுழுக்கு (3-7-1977)

### மண்டலாபிஷேக உபயகாரர்

3-7-77 1. திரு. நா. நவரத்தினராசா, புலோலி தெற்கு
4-7-77 2. ,, மு. ஞானநந்தன், வல்வெட்டித்துறை
3. ,, தா. வே. இராஜகுலேந்திரன், புலோலி தெற்கு
4. ,, க. கணேசன், புலோலி மேற்கு
5. ,, M. கணேசன், துன்னாலை தெற்கு
6. திருமதி ரவி சொர்ணலட்சுமி, 34, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
7. திரு. சின்னையா கிருஷ்ணர், சங்குவத்தை, புலோலி கிழக்கு
8. ,, சி. நடராசா, விஷ்ணு பாட்ஸ் கடை, பருத்தித்துறை
9. ,, ச. விசாகரட்ணம், வல்வெட்டித்துறை
10. ,, ச. தங்கராசா, சந்தை ஒழுங்கை, உடுப்பிட்டி
11. ,, வீ. கிட்டிணபிள்ளை, கரவெட்டி
12. ,, ச. நாராயணசர்மா, கந்தசாமி கோவிலடி, மயிலிட்டி
13. ,, இ. இராசேந்திரம், வல்வெட்டித்துறை
14. ,, மு. இராசையா, வியாபாரிமூலை
15. ,, மு. வேலும்மயிலும், சட்டத்தரணி, பருத்தித்துறை
16. ,, K. சிவராஜசிங்கம், 1ஆம் கட்டை, பருத்தித்துறை
17. ,, இ. பொன்னையா. செட்டித்தெரு, பருத்தித்துறை
18. ,, எஸ். ஜெயரட்ணம், துன்னாலை தெற்கு
19. ,, ஐ. ரட்ணம், கரவெட்டி கிழக்கு
20. திருமதி R. இராமநாதன், சரசாலை, சாவகச்சேரி
21. திரு. பொ. இராசதுரை, Rajan Cycle Works, பருத்தித்துறை
22. ,, சு. தர்மலிங்கம், சுப்பையா அன் சன்ஸ், நெல்லியடி
23. ,, சி. விஷ்ணுசுந்தரம், வல்வெட்டித்துறை
24. ,, அ. வே. அம்பலவாணன், வரணி
25. ,, து. நவரெத்தினராசா, வல்வெட்டித்துறை
26. ,, S. ஏகாம்பரநாதன், நெடியகாடு, வல்வெட்டித்துறை
27. ,, மா. இரத்தினசோதி, வி. மு. வீதி, பருத்தித்துறை
28. ,, A. S. தனபாலசிங்கம், துன்னாலை தெற்கு
29. ,, சி. வேலாயுதம், அல்வாய் தெற்கு, மாலிசந்தி
30. ,, சி. வே. சிவசுப்பிரமணியம், வல்வெட்டித்துறை
31. ,, மு. சிவசிதம்பரம், தேசியப்பேரவை உறுப்பினர், நல்லூர்
32. ,, வி. சபாரட்ணம், மல்லாகம்
33. ,, க. பரம்சோதி, ராணி பேக்கரி, மந்திகை
34. ,, நீ. முத்துக்குமாரு, முருகையன் கோவிலடி, துன்னாலை
35. ,, ப. இராமலிங்கம், வல்லிபுரக் குறிச்சி
36. ,, க. சபாரட்ணம், க. கணபதிப்பிள்ளை, புலோலி தெற்கு
37. ,, N. இராசரத்தினம், புலோலி தெற்கு
38. Dr. எஸ். கதிர்காமத்தம்பி, புலோலி
39. திரு. பொ. சின்னையா, வியாபாரிமூலை
40. ,, க. முத்து, செட்டிதோட்டம்
41. திருமதி சிற்றம்பலம், அனுராதபுரம்
42. திரு. ந. குமாரவேலு, மீசாலை வடக்கு
43. ,, எஸ். சிவலோகன், B. E. R. Cooray & Sons, கொழும்பு
44. ,, V. சிவசோதி, நெல்லியடி
16-8-77 45. ,, பொ. வல்லிபுரம், வல்வெட்டித்துறை

உ

ஓம் நமோ நாராயணாய

# திருக்குடமுழுக்குக் கிரியாகால நிகழ்ச்சிகள்

**பிங்கள வருடம் ஆனி மாதம்**

**13ஆம்** நாள் **(27–06–77) திங்கட்கிழமை** — *உதயம் 6 மணி:* அனுஞ்ஞை, கணபதிஹோமம், தனபூஜை. *மாலை 6 மணி:* யந்திர பூஜை.

**14ஆம் நாள் (28–06–77) செவ்வாய்க்கிழமை** — *காலை 9 மணி:* யந்திர பூஜை, *மாலை 6 மணி:* கிராம சாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்ந ஹோமம்.

**15ஆம்** நாள் **(29–6–77) புதன்கிழமை** — *காலை 9 மணி:* யந்திரபூஜை, *மாலை 6 மணி:* திசாஹோமம்.

**16ஆம் நாள் (30–06–77) வியாழக்கிழமை** — *காலை 9 மணி:* நவக்கிரகமஹம், *மாலை 6 மணி:* வாஸ்துசாந்தி.

**17ஆம் நாள் (1–07–77) வெள்ளிக்கிழமை** — *காலை 9 மணி:* யந்திரபூஜை, ஹோமம். *மாலை 5 மணி:* மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ஆசார்ய ரட்சாபந்தனம், பிரசன்ன பூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷணம், யாஹ ஆரப்பம், நவாக்கினி விபஜனம், தீபாராதனை, ஸ்தோத்திர பாராயணம், வேத பாராயணம், திருமுறை ஓதல், *பின்னிரவு 4 மணி:* ஸ்தூபி ஸ்தாபனம், கோவாசம், தீபஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம்.

**18ஆம்** நாள் **(02–07–77) சனிக்கிழமை** — *காலை 9 மணி:* விசேஷ சந்தி, பூதசுத்தி, அந்தர் யாஹம், யாஹ பூஜை, ஹோமம், தீபாராதனை, திருமறை, திருமுறை ஓதல், *மாலை 6 மணி:* யாஹ பூஜை, பிம்ப சுத்தி, கௌதுகபந்தனம், விசேஷ திரவியஹோமம், நியாசாதிகள், ஸ்பர்சாகுதி, தீபாராதனை, திருமறை, திருமுறை ஓதல், ஆசார்ய வர்ணம்.

**19ஆம்** நாள் **(03–07–77) ஞாயிற்றுக்கிழமை** — *காலை 6 மணி:* யாகபூஜை, மஹா பூர்ணுகுதி, தீபாராதனை, ஸ்தூபிகள் அபிஷேகம். *காலை 9 — 10 மணி:* மஹாகும்பாபிஷேகம், தசதர்சனம், மஹா அபிஷேகம், விசேஷ பூசை, திருவருட்பிரசாதம் வழங்கல், ஆசாரிய சம்பாவனை.

**மஹா கும்பாபிஷேகத்தில் பங்குகொள்ளும் குருமணிகள்:**

**பிரதிஷ்டா குரு: பிரதிஷ்டா சிரோமணி சாமி. விஸ்வநாதக்குருக்கள், நவாலி**
*(பிரதம குரு, வண்ணை பெருமாள் தேவஸ்தானம்)*

**ஸ்ரீ வல்லிபுர தேவஸ்தான பிரதம குரு: பிரம்மஸ்ரீ ச. க. இராமச்சந்திரக்குரு**
*(வல்லிபுராலயம்)*

பிரம்மஸ்ரீ ச. சாமிக்குருக்கள், துன்னாலை
பிரம்மஸ்ரீ நா. சோமசுந்தரக்குருக்கள், சுன்னாகம்
பிரம்மஸ்ரீ ச. தேவராஜாக்குருக்கள், அல்வாய்
பிரம்மஸ்ரீ வே. நடராசாக்குருக்கள், ஆவரங்கால்
பிரம்மஸ்ரீ வை. கனகசபாபதிக்குருக்கள், அச்சுவேலி
பிரம்மஸ்ரீ வி. வேங்கடசுப்பிரமணியக்குருக்கள், நவாலி
பிரம்மஸ்ரீ சோ. சதாசிவக்குருக்கள், நீர்வேலி
பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணியக்குருக்கள், மாத்தனை

பிரம்மஸ்ரீ சி. முத்துக்குமாரசாமிக்குருக்கள், உரும்பிராய்
பிரம்மஸ்ரீ இ. சபேசக்குருக்கள், பருத்தித்துறை
பிரம்மஸ்ரீ ஐ. இராமலிங்கக்குருக்கள், பருத்தித்துறை
பிரம்மஸ்ரீ நா. சுப்பிரமணியக்குருக்கள், ஆவரங்கால்
பிரம்மஸ்ரீ மு. ஸ்கந்தசபேசக்குருக்கள், அல்வாய்
பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியக்குருக்கள், நவாலி
பிரம்மஸ்ரீ சி. வைத்தீஸ்வரக்குருக்கள், ஆழியவளை

*சர்வபோதகாசாரியார்:*
பிரம்மஸ்ரீ சுவாமி இராஜேந்திரக்குருக்கள், நீர்வேலி

*சாதகாசிரியர்கள்:*
பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணியசாஸ்திரிகள், நல்லூர்
பிரம்மஸ்ரீ தா. மகாதேவசர்மா, இணுவில்

*தேவஸ்தான உதவிப் பூசகர்கள்:*
பிரம்மஸ்ரீ ச. க. சுதர்சனசர்மா, துன்னாலை
பிரம்மஸ்ரீ ச. க. புருஷோத்தமசர்மா, துன்னாலை

*உபந்நியாசம்:*
பேராசிரியர் பிரம்மஸ்ரீ க. கைலாசநாதக்குருக்கள், யாழ். வளாகம்
பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

*சிற்பவேலை ஸ்தபதிகள்:*
1. "அமராவதி ஸ்தபதி" உலகு ஆசாரியார், இராமநாதபுரம் தேவஸ்தான சிற்பி
2. "கோகுல ஸ்தபதி" இராசு தங்கத்துரை, உடுப்பிட்டி, ஸ்ரீலங்கா

*விசேஷ மங்கள இசை:*
1. அளவையூர் N. K. பத்மநாதன் குழுவினர்
2. சாவகச்சேரி K. M. பஞ்சாபிகேசன் குழுவினர்
3. இணுவில் M. கல்யாணசுந்தரம் குழுவினர்

ஸ்ரீராம ஜெயம்

# விரிஞ்சனோ விடைவல்லானோ

கற்கோவளம், திரு.ச. கேசவானந்தன் அவர்கள்

ஐந்திலே ஒன்று பெற்றான்
ஐந்திலே ஒன்றைத் தாவி
ஐந்திலே ஒன்றா றாக
ஆரியற் காக ஏகி
ஐந்திலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண் டயலா ரூரில்
ஐந்திலே ஒன்று வைத்தான்;
அவன்நம்மை அளித்துக் காப்பான்.

பக்த அனுமான் கிட்கிந்தைக்கு வந்த இராம இலக்குமணரைக் கண்டு அன்பால் என்புருக இவர்கின்ற உள்ளத்தனானான். "முன் எப்போதோ என்னுடன் அன்புக்குரியராயிருந்து பிரிந்து சென்றவர் போலும்" என்றெண்ணி அவர்கள் பக்தி மீதூரப் பெறுகின்றான்.

'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாள்; ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்'

என்ற வள்ளுவ இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தான். பிராமண வடிவுடன் உருமாறி வந்த அனுமானைக் கூர்ந்து நோக்கிய இராமனும், அவன் அறிவை எண்ணி, விரிஞ்சனோ என்றும், ஆற்றலை நோக்கி விடைவல்லானோ என்றும் வியக்கிறான். அனுமன் உருத்திராமிசமாய்ப் பிறந்தவன் என்பதும், இனிமேல் பிரம பதத்தை அடையப் போகிறான் என்பதும் நர அவதார னாகிய நாராயணனாலன்றி வேறு யாரால் அறியமுடியும்.

இராமன் அனுமன் யார் என்று உணர்ந்ததுபோல அனுமனும் வருபவர் திருமாலின் அவதாரம் என்பதை உள்ளுணர்வால் புரிந்துகொண்டான். முன்பு வாயு பகவான், "நீ திருமாலுக் கடிமைசெய்" என்று கூறிய போது, அனுமான் தன்தந்தையாகிய வாயுவிடம் "நான் அவரை எப்படி அறிவது" என்று கேட்டான். அதற்கு விடையாக வாயுதேவன் "எவரைக் கண்டபோது காரணமில்லாமல் உனக்கு அவர்மீது அன்பு மேலிடுகிறதோ, அவரையே திருமாலென்றறி" என்று கூறியிருந்தான். தந்தையின் கூற்றுப்படி மைந்தன் மாருதி இராமனையே திருமால் என்பதை அறிந்துகொண்டான்.

மானுட வடிவுடன் வந்த மாருதியை ஸ்ரீராமன் "நீ யாவன்?" என்று வினவியபோது "கஞ்சனம் ஒத்த கண்ணனே, நான் காற்றின் வேந்தற்கு அஞ்சனை வயிற்றில் வந்தேன். நாமமும் அனுமான்" எனச் சொல்லின் செல்வனாகிய அனுமான் அடக்கமாக, அழகாகத் தன்னை அறிமுகம் செய்கின்றான். மேன்மக்கள், கற்றோர் கல்லாதோரை யாக்கை நலத்தாலன்றி வாக்கு நலத்தாலேயே அறிந்துகொள்வர். மரவுரி போர்த்த மாதவச் செல்வனாகிய காகுத்தனும் அனுமனின் சிறப்பை அவன் வாக்கு வன்மையைக் கொண்டே அளந்து அறிந்தான். அன்புத் தம்பி இலக்குவனுக்கு அனுமன் ஆற்றலை இராமன் எடுத்தியம்பும்போது "இந்த மானுட வடிவினனிலும் செவ்வியோர் எங்கும் இல்லை. ஆற்றல், நிறை, கல்வி, அமைதி, அறிவு இவற்றிலே தனக்கு நிகராக எவருமில்லாதவன். அவன் கல்லாத கலையில்லை. உலகிற்கே ஆணி போன்றவன். இவனுடைய சேனையர் பெருமை பற்றிப் பின்பு நீ அறிந்துகொள்வாய்" என்று அனுமனின் உண்மைச் சிறப்பை நன்றாகச் சீர்தூக்கிக் கூறியுள்ளான்.

இராம காவியத்தில் கிட்கிந்தா காண்டத்திலிருந்தே அனுமனின் மேலான ஆற்றல் விவரிக்கப்பட்டுள்ளது. நீதியின் உறைவிடமான இராமபிரானைச் சுக்கிரீவனுடன் நட்பாகச் செய்தமைக்கும், சுக்கிரீவன் பகைமுடிக்க வாலியின் மார்பில் இராமபாணம் துளைக்கச்செய்தமைக்கும் காரணம் அனுமானின் சொல்லாற்றலே. ஆவி துறக்க இருந்த ஜானகியை அசோகவனத்திலே காப்பாற்றி ஆறுதல் கூறினான். யுத்தகளத்திலே வியத்தகும் மாபெரும் வீரசாதனைகளைப் புரிந்தான்.

ஏழை சோபனம்; ஏந்திழை சோபனம்;
வாழி சோபனம்; மங்கல சோபனம்;
ஆழி யான அரக்கனை ஆரியச்
சூழி யானை துகைத்தது சோபனம்,

என்று வெற்றிக்களிப்புடன் வாழ்த்திவந்து சீதா தேவியைச் சிறைமீட்ட செம்மல் அனுமன் என்றே கூறத் தகும். அனுமானின் சேவகத்தில் கருணைமீதூரப்பெற்ற கற்பின் செல்வி "நின்னை என் தலையினால் தொழவே தகும் தன்மையோய்" என்று கூறி வாழ்த்தினாளென்றால் இதனினும் விஞ்சிய சிறப்பும் உண்டோ!

சில ஆலயங்களில் சண்டேசுரர் எப்படிப் பக்தர்களுக்கு அருள்புரிகின்றாரோ, அப்படி விஷ்ணு ஆலயங்களில் அனுமார் பக்தர்களுக்கு அவர்கள் வணங்கிய பலனை அருளுகின்றார்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அனுமாரின் அழகிய விமானத்தில் பஞ்சமுக அனுமாரின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இதிலே வடக்குத் திசையிலிருந்து முதலாவதாக இருக்கும் முகத்தைக் கருடமுகம் என்பர். இது வழிபடுவோரைக் கொடிய விஷங்களிலிருந்து காப்பாற்றும். இரண்டாவது ஹயக்கிரீவர் முகம். அஞ்ஞானத்தைநீக்கி மெய்ஞ்ஞானம்

அருளுவதும், அரக்கரை வதைத்துப் பிரமனுக்கு வேதங்களை மீட்டுக் கொடுத்ததும் ஆகும். நடுவில் உள்ளது ஆஞ்சநேயர் முகம். அடியார்களுடைய எதிரிகளை நிர்மூலமாக்கித் தீங்குவராமல் காப்பாற்றுவது. ஐந்தாவது பாதாளம் சென்ற பூமியை மீட்ட ஸ்ரீவராக முகம்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வாரை வழிபடும் பக்தர்கள் ஆலய வணக்கத்தின் பின்பு ஆஞ்சனேய ஆழ்வாரின் திருமாளிகையின் முன் அமர்ந்து, அவரின் திருநாமங்களை நூற்றெட்டுமுறை ஜெபித்து, வணக்கப்பலனைத் தரும்படி அன்புடன் மன்றாடி வேண்டினால், நல்ல எண்ணத்துடன் நாம் கேட்கும் வரங்களை யெல்லாம் வேண்டியாங்கு அருள்புரிவார் ஆஞ்சனேயர்.

மாயவனே ரகுராம அருகேவா வாவா;
வஞ்சனைகள் பறந்தோட நெஞ்சில் வாவா;
காயாம்பூ நிறமுடனே கனவில் வாவா;
கஞ்சனைமுன் வென்றவனே கருத்தில் வாவா;
நாயகனே என்நாவில் இருக்க வாவா;
நாள்தோறும் உன்பாதம் துதிக்க வாவா;
ஆயர்குலத் துதித்தெழுந்தே கருடன் மீதில்
அன்புடனே ஏறிவந்து அருள்செய் வாயே.



குகன் ஸ்ருடியோ—பருத்தித்துறை

# சுப்ரமணியன்ஸ்

## பேபி மார்க்

**ஸ்பெஷல் பானங்களையே அருந்துங்கள்**

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

*தயாரிப்பாளர் :*

## சுப்ரமணியன் சோடா கம்பெனி

வல்வெட்டித்துறை

போன் : 97 VVT
தந்தி : சோடா

---

# ராஜு ஸ்ரோர்ஸ்

**உங்களுக்குத் தேவையான சகலவிதமான சாமான்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள**

**இன்றே விஜயம் செய்யுங்கள் !**

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உத்தரவாதமான
சிறந்த இடம் !

67 & 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன் : 372
தந்தி : 'ராஜு'

உ

ஸ்ரீமதே நாராயணய நம:

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.

—நாச்சியார் திருமொழி


மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு
நீங்கள் கொடுக்கும் அமோக ஆதரவு
நாட்டின் அறப்பணிகளுக்கு ஆதரவாகும்.

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

'திரு ஆலவாய்'

காங்கேசன்துறை வீதி :: யாழ்ப்பாணம்

தந்தி: 'மில்க்வைற்' தொலைபேசி: 7233



அச்சு; திருமகள் அழுத்தகம், சுன்னுகம்—527/8-77